
# Way of the Cross

# திருச்சிலுவைப் பாதை





*Lareina Joseph*




*Nishitha Moses*

*Arul Berchmans Arul Johanna*






*Louis Parimanan Jennifer*

# The Way of the Cross

COMPILED BY

## St. Mary of the Angels

TAMIL COMMUNITY SINGAPORE



www.iraivarthai.org/STATIONS.pdf

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | திருச்சிலுவைப் பாதை-1 | 4 |
| 2. | திருச்சிலுவைப் பாதை-2 | 36 |
| 3. | திருச்சிலுவைப் பாதை-3 | 54 |
| 4. | திருச்சிலுவைப் பாதை-4 | 89 |
| 5. | திருச்சிலுவைப் பாதை-5 | 123 |
| 6. | திருச்சிலுவைப் பாதை-6 | 155 |
| 7. | திருச்சிலுவைப் பாதை-7 | 187 |
| 8. | சிலுவைப் பாதை பாடல்கள் | 217 |



இயேசு தாமே
நம்முடைய பலவீனங்களை
ஏற்றுக்கொண்டு நம்முடைய
நோய்களை குணமாக்குகிறார்.
அவர் தழும்புகளாலே
குணமாகிறோம்.

# சிலுவைப்பாதை 1

# திருச்சிலுவைப் பாதை-1

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!

**அனைவரும்: ஆமென்.**

## தொடக்கச் செபம்

அளவில்லாத அன்பும், கரை கடந்த கருணையும் கொண்ட இறைவா! உம் ஒரே மகனை எமக்காகப் பலியாக்கினீர். அவர் நடந்து சென்ற கல்வாரிப் பாதையின் காட்சிகளை தியானிக்க இருக்கின்ற எங்கள் அனைவரையும் ஆசிர்வதியும். அன்றாட வேலைகளின் அவசரத்திலும், களைப்பிலும் உம்மைத் தேடி வந்திருக்கிறோம்.

இயேசு அனுபவித்த ஒவ்வொரு துயரமும், வேதனையும் எனக்காக என்பதை உணரச்செய்யும். அவருடைய பாடுகளோடும் மரணத்தோடும், என் கஷ்ட நஷ்டங்களை உமக்கு ஒப்புக் கொடுக்கின்றேன். நானே விரும்பி, முயற்சி எடுத்து உமது சிலுவைப் பயணத்தில் தொடரும் எனக்கு, வலிமையைத் தாரும். தன்னையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு எங்களுக்கு நிகராக வாழ்ந்த இயேசு, எங்களைப் போன்றே துன்புற்றார். அவரது உடல் வேதனைகளும், உள்ள வேதனைகளும், எங்களின் ஈடேற்றத்திற்கே என்பதை நாங்கள் உணர்ந்துக்கொண்டு திருந்தி வாழ அருள்தாரும்.

உமது மகனின் சிலுவை பாதை தரும் நம்பிக்கையும், பலமும் எங்களின் வாழ்க்கை சூழல்களில் எங்களுக்கு உதவுவதாக, மனப்பாரங்களும், கவலைகளும், அச்சுறுத்தல்களும் அவநம்பிக்கையும் நிறைந்த எங்கள் வாழ்க்கையில் அவரின் பாடுகள் திடம் தருவதாக.




நாங்களும் எங்கள் குடும்பமும், எங்களைச் சார்ந்த அனைவரும், உம் திருச்சிலுவை தரும் வெற்றியை அனுபவிக்க, அருள் பெறுவோமாக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக, உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

பாடல்: பழிகளை சுமத்தி பரிகசித்தார், உயிர்
பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!

# முதல் நிலை

## இயேசு அநியாயத் தீர்வையிடப் படுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:




நான் உண்மையை உலகிற்கு காட்ட வந்தேன். நானே உண்மையும் உயிரும், வழியும் ஒளியும், உண்மைக்கு சாட்சியாக வந்த என்னை, இந்த உலகம் தீர்ப்பிடுகின்றது.

இவ்வுலகத்தின் செயல்களுக்கு தீர்ப்புக் கூற வேண்டியவன் நானிருக்க, இவ்வுலகம் எனக்கே தீர்ப்பிடுகின்றது. அதுவும் அநியாயத் தீர்ப்பு.

இங்கு குழுமி இருப்போரே ஒவ்வொரு முறையும் உங்கள் அயலாரையும், அறியாதோரையும், அப்பாவிகளையும், குற்றம் சாட்டும் போதும், குறை கூறித் தூற்றும் போதும், பழிசுமத்தி பரிகசிக்கும் போதும் என்னையே குற்றம் சாட்டுகிறீர்கள், காறி உமிழ்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

# செபம்:

அநியாயமாக குற்றம் சுமத்தப்பட்ட இயேசுவே! நீர் நல்லவர் என்றும், குற்றமற்றவர் என்று தெரிந்தும், பழிவாங்கும் உணர்வோடும், பகைமை மனத்தோடும் செயல்பட்ட நெஞ்சங்களைப் போன்று நானும் செயல்படுகின்றேன்.

நானும் குறையுள்ளவன் என்பதை மறந்தும், மறைத்தும் வாழ்ந்திருக்கின்றேன். பிறரில் நல்லதைக் காணும் நல்ல உள்ளம் எனக்கு தாரும். என் பழிச் சொற்களால் அவமானத்துக்கு ஆளான அனைவரிடமும் மன்னிப்புக் கேட்கிறேன்.

என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளும். ஆமென்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **தாளாச் சிலுவை சுமக்க வைத்தார், உம்மை**
**மாளாத் துயரால் துடிக்க வைத்தார்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# இரண்டாம் நிலை

## இயேசுவின் தோள்மீது பாரச்சிலுவையைச் சுமத்துகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:




உண்மையை உலகிற்கு காட்டவும், நீதியை நிலை நாட்டவும், அன்பை விதைக்கவும், நன்மையை நாடச் செய்யவும் வந்த எனக்கு, அன்று நீங்கள் தந்த பரிசு பாரச்சிலுவை. இன்றும் இறையடியார்களுக்கும், சமூகத் தொண்டர்களுக்கும், நீதிமான்களுக்கும், நற்பணி ஆற்றுவோருக்கும், இடையூறாகவும், அவர்களுக்கு அவப்பெயரை கொணர்பவர்களாகவும் இருக்கின்றீர்களே! பிறரின் துன்பத்தில் இன்பம் காணும் கல் மனம் கொண்டவர்களாய் வாழ்வது ஏன்? எண்ணிப் பாருங்கள்.

# செபம்:

சிலுவையை தோளில் சுமந்த இயேசுவே! பிறரின் சுமைகளை, மனக் குறைகளை தாங்கியவர் நீர். ஆனால் உம்மீது பாரச்சிலுவை சுமத்தப்படுகின்றது.

பிறரின் துன்பம் தாளாது அழுபவர் நீர். கஷ்டப்படுவோரின் கண்ணீரைத் துடைத்தவர் நீர். உன் கண்களிலோ முள் முடியின் காயங்களால் வழியும் இரத்தம்.

இயேசுவே! பிறரை துன்புறுத்தாமல் பிறரின் துன்பத்தில் பங்கெடுக்கும் நல்ல பிறவியாக என்னை மாற்றும். ஆமென்.

---

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

---

பாடல்: **விழுந்தீர் சிலுவை பளுவோடு, மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# மூன்றாம் நிலை

## இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:




உன் குற்றங்களும், பாவங்களும் எத்தனை கொடூரமும், வேதனையும் என்பதை, நீ என்றாவது சிந்தித்தது உண்டா?

இதோ நான் தரையில் சிலுவையின் பாரம் தாங்காமல் ஒரு புழுவைப்போல் விழுந்து கிடக்கின்றேனே, என்னை இந்தக் கோலத்திற்கு உட்படுத்தியது உன் பாவங்கள்.

நான் எழுந்து நடக்க வேண்டும் என்றால், உன் உதவி எனக்குத் தேவை. உன் பாவங்களை விட்டு எழுந்திரு. அதற்கான உறுதி கொள். நீ உன் பாவங்களைக் குறைத்து, திருந்தி நடந்தால், என் பாரம் குறையும்.

# செபம்:

**முதல் முறை விழுந்த இயேசுவே! சிலுவையின் பாரம் உம்மை கீழே தள்ளியதா? அல்லது என் பாவங்கள் உம்மை கீழே தள்ளியதா?**

**என் பாவச் சுமைதான் உம்மைத் தள்ளி இருக்க வேண்டும். நான் பாவங்களை விட்டு விலகினால் உமது பாரம் குறையும்.**

**என் பலவீனத்தால், ஆசைகளால், அகங்காரத்தால் நான் செய்யும் தவறுகளை உணர்ந்து, திருந்தி வாழ உதவியருளும். ஆமென்.**

---

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

---

பாடல்:

**தாங்கிட வொண்ணாத் துயருற்றே, உம்மைத்<br>தாங்கிய அன்னை துயருற்றாள்.<br>எனக்காக இறைவா எனக்காக!<br>இடர்பட வந்தீர் எனக்காக!**

# நான்காம் நிலை

## இயேசு தன் தாயைச் சந்திக்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

காணாமல் போன என்னைத் தேடி யெருசலேம் தேவாலயம் வந்த என் தாய், இதோ கல்வாரிப் பாதையிலும் தேடி வந்து, என் துயரில் பங்கு கொள்கிறாள்.




உலகை படைத்து உலகை மீட்க வந்த எனக்கு உலகம் தரும் அவமானங்களை அவள் நேரில் பார்க்கிறாள். என் தாயின் வேதனைகள் உனக்கு புரிகிறதா?

பெற்ற பிள்ளைகளால் அவமானப்படுத்தப்படும் தாய்மார்கள் நிறைய பேர்.

சோறுட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்த தாயின் வயிற்றுக்கு, அவளின் முதிர்ந்த வயதில், உணவுகூட கொடுக்காமல் வேதனையுறச் செய்யும் பிள்ளைகளில் நீயும் ஒருவனா? தாயின் சந்திப்பு எனக்கு வலிமை தருகிறது. உன்னை பெற்றெடுத்த பெற்றோரை எண்ணிப்பார்.

## செபம்:

**அன்புத் தாயை சந்திக்கும் இயேசுவே! உன்னை சந்திக்கும் உன் தாய், உன் வேதனைகளைக் கண்டு கலங்கி நிற்கிறாள். மனித பலவீனங்கள, உனக்கு கொடுக்கும் அவமானங்களைக் கண்டு கதறுகிறாள்.**

**என் மனிதாபிமானமற்ற செயல்களால் பிறரின் நலத்திற்கு கேடு விளைவித்திருக்கின்றேன். என்னைப் பெற்றெடுத்து ஆளாக்கிய பெற்றோருக்கு எதிராக நடந்தும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்ய மறுத்தும் வாழ்ந்திருக்கிறேன். உன் தாயின் துன்பத்திற்கு நானும் காரணம்.**

**பிறரின் நலனிலும், என் பெற்றோரின் நலனிலும் ஆர்வம் கொள்ள எனக்கு நல்ல மனதைத் தாரும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **மறுத்திட முடியா நிலையாலே, சீமோன்**
**வருத்தினார் தன்னை உம்மோடு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஐந்தாம் நிலை

## இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

என்னைச் சுற்றி இந்த சிலுவைப் பவனியை வேடிக்கை பார்க்க, பரிதாபப்பட்ட எவ்வளவோ பேர் இருந்தும் என்ன பயன்?




என்னால் குணப்படுத்தப்பட்டவர்கள், என்னால் பசியாற உணவுண்டவர்கள், என்னால் ஆறுதலும் ஆசீரும் பெற்றவர்கள் எவ்வளவோ பேர் இருந்தும், ஓர் அந்நியன், என் சிலுவையைச் சுமக்க கட்டாயப் படுத்தப் படுகின்றான்.

உனக்கு மனம் இல்லையா? என்னுடன் உறவாடவும், என்னை உட்கொள்ளவும், என்னில் நீ வாழவும், எவ்வளவோ வழி இருந்தும், என்னை விட்டு அகல்கின்றாய்.

பல சமயங்களில் பிற மதத்தவர் காட்டும் பற்றுதலும் நன்றியும் கூட நீ காட்டுவதில்லையே. உனக்காவே வாழ்ந்த எனக்காக, ஏன் நீ வாழக் கூடாது?

## செபம்:

**இயேசுவே! உமக்கு உதவிச் செய்ய சீமோன் மட்டும் முன் வருகிறார், அதுவும் கட்டாயத்தினால்.**

**என் அசட்டுத்தனத்தால், கோழைத்தனத்தால், சோம்பலால், நல்ல பல செயல்களைச் செய்ய வாய்ப்பு இருந்தும், தவறி இருக்கிறேன்.**

**மற்றவர்களுக்கு நீர் காட்டிய கனிவும், இரக்கமும் அளவிட முடியாதது. உமது சீடனாகிய எனக்கும் அதே அன்பைக் கற்றுத் தாரும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **நிலையாய் பதிந்தது உம் வதனம், அன்பின்
விலையாய் மாதின் சிறுதுணியில்.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஆறாம் நிலை

## வெரோணிக்காள் இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறாள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:




வெரோணிக்காவை போன்று, என் முன் அமர்ந்து என் பாடுகளைத் தியானிக்கும் நீயும், என்னால் படைக்கப்பட்ட மனிதப் பிறவி தானே? அவளுக்கு இருந்த மனத்திடமும், ஆழ்ந்த அன்பும், உனக்கு இல்லையே!

வெரோணிக்காவை என்றோ ஓரிரு முறை சந்தித்திருப்பேன். உன்னை நான் தினமும் திருப்பலியில் சந்திக்கிறேன். 24 மணி நேரமும் உனக்காக காத்திருக்கிறேன். இன்னும் உனக்கு என் மீது விசுவாசமும், அன்பும் ஏற்படாதது ஏன்?

**எனக்காக நீ செய்யத் துணிந்தவை என்ன? வெளி** வேடங்களால் உன் அன்பைக் காட்டாதே. உண்மையான கிறிஸ்துவ வாழ்வு வாழமுயற்சி செய். உதட்டளவில் என்னை போற்றாதே. உன் வாழ்க்கையால் என்னைப் போற்று.

## செபம்:

ஆண்டவரே! வெரோணிக்காவிடம் இருந்த துணிவு **எனக்கும் வேண்டும். அவரது அன்பாலும், துணிவாலும் அவள் செய்த செயலினை பாராட்டி உம் திருமுகத்தையே அந்த துணியில் பதியச் செய்தீர்.**

உன் அன்பை அனுபவிக்கக் கிடைத்த வாய்ப்புகளை தவற விட்டிருக்கிறேன். உம்மை வழிபாடுகளிலும், திருப்பலியிலும் சந்திக்கத் தவறி இருக்கிறேன்.

**என் விசுவாசம் உறுதியானதாகவும், வாழ்வுக்கு நம்பிக்கையும் துணிவும் தரக்கூடியதாகவும் மாற்றும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததனால், அந்தோ**
**சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறை விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:**




கல்வாரி நெருங்க நெருங்க என் சக்தியெல்லாம் குறைகிறது. நான் வலுவிழந்து இதோ புழுதியில் கிடக்கின்றேன். எனக்கு ஆறுதல் கூறவோ, எனக்கு உதவுவோ யாரும் இல்லை.

இவ்வுலகமே என்னுடையதாக இருக்க, இதோ நான் உனக்காக அநாதை போன்று விழுந்து கிடக்கின்றேன்.

எனக்காக நீ உண்மையில் மனம் இரங்கினால், உன்னிடம் உள்ள தீய பழக்கங்களை விட்டுவிட்டு என்னைப் பின் செல்,

# செபம்:

இரண்டாம் முறையும் இயேசுவே, நீர் விழுந்துவிட்டீர். பாரச் சிலுவையைவிட உலகினரின் பாவச் சுமை அதிகமாக உம்மை வதைக்கிறது.

உம் இறை இயல்பை இழந்து, மனித இயல்புக்கு உம்மை தாழ்த்தினீர். உமது பெருந்தன்மையை உணராத நான் உம் பாடுகளுக்கு காரணமானேன்.

உமது உடலை புழுதியில் புரட்டிய எனக்கு மன்னிப்பைக் கொடுத்து, எழுந்து நடக்கும் உம்மோடு கூட்டிச் செல்லும். உமது பாதையில் நடக்க எனக்கு வலுவைத் தாரும். ஆமென்.

---

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

---

பாடல்:
விழிநீர் பெருக்கிய மகளிருக்கு, அன்பு
மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்.
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# எட்டாம் நிலை

## இயேசு தன்னைப் பின் தொடரும் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

உன் பாவங்களுக்காகத் தான் நான் இக்கொடிய துன்பங்களை ஏற்றிருக்கிறேன். நீ யெருசலேம் பெண்களைப் போன்று எனக்காக அழுது பயனில்லை. உன் பாவங்களுக்காகவும், மற்றவர்களின் பாவங்களுக்காகவும் மனம் வருந்தி அழு. அது தான் உன்னைக் காக்கும்.




உன் திருந்திய வாழ்வுதான் எனக்கு தேவை. உன் போலிக் கண்ணீரும் இரக்கமும் எதற்கும் உதவாது. தாழ்மையான மனதுடன், நீ செய்த குற்றங்களை நினைத்து உன்னையே நீ யாரென்று அறிந்து கொண்டு,

அதற்காக அழுது மன்னிப்புக் கேள். இறையருளைப் பெற்றுக் கொள்.

## செபம்:

**யெருசலேம் பெண்களைச் சந்தித்த இயேசுவே! என்னையும் சந்திக்க வாரும். என்னில் உள்ள நன்மைகளையும், தீமைகளையும் உணர்ந்து நல்லதை வளர்க்கும் மனப் பக்குவமும், தீமையை விலக்கும் தைரியமும் எனக்கு வேண்டும்.**

**'எனக்காக அழ வேண்டாம், உங்களுக்காக அழுங்கள்' என்றீரே! என்னையே நான் நியாயப் படுத்துவதைவிட என் உண்மையான நிலையை ஏற்றுக் கொள்வதே எனக்கு நன்மை பயக்கும் என்பதை உணரச் செய்யும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர், கால்**
**ஊன்றி நடந்திடும் மெய் நொந்தீர்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:




மீண்டும் மீண்டும் விழுந்து கிடக்கும் இக்கோரக் காட்சியைக் காணும் உன் கண்கள் இரக்கமற்றவையா? உன் உள்ளம் பாறையாகி விட்டதா? விழுந்த என்னைத் தூக்கி விட உனக்கு மனம் இல்லையா?

நீ ஆயிரம் முறை பாவத்தில் விழுந்தாலும் உன்னை தூக்கிவிட்டு மன்னித்து அனுப்ப, நான் தயாராய் இருக்கிறேன்.

உன் சுமைதாங்கி நான். உன் அயலான் உனக்குச் செய்யும் சிறு குற்றத்தைக் கூட மன்னிக்கவும், மறக்கவும் உனக்கு மனம் இல்லையே, ஏன்?

# செபம்:

மூன்று முறை விழுந்த இயேசுவே! “நானும் உன்னை தீர்ப்பிடேன், இனி பாவம் செய்யாதே” என்று சொல்லி பாவம் செய்தவளுக்கு, உம் கருணை உள்ளத்தை காட்டிய கருணாகரன் நீர்.

பிறரின் சுமைகளைத் தாங்கி சுகத்தைக் கொடுக்க வேண்டியவன் நான். தவறுகின்றவர்களின் மீது இரக்கம் கொண்டு அவர்களை புரிந்து கொண்டு நல்வழி காட்டவேண்டியவன் நான்.

இப்படி செய்யும் போது மீண்டும் மீண்டும் பாரம் தாங்காமல் கீழே விழும் உம் பாரச் சுமையை இறக்கி வைக்கும் பணியில், உமக்கு உதவுகிறவனாய் நான் மாற முடியும் என்பதை உணரச் செய்யும். ஆமென்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்: உடைகள் களைந்திட உம்மைத் தந்தீர், இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:




ஆடைகள் களையப்பட்டு அரைமனிதனாக எலும்புகளை எண்ணக் கூடிய அளவுக்கு, என் உருவம் மாறி நிற்கின்றேன். என்னை இந்தக் கோலத்தில் காணும் நீ என்ன நினைக்கின்றாய்? ஒரு சிறு துன்பம் வந்தாலும் முணு முணுக்கிறாய். எனக்கு எதிராகப் பேசுகிறாய். பொறுமை என்ற அணிகலனை அணிந்து கொள்.

துன்பத்தில் இன்பம் காண முயற்சி செய். என் உலக வாழ்வையே உனக்காக அளித்தவன் நான். உனக்காகவே நான் இருக்கிறேன் என்பதை மறவாதே அஞ்சாதே. குருவிகள் பலவற்றிலும் மேலானவன் நீ. உன்னை நான் காப்பேன்.

## செபம்:

**ஆடைகளை இழந்த இயேசுவே! எங்கள் மீட்புக்காக உம்மையே இழந்தீர். இன்று சமூக அமைப்புகளில் காணப்படுகின்ற பாரபட்சமான போக்கு, அநீதி, அலட்சியம், அதிகாரம், ஆணவம், சீர் குலைந்த நிர்வாகம், சுய நலமான சுரண்டல்கள், இவை மறைய உம்மையே நீர் இழந்தீர்.**

**மனிதர்கள் ஒவ்வொருவரும் உம்மைப் பின் பற்றி நீதிக்கும் அன்புக்கும் சமத்துவ சமூக அமைப்புக்கும் அடிகோல உதவியருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **பொங்கிய உதிரம் வடிந்திடவே, உம்மைத்**
**தொங்கிடச் செய்தார் சிலுவையிலே.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**


# பதினொன்றாம் நிலை

## இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

முதல்வர்:




மூவுலகின் தேவன் என்னை, மூன்று ஆணிகளுக்குள் அடக்கி விடத் துணிந்த இந்த உலகின் பரிதாப நிலையை, நான் எவ்வாறு விவரிப்பேன்? நீ செய்யும் பாவம் என்னும் ஆணிகளால் தினமும் என்னைச் சிலுவையில் அறைகிறாய் என்பதை மறவாதே.

பாவத்தால், நீ சிலுவையில் அறைந்த கைகள் தான், உன்னை அணைக்கத் துடித்த கரங்கள்.

நீ ஆணிகளுக்குள் முடக்கி விட்ட கால்கள் தான் உன்னைத் தேடி அலைந்த கால்கள். இதோ குத்தி திறக்கப்பட்ட இதயம் தான் உன்னை நேசித்த இதயம். உன் புண்ணிய வாழ்வால் இந்த ஆணிகளைப் பிடுங்க முயற்சி செய்.

## செபம்:

**இயேசுவே! உம்மை மூன்று ஆணிகளில் அடக்கி விட்டார்கள். மனிதர்கள் நாங்கள் எங்கள் பாவங்களை அறைவதற்கு பதிலாக புண்ணியன் உம்மை அறைந்து விட்டோம். ஆணி கொண்ட உமது காயங்களை அன்புடன் முத்தி செய்கின்றேன்.**

**உமது காயங்களுக்குள் என்னை மறைத்தருளும். திறந்த உமது இதயத்தில் எனக்கொரு இடம் கொடும். உள்ளக் காயங்களை ஆற்றி அமைதியை எனக்குத் தாரும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **இன்னுயிர் அகன்றது உமைவிட்டு, பூமி**
**இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பனிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் மரிக்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

எனது **33** வருட கால வாழ்வில் என்னைப் போற்றியவர்களும் உண்டு, தூற்றியவர்களும் உண்டு.




இதோ என்னுடைய இந்த இறுதி நேரத்திலும் என்னால் பயனடைந்தவர்களைவிட என்னை வெறுத்தவர்களே அதிகம் கூடி இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் மன்னிக்கிறேன்.

**எனக்காக என்று, நான் எதையும் வைத்துக் கொள்ளவில்லை. என் உயிரையும் உனக்காக கொடுத்து விட்டேன். நீ மட்டும் உன் அயலானை மன்னிக்கவோ, அவனுக்கு உதவவோ மறுக்கிறாயே. பின்னர் எப்படி எனக்குத் தகுதி உள்ளவனாக முடியும்? என் சாவால் உனக்கு வாழ்வு கிடைத்தது. என் உயிரால் உன் உயிர் புத்துயிர் பெறுகிறது.**

## செபம்:

**சிலுவையில் மாித்த இயேசுவே! மரணத் தருவாயில் கூட மன்னிப்பின் அவசியத்தை உணர்த்தினீர். இன்று உலகிலும் குடும்பங்களிலும் அமைதி நிலவ, மன்னிப்பின் அவசியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ளச் செய்யும்.**

**பகையால், வெறுப்பும் அழிவுமே மிஞ்சுகிறது. உமது மரணம் கொண்டு வந்த மீட்பை முழுமையாக நானும் பெற வேண்டும். நான் வாழ்வு பெற, நீர் உமது வாழ்வை இழந்தீர். நான் இழந்துள்ள அமைதியான வாழ்வை மீண்டும் பெற்றுக் கொள்ள உதவி புரியும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **துயருற்றுத் துடித்தார் உளம்நொந்து அன்னை
உயிரற்ற உடலினை மடிசுமந்து,
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதிமூன்றாம் நிலை

## இயேசுவைத் தன் தாயின் மடியில் கிடத்துகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:




என் தாயைப் போல் உள்ளம் கொண்டவர்களை, எங்கேனும் நீ கண்டதுண்டா? தன் ஒரே மகனை இழந்தும், இறைவனின் திருவுளம் அது என்று பணிந்து வாழ்கிறாள். அவளின் துயரம் எத்தகையது என்பதை உன்னால் உணர முடிகிறதா?

அப்படியானால் என் அகோர மரணத்திற்கு காரணமான உன் பாவங்களை விட்டு விலகு. என் தாயைப் போல் என் விருப்பத்தை ஏற்று, அதன்படி வாழ முயற்சி எடு.

உன் சுய நலம், பொறாமை, பேராசை, வஞ்சகம் இவற்றை விட்டு விலகு. அன்பு என்ற அணிகலனை அணிந்து கொள்.

## செபம்:

**வியாகுல மாமரியே! துன்பமும் துயரமும் உனது வாழ்வைச் சந்தித்தபோதெல்லாம் இறைவனின் விருப்பம் அதுவெனக் கண்டாய். மனித வாழ்க்கையில் எங்களின் துயரங்களையும் வேதனைகளையும் புரிந்து கொண்டவளாக நீ இருக்கிறாய்.**

**வேதனை, துன்பம் வந்த போதெல்லாம் அம்மா உன் துணை நாடி வரும் என்னை காத்தருள்வாயாக. ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு, நீர்**
**அடங்கிய கல்லறை உமதன்று,**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதினான்காம் நிலை

## இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:**




நான் அடக்கம் பண்ணப்படுவது, வேறொருவரின் கல்லறையில். எனக்கென்று ஒரு கல்லறை கூட இல்லை. நீயோ உன் உதவி தேடி வந்தவர்களிடமும் முகம் சுளிக்கிறாய், ஏசுகிறாய்.

என்னை அடக்கம் பண்ணிவிட்டதாக எண்ணிக் கொண்டார்கள். நான் மூன்றாம் நாள் உயிர்த்து எழுவேன். நீயும் என்னோடு உன் பாவத்திலிருந்து உயிர்த்தெழ வேண்டும். நீ உண்மையான கிறிஸ்துவன் என்று காட்ட அது ஒன்றுதான் சாட்சியாக முடியும்.

உன் பாவங்களையும் என்னோடு சேர்த்து கல்லறையில் வைத்து மூடி, புது மனிதனாக, புனிதனாக வாழ வேண்டும் என்பதே என் ஆசை.

# செபம்:

கல்லறையில் துயில் கொள்ளும் இயேசுவே! உண்மைக்கும், அன்புக்கும், நீதிக்கும் உயிர் கொடுத்த உம்மை அடக்கி வைக்க பூமிக்கு வலுவில்லை. உண்மை, உயிர் பெறும். அன்பிற்கு அழிவில்லை. நன்மைக்கு முடிவு இல்லை.

இயேசுவே! நீரே எங்களது நம்பிக்கை. துயரமும் தோல்வியும் எங்களைச் சந்தித்தாலும், உமது உதவியால் வெற்றி கொள்ள முடியும் என்று நம்புகிறோம். கவலையும் கஷ்டமும் எங்களை வாட்டினாலும், உமது நம்பிக்கையே எங்கள் பலம். உம்மில் உள்ள நம்பிக்கையை அதிகமாக்கும். எங்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும். ஆமென்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

# இறுதிச் செபம்

## செபிப்போமாக!

ஆண்டவரே! சிமியோன் தீர்க்கத்தரிசனம் சொன்னபடியே, தேவரீர் பாடுபட்டபொழுது, மகிமைப் பிரதாபமுள்ள கன்னித்தாயின் மகா மதுரமான ஆத்துமம், வியாகுல வாளால் ஊடுருவப்பட்டதே!

அவள் வியாகுலத்தையும் வேதனையையும் வணங்குகிற நாங்கள், சிலுவையை சுமுத்திரையாய் நேசித்து சகல புனிதர்களின் மகிமையுள்ள பேறுகளினாலும், மன்றாட்டுக்களினாலும் உமது திருப்பாடுகளின் பலனை அடையும்படி தயைபுரிந்தருளும், ஆமென்.

முதல்வர்: திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

**ஒரு பரலோக மந்திரம், அருள் நிறைந்த மந்திரம் மற்றும் திருத்துவ செபம்.**

முதல்வர்: இயேசு கிறிஸ்துநாதருடைய திருவாக்குத்-தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரமா-யிருக்கத்தக்கதாக, புனித வியாகுல மாதாவே!

**அனைவரும்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

# சிலுவைப் பாதை 2

## Church Of St. Mary Of The Angels

புனித சம்மனசுகளின்
இராக்கினி ஆலயம்



"உண்மையில்
திருச்சட்டத்தின் படி
ஏறக்குறைய எல்லாமே
இரத்தத்தினால்
தூய்மையாக்கப்படுகின்றன.
இரத்தம் சிந்தாமல் இன்றி
பாவமன்னிப்பு இல்லை .
எபிரேயர் 9:22



# திருச்சிலுவைப் பாதை-2

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!

**அனைவரும்: ஆமென்.**

## தொடக்கச் செபம்

இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திரு மகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவு கூறுகின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின் சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம்.


இறுதிவரை இயேசுவின் உண்மைச் சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். **ஆமென்.**

---

பாடல்: **எங்கே சுமந்து போறீர்? சிலுவையை நீர்**
**எங்கே சுமந்து போறீர்**
**பொங்கும் பகைவராலே, அங்கம் நடு நடுங்க**
**எங்கே போறீர்.**

**மனித பாவத்தாலே**
**மரணத் தீர்வை பெற்று**
**தூய செம்மறி போலே,**
**துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்**

---




# முதல் நிலை

## இயேசு அநியாயத் தீர்வையிடப் படுகிறார்


**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** எங்கள் அன்பு இயேசுவே! யாதொரு குற்றமோ பாவமோ அறியாத உம்மைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். வாழ்வும், வழியும் உண்மையுமான உம்மையே நாங்கள் பின்பற்றவும் தவறான தீர்ப்பு வழங்காதிருக்கவும் எங்களுக்கு அருள் தாரும். **ஆமென்.**

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

**பாடல்:** **பாரச் சிலுவை மரம்,**
**பாவத்தின் சுமை தாங்கி**
**பாசத்துடன் அணைத்து,**
**பாரத்துடன் நடந்து எங்கே போறீர்**




# இரண்டாம் நிலை

## இயேசுவின் தோள்மீது பாரச்சிலுவையைச் சுமத்துகிறார்கள்


**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! உம்மேல் சுமத்தப்பட்ட சிலுவை எங்கள் பாவங்களின் விளைவு என்பதை உணர்கின்றோம். யார்மீதும் அநியாயமாகப் பழி சுமத்தாமல் இருக்கவும் எங்கள் வாழ்வில் வருகின்ற துன்பங்கள் என்னும் சிலுவையைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளவும் எங்களுக்கு அருள் தாரும். **ஆமென்.**

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்: **கல்வாரி மலை நாடி,**
**தள்ளாடித் தரை வீழ்ந்து**
**எல்லோரின் பாவங்களைத்**
**தனிமையாய் சுமந்து எங்கே போறீர்**




# மூன்றாம் நிலை

## இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.


**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! சிலுவையின் பாரத்தால் நீர் முகம் குப்புறக் கீழே விழுந்தீர். துன்ப துயரங்களின் சுமையால் வாடுகின்ற மக்களைக் கனிவோடு கண்ணோக்கிட எங்களுக்கு அருள்வீராக. **ஆமென்.**

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

**பாடல்:**

**மாமரி கன்னி அன்னை,**
**மகனின் கோலங்கண்டு**
**மாதுயருடன் வாடி,**
**மனம் நொந்து வருந்த எங்கே போறீர்**




# நான்காம் நிலை

## இயேசு தன் தாயைச் சந்திக்கிறார்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.


**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! உம்மை ஈன்றெடுத்த அன்னை மரியா உம் துன்பங்களைக் கண்டு மனமுடைந்தார். அந்த அன்னையின் அரவணைப்பில் நாங்கள் என்றும் மகிழ்வு கொள்ள அருள்வீராக. **ஆமென்.**

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்:

**உதிரம் ஆறாய் சிந்தி,**
**உள்ளம் உரமிழந்து**
**சீரேன் சீமோன் துணையை,**
**ஏற்று வழி நடந்து எங்கே போறீர்**




# ஐந்தாம் நிலை

## இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! கடின சிலுவையை நீர் சுமந்து செல்ல சீமோன் என்பவர் துணை செய்தார். எங்கள் சகோதரர் சகோதரிகளின் துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு அவர்களின் சிலுவைப் பாரத்தைக் குறைத்திட எங்களுக்குத் துணை செய்வீராக. **ஆமென்.**

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

**பாடல்:**

**கர்த்தரே உம் வதனம்,**
**இரத்தக் கறையால் மங்கி**
**உத்தமி வெரோணிக்காள்,**
**வெண் துகிலால் துடைத்தும் எங்கே போறீர்**




# ஆறாம் நிலை

## வெரோணிக்காள் இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறாள்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! வியர்வையாலும் இரத்தத்தாலும் கறைபட்ட உம் திருமுகத்தை ஒரு பெண்மணி அன்போடு துடைத்து உமக்கு ஆறுதலளித்தார். எங்கள் வீட்டிலும் நாட்டிலும் உலகிலும் கவலையால் வாடும் அனைவரின் துன்பங்களையும் துடைத்திட எங்களுக்கு அருள்வீராக. **ஆமென்.**


முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த,**
**பாரச் சுமையினாலே**
**மீண்டும் தரையில் வீழ்ந்தும்**
**வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்**




## ஏழாம் நிலை

### இயேசு இரண்டாம் முறை விழுகிறார்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! சிலுவையின் பாரம் உம் தோள்களை அழுத்தியதால், நீர் மீண்டும் ஒரு முறை கீழே விழுந்தீர். ஆனால் மன உறுதியோடு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தீர். நாங்களும் ஏமாற்றத்தையும் தோல்வியையும் கண்டு துவழ்ந்து விடாமல் துணிந்து எழுந்து, உம்மேல் நம்பிக்கை வைத்து முன்னேறிச் சென்றிட அருள்வீராக. **ஆமென்.**


முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **புண்ணிய ஸ்தீரிகள் பலர்,**
**புலம்பி அழும் வேளை**
**ஆறுதல் கூறி நீரும்,**
**நேசக்கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்**




# எட்டாம் நிலை

## இயேசு தன்னைப் பின் தொடரும் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.


**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! உமக்கு நேர்ந்த சொல்லற்கரிய துன்பத்தையும் பாராமல் நீர் பிறருக்கு ஆறுதல் கூறினீர். தன்னலம் பாராது பிறர் நலம் நோக்கவும் துன்புறுவோருக்கு ஆறுதல் கூறவும் எங்களுக்கு நல்மனதைத் தந்து, தூய வழியில் நாங்கள் நடந்திட அருள்வீராக. **ஆமென்.**

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்:

**சிலுவைப் பாரத்தாலே,**
**மாமரி ஏகமைந்தன்**
**மூன்றாம் முறை தரையில்,**
**முகம் படிந்தெழுந்து எங்கே போறீர்**




# ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை விழுகிறார்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! மீண்டும் மீண்டும் கீழே விழுந்ததால் உம் உடல் எல்லாம் இரத்தமயமாயிற்று. எங்கள் பாவங்களுக்காக நீர் நொறுக்கப்பட்டீர். எங்கள் சிந்தனை,சொல் செயல் அனைத்திலும் நாங்கள் தூய்மையோடு வாழவும் பாவத்தை வெறுத்து உம் அன்பில் எந்நாளும் வளரவும் எங்களுக்கு அருள்வீராக. **ஆமென்.**


முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **நீடாடை கழற்றவே,**
**கோடாகோடிக் காயங்கள்**
**இரத்தம் ஆறாய் பெருகி,**
**வேதனையால் வருந்தி எங்கே போறீர்**




# பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! உம் உடைகளைக் களைந்தவர்கள் உம்மை அவமானத்திற்கு உள்ளாக்கினார்கள். வறுமை, அரசியல் அடக்கு முறை, அதிகாரப்பாணி போன்ற அவலங்களால் மனித உரிமையும் மாண்பும் உரியப்பட்டு நிர்வாணமாக்கப்படுகின்ற எம் சகோதரர் சகோதரியரை நினைத்துப் பார்க்கின்றோம். உம் உடன்பிறப்புகளாகிய அவர்களது மாண்பினைக் காத்துப் போற்றிட எங்களுக்கு அருள்வீராக. **ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.
**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.
**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **நீட்டிய கால் கரத்தில்,**
**நீண்ட இரும்பாணிகள்**
**நிஷ்ட யூதர் அறைந்தும்,**
**நேசத்திலே வெந்து பலியாகினீர்**




# பதினொன்றாம் நிலை

## இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.


**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! சிலுவையில் நீர் அறையப்பட்ட போது உம்மை ஆணிகளால் துளைத்தார்கள். உம் திருக்காயங்களால் நீர் எங்களை குணமாக்கினீர். நீர் சிந்திய இரத்தத்தால் நாங்கள் கழுவப்பட்டுள்ளோம். அவமானச் சின்னமாகிய சிலுவையை நீர் மீட்பின் கருவியாக்கியது போல நாங்களும் எங்கள் துன்ப துயரங்களை உம் சிலுவையோடு இணைத்து உம் மீட்பின் பலன்களை இடைவிடாது துய்த்து அனுபவித்திட எங்களுக்கு அருள்வீராக. **ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.
**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.
**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **சிலுவைப் பீடமேறி,**
**மும்மணி நேரம் தொங்கி**
**வான் பிதாவை வேண்டி,**
**ஆருயிர் ஒப்படைத்து பலியாகினீர்**




# பனிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் மரிக்கிறார்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! வானத்திற்கும் பூமிக்கும் இடையே நீர் சிலுவையில் தொங்கினீர். மனிதரைக் கடவுளின் பிள்ளைகளாக்கிட நீ எம்மில் ஒருவராக மாறினீர். சிலுவையில் தொங்கிய போது நீர் உரைத்த சொற்களை நினைத்துப் பார்க்கின்றோம். "தாகமாயிருக்கிறது" என்று கூறிய இயேசுவே, எங்கள் ஆன்ம தாகத்தை வளர்த்தருளும். 'எல்லாம் நிறைவேறிற்று' என்று கூறி உயிர்நீத்த இயேசுவே, நாங்கள் கடவுளின் திருவுளத்தை இறுதிவரை நிலைத்து நின்று நிறைவேற்றிட அருள்தாரும். **ஆமென்.**

---


முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.
**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.
**அனைவரும்: ஆமென்.**

---

**பாடல்:**

**மரி தாய் மடிமீதில்,**
**மரித்த மகன் தாங்கி**
**ஏழு சோக வாட்களால்,**
**ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்**




# பதிமூன்றாம் நிலை

## இயேசுவைத் தன் தாயின் மடியில் கிடத்துகிறார்கள்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! உயிரற்ற உம் சடலத்தை உம் அன்னை மரியா தம் மடியில் கிடத்தி அழுது புலம்பினார். அவரை எங்களுக்கு அன்னையாக அளித்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். எங்கள் மேல் கொண்ட எல்லையற்ற அன்பினால் நீர் எங்களுக்காக உயிர்துறந்தீர்.உமது சாவு எங்களுக்கு வாழ்வு வழங்கிற்று. நாங்களும் உமது புகழ்ச்சிக்காகவும் பிறருடைய ஈடேற்றத்திற்காகவும் அயராது உழைத்திட அருள்வீராக. **ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.
**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.
**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **கர்த்தரின் உடல்தனை,**
**கல்லறைக்குள் அடக்க**
**உத்தானம் ஜீவனுமாய்,**
**உயிருடன் எழுந்து எப்போ வருவீர்**




# பதினான்காம் நிலை

## இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.


**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! உமது உடல் கல்லறையில் வைக்கப்பட்டாலும் மண்ணோடு மண்ணாகி அழிந்து போகவில்லை. நாங்களும் திருமுழுக்கின் வழியாக உம்மோடு கல்லறையில் அடக்கப்பட்டோம். பாவத்தில் இறந்தோம். ஆனால் நீர் புத்துயிர் பெற்று எழுந்தது போல எங்களுக்கும் ஆன்மீக வாழ்வு அளித்து, புதிய மனிதர்களாக வாழ நீர் வழிசெய்தீர். யாம் பெற்ற வாழ்வு இவ்வையகம் பெற்று மகிழ்ந்திட அருள்வீராக. **ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.
**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.
**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **கல்லறைக்குள் அடங்கா,**
**இறைவனின் மைந்தனே**
**உத்தானம் ஜீவனுமாய்,**
**உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.**




# பதினைந்தாம் நிலை

## இயேசு சாவை வென்று உயிர்த்தெழுகின்றார்

**முதல்வர் -** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:** அன்பு இயேசுவே! கடவுளின் ஆட்சியை இவ்வுலகில் கொணர நீர் வந்தீர். உமக்கு எதிராகச் செயல்பட்டு உமக்குக் கொலைத்தண்டனை விதித்தபோதிலும், நீர் சாவின்மீது வெற்றிகொண்டீர். எங்களைப் பாவத்தின் அடிமைத்-தளையிலிருந்து விடுவித்து எங்களுக்குப் புதுவாழ்வு தந்தீர். உயிர்த்தெழுந்த ஆண்டவராகத் தந்தையின் வலம் அமர்ந்து எங்கள் அரசராக ஆட்சி செய்கின்றீர்.

உலகம் முடிவு வரை எந்நாளும் நீர் எங்களுடன் இருப்பதாக வாக்குறுதி அளித்துள்ளீர். உமது அன்புச் சீடராக நாங்கள் வாழவும் நீர் சென்ற வழியில் நடக்கவும் எங்களுக்கு அருள்வீராக. **ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.
**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

# இறுதிச் செபம்

---

## செபிப்போமாக!

**ஆண்டவரே! சிமியோன் தீர்க்கத்தரிசனம் சொன்னபடியே, தேவரீர் பாடுபட்டபொழுது, மகிமைப் பிரதாபமுள்ள கன்னித்தாயின் மகா மதுரமான ஆத்துமம், வியாகுல வாளால் ஊடுருவப்பட்டதே!**

**அவள் வியாகுலத்தையும் வேதனையையும் வணங்குகிற நாங்கள், சிலுவையை சுமுத்திரையாய் நேசித்து சகல புனிதர்களின் மகிமையுள்ள பேறுகளினாலும், மன்றாட்டுக்களினாலும் உமது திருப்பாடுகளின் பலனை அடையும்படி தயைபுரிந்தருளும், ஆமென்.**

---

முதல்வர்: திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

**ஒரு பரலோக மந்திரம், அருள் நிறைந்த மந்திரம் மற்றும் திருத்துவ செபம்.**

முதல்வர்: இயேசு கிறிஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக, புனித வியாகுல மாதாவே!

**அனைவரும்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

---

# திருச்சிலுவைப் பாதை 3



# திருச்சிலுவைப் பாதை-3

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!

**அனைவரும்: ஆமென்.**

## தொடக்கச் செபம்

**“சிலுவை”** - இது சாபத்துக்குரியவர்களைச் சுமக்கும் மரம். சாவுக்குத் தீர்ப்பிட்டவர்களைச் சுமக்கும் மரம். முதல் ஆதாம் இன்பவனத்தில் சாபத்தையும் சாவையும் விளைவிக்கும் மரத்தைத் தொட்டாரே, அதே மரம் தான் இந்த சிலுவை மரம். சாபமும், சாவும் மனிதருக்குள்ளே சென்று வாழ்வை இழக்கச் செய்தது. இனி மனிதர் சாபத்தையும் சாவையும் கடந்து வாழ்வுக்கு வர இயலாது என்பதை அறிந்த இறைவன் வாழ்வாகிய தம் மகனை உலகிற்கு அனுப்பி மனிதருக்குப் புது வாழ்வு கொடுக்கிறார்.

தந்தையின் திருவுளப்படி வாழ்வாகிய இயேசு சாபமும் சாவும் அடங்கிய சிலுவையை ஏற்று கல்வாரியின் உச்சியில் பலியாகிறார். மனிதன் எதிர்கொள்ள வேண்டிய சாபமும், சாவும், இயேசுவுக்குள் சென்று மறைந்து விடுகிறது.

இந்த நிகழ்வைத்தான் நாம் சிலுவைப்பாதை வழியாகக் கொண்டாடுகின்றோம்.

ஆவியின் கனிகளான நம்பிக்கை, அன்பு, கனிவு, தன்னடக்கம், நன்னயம், பரிவு, பொறுமை, அமைதி, மகிழ்ச்சி ஆகிய ஒன்பது பண்புகளில் இயேசு நிலைத்திருந்து இந்தச் சிலுவைப்பாதையை எதிர்கொள்கிறார். சிலுவையில் அவர் ஆணிகளால் அடித்துத் தொங்கவிடப்பட்டதால் சிலுவையில் பாவம் நீங்கிப் புனிதம் புகுகின்றது.

**“சிலுவை”** - பாவத்தைப் போக்கும் மீட்பின் சின்னம், அடிமைத்தனத்தை முறிக்கும் விடுதலை சின்னம், அன்பைப் பிரதிபலிக்கும் அன்பின் சின்னம், நம்மை நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லும் வழிகாட்டி, நம்மை மறு கிறிஸ்துவாய் மாற்றிய பேரொளி, கிறிஸ்தவத்தின் நாடித்துடிப்பு, தந்தை மகன் தூய ஆவியின் சங்கமம்.




எனவே, "சிலுவை ஒரு சுமையல்ல". அது நம் வாழ்க்கை. அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ கிறிஸ்துவாய் நாம் மாற இன்று இயேசு சிலுவைப்பாதை வழியாக நமக்குக் கற்றுத்தரப் போகும் சிலுவைப் பாடுகளை தியானிக்கக் கல்வாரியை நோக்கி நம் கண்களை உயர்த்துவோம். வாருங்கள் கல்வாரிக்கு!

பாடல்:

**பழிகளை சுமத்தி பரிகசித்தார், உயிர்**
**பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# முதல் நிலை

## பிலாத்து இயேசுவுக்கு அநீதத் தீர்ப்பை வழங்கி அவரை சிலுவைச் சாவுக்குக் கையளிக்கின்றான்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

இயேசு அநீதத்தீர்ப்பை ஏன் ஏற்றுக்கொண்டார்? அதிலிருந்து அவர் நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்ன? சிந்திப்போம்....

இயேசு தந்தையின் அன்பில் நம்பிக்கை கொண்டு பிறருக்கு அநீதம் இழைத்த யூத சங்கத்தினரையும், அவர்களின் அறிவு சார்ந்த நடைமுறைத் திட்டங்களையும் எதிர்த்தார். அதனால் அவருக்கு நேர்ந்த அநீதத்தை ஏற்றுக்கொண்டார். நாமும் அவ்வாறே செய்வோம்.

ஏனெனில் மீட்படையவும் இறையரசு வளரவும் இதுவே வழி. அநீதத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டதில் அர்த்தம் உள்ளது. ஆதாயம் உள்ளது என்கிறார் இயேசு. நம் அறிவுக்கு இது புரியாது. புரிந்து கொள்ளக்கூடியவை மட்டுமே உண்மை என நினைக்காதே! "நான் தான் உண்மை" என்கிறார் இயேசு.

இந்த உண்மையை நிலைநாட்ட தந்தையின் விருப்பப்படி சிலுவை மரத்தில் நம்பிக்கை வைக்கின்றார். எனவே சிலுவை நம்பிக்கையின் சின்னமாய் விளங்குகிறது

# செபம்:




**நம்பிக்கை நிறைந்த இயேசுவே! எங்களைப் பற்றிக் கூறப்படும் அநீதத் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளும் போது எங்களுக்கு வெளியே காணப்படும் அநீதங்களை நீர் அகற்றி அழிக்க முடியும் என்பதை உணர்த்துகிறீர்.**

**இந்த இறை உண்மையில் நாங்கள் நம்பிக்கை கொண்டு வாழவும் சிலுவையின் பண்பாகிய நம்பிக்கையில் உறுதியோடு வளரவும் அருள் தாரும். ஆமென்!**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **தாளாச் சிலுவை சுமக்க வைத்தார், உம்மை**
**மாளாத் துயரால் துடிக்க வைத்தார்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# இரண்டாம் நிலை

## இயேசுவின் மீது பாரமான சிலுவையைச் சுமத்துகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

கொடுமையான குற்றவாளிகள் மீது சுமத்தப்படுகின்ற சிலுவையை இயேசு ஏன் ஏற்றுக்கொண்டார்? சிந்திப்போம்....

உலகில் மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் பகைமைகளைச் சுமத்தி வேதனைப்படுத்துகிறார்கள். ஆனால் இயேசுவோ நம்மை வேதனைகளிலிருந்தும் பாவச்சுமைகளிலிருந்தும் விடுவிக்க சிலுவை வடிவில் அவர்மேல் சுமத்தப்பட்ட நம் பாவச்சுமையை வேதனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார்.

மனிதர் மட்டில் தந்தையாம் இறைவனின் அன்பும், இயேசுவின் அன்பும், தூய ஆவியின் அன்பும் இங்கு சிலுவையில் சங்கமமாகிறது. மனுக்குலத்தின் ஜென்மப்பாவம் இங்கு இயேசுவால் சிலுவையில் சுமந்து தீர்க்கப்படுகிறது. அப்பேற்பட்ட புனிதமான அன்பையும் தியாகத்தையும் சுமந்ததினால் சிலுவை அன்பின் சின்னமாகத் திகழ்கிறது.

## செபம்:




எங்களை சிலுவை
சுமக்கும் சீடத்துவ
வாழ்விற்கு அழைத்த
இயேசுவே!
சிலுவையின்
பண்பான அன்பின்
மகிமையை நாங்கள்
உணரவும் அதன்
வலிமையைக்
கொண்டு எங்கள்
மீது சுமத்தப்படும்
சுமைகளை
உம்மைப்போல் ஏற்று
அன்புறவை
நிலைநாட்டவும்
அருள்தாரும். ஆமென்!

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **விழுந்தீர் சிலுவை பளுவோடு, மீண்டும்**
**எழுந்தீர் துயர்களின் நினைவோடு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# மூன்றாம் நிலை

## இயேசு மனம், உடல் சோர்ந்து தள்ளாடி முதல்முறையாக தரையில் முகம் குப்புற விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

பாவத்தில், மனநோயில், உடல்நோயில் விழுந்து கிடந்த மனிதரையெல்லாம் தூக்கி நிறுத்திய இயேசு ஏன் தரையில் விழுகிறார்? இதிலிருந்து அவர் நமக்குச் சொல்லும் செய்தி என்ன? சிந்திப்போம்...

நிற்பவன்தான் வீழ்ந்தவனைத் தூக்கி நிறுத்த முடியும் என்பது உலக நியதி. மனிதர்களாகிய நம்மைப் பாவப் படுகுழியிலிருந்தும், உடல், மன நோயிலிருந்தும், சாத்தானின் ஆதிக்கத்திலிருந்தும் நிரந்தரமாகத் தூக்கி நிறுத்த நம்மீது கொண்ட கனிவினால் தன் வீழ்தலை இயேசு ஏற்றுக்கொள்கிறார்.

இது தந்தையின் திட்டம் என்பதால் தனது வீழ்தல் சரியானதாகத்தான் இருக்கும் என நினைத்து தன் கல்வாரிப் பயணத்தைக் கனிவோடு தொடர்கின்றார். இதனால் சிலுவை கனிவின் பண்பைக் கொண்டதாக மாறுகின்றது.

# செபம்:




**கனிவு நிறைந்த இயேசுவே!**
**விழுதலை**
**ஏற்றுக்கொண்டு**
**என்னை விழாதவாறு**
**தாங்கியவரே!**
**எங்களைப் பிறர்**
**தடுக்கி**
**விழச்செய்யும்**
**போதும், துன்ப**
**அவமானங்களில்**
**விழும்போதும்,**
**உம்மைப்போல**
**விழுதலை**
**ஏற்றுக்கொண்டு பிறர்**
**விழாதிருக்கச் செய்ய,**
**சிலுவையின் பண்பாகிய**
**கனிவில் வளர அருள்தாரும்.**
**ஆமென்!**

---

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

---

பாடல்: **தாங்கிட வொண்ணாத் துயருற்றே, உம்மைத்**
**தாங்கிய அன்னை துயருற்றாள்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# நான்காம் நிலை

## இயேசு தன் தாய் மரியாளைச் சந்திக்கின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

தான் சுமந்து பெற்ற மகனின் அகோரமுகம், அவலநிலை, தன் தாயின் உடைந்த உள்ளம், அவளது மனக்குமுறல். இந்தத் தியாக உள்ளங்களின் சந்திப்பு பற்றி இயேசு என்ன சொல்கிறார்? சிந்திப்போம்...

என் தாயின் சந்திப்பு உணர்ச்சி வசப்பட்டதல்ல. எனது இந்த நிலைக்குக் காரணமானவர்களை அவர் தூற்றவில்லை. அவர் என் சீடராய் இருந்ததால், என் துன்பத்தில் தன்னடக்கத்தோடு பங்கேற்க வந்திருப்பதாகச் சொல்லவே வந்தார். தன்னைப்போல அநேக சீடர்கள் எனது பாடுகளில் பங்கேற்பதாகவும் சொன்ன செய்திதான் எனக்கு ஆறுதல் என நமக்குச் சொல்கிறார்.

தன்னடக்கம் மிகுந்த தாய்மரியின் இந்தச் சந்திப்பினால், பிறருக்குப் பயன்தரக்கூடிய சிலுவைப்பயணத்தை இயேசுவும் முணுமுணுக்காமல் தன்னடக்கத்தோடு தொடர்கின்றார். எனவே, சிலுவை தன்னடக்கம் மிகுந்த கருவியாக மாறுகின்றது.

## செபம்:




தன்னடக்கம் மிகுந்த இயேசுவே! எம் உணர்வுகளையும், கற்பனைகளையும் கடந்து தூய ஆவியின் இயக்கமே வாழ்க்கை என்று, தன்னடக்கத்தோடு இன்ப துன்பங்களை ஒரே மனநிலையில் ஏற்று வாழ்ந்த உம் தாய் மரியாளைப்போல நாங்கள் வாழவும் சிலுவையின் பண்பாகிய தன்னடக்கத்தில் சிறந்து விளங்கவும் அருள்தாரும். ஆமென்!

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்:

**மறுத்திட முடியா நிலையாலே, சீமோன்**
**வருத்தினார் தன்னை உம்மோடு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஐந்தாம் நிலை

## இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

ஒரு சாதாரண மனிதனின் உதவி இறைமகனுக்குத் தேவைப்பட்டதா? ஏன் சீமோன் உதவியை இயேசு ஏற்றுக்கொண்டார்? இதன்மூலம் இயேசு நமக்குச் சொல்லும் செய்தி என்ன? சிந்திப்போம்...

தேவையிலும், துன்ப நிலையிலும் இருப்பவர்களுக்கு உதவுவது சாதாரண மனிதரல்ல. உதவும் பண்பு தெய்வத்தினுடையது. சீமோனிடமிருந்து உதவும் பண்பு நன்னயமாக இயேசுவுக்குக் கிடைக்கிறது. மாபெரும் உலக மீட்பருக்கு உதவிய பெருமை சீமோனுக்குக் கிடைக்கிறது. ஆபிரகாமிடம் விருந்தோம்பல் பண்பு இருந்ததால் இறைவனுக்கே விருந்தளிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அன்பும், இரக்கமும் கொண்ட நன்னயத்தினால் அன்னை தெரசா, வின்சென்ட்-தே-பவுல் போன்றவர்கள் இறைவனில் பெருமையடைந்தார்கள். கல்வாரிப்பாதையில் நன்னயம் மிகுந்த சீமோன், இயேசுவோடு சிலுவையை சுமந்ததால், சிலுவை நன்னயம் மிகுந்த கருவியாய் மாறியது.

# செபம்:




நன்னயத்தை மதித்து
அதைப் பிரதிபலிக்கின்ற
எங்கள் இயேசுவே!
பிறருக்கு உதவி
செய்கின்றவர்-
களுக்கே
இறையரசில் இடம்
என்று கூறியவரே!
உதவுதலே
உண்மையான
ஆன்மீகம் என்ற
உமது வழியில்
நடக்கவும்
சிலுவையின் பண்பாகிய
நன்னயத்தில் நாங்கள்
மேலோங்கி வளரவும்
அருள்தாரும். ஆமென்!

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்: **நிலையாய் பதிந்தது உம் வதனம், அன்பின்**
**விலையாய் மாதின் சிறுதுணியில்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஆறாம் நிலை

## இரத்தம் வழிந்தோடிய இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

வெரோணிக்காள் இயேசுவின் மேல் கொண்ட அன்பு, அவள் அந்த நேரத்தில் காட்டிய துணிவு, மற்றும் இயேசு தன் முகத்தை அவள் துடைத்த துணியில் பதிய வைத்தது இவைகள் மூலம், இயேசு நமக்குச் சொல்ல விரும்புவது என்ன? சிந்திப்போம்...

உரோமை வீரர்களின் அராஜகமான செயல்களையும், அஞ்சி நடுங்கக்கூடிய சூழ்நிலையையும் கடந்து ஒரு சாதாரண இளம்பெண் இயேசுவை அணுகி அவர் முகம் துடைக்கத் துணி கொடுத்து உதவ முடிந்ததென்றால், அது அவளது இதயத்தில் பொங்கி வழிந்த அன்பினால் தான்.

உண்மையான அன்பு உலகை வெல்லும். அது அறிவிற்கு அப்பாற்பட்டது. இதற்கு சாட்சிதான் வெரோணிக்காள். அவளது அன்பையும், துணிவையும் கண்ட இயேசு, அவள் மேல் பரிவு கொண்டு அவள் கொடுத்த துணியில் தன் முகத்தைப் பதித்து பரிசாகத் தருகின்றார். இங்கு சிலுவை பரிவின் சின்னமாய் மாறுகிறது.

## செபம்:




**பரிவிரக்கம் மிகுந்த இயேசுவே! எங்கள் மீது நீர் கொண்ட அன்பு தான் பரிவாய் மாறி, எங்களை மீட்கத் தூண்டியது. நாங்களும் வெரோணிக்காளைப் போல துணிவுடன் கூடிய அன்பில் நிலைக்கவும், சிலுவையின் பண்பாகிய பரிவில் வளர்ந்து இறையரசை வளர்க்கவும் அருள்தாரும். ஆமென்!**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்:

**ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததனால், அந்தோ<br>சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்.<br>எனக்காக இறைவா எனக்காக!<br>இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறையாகத் தரையில் விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

இயேசு இரண்டாம் முறையாகத் தரையில் விழக்காரணம் என்ன? அந்த விழுதல் வழியாக அவர் நமக்கு என்ன சொல்ல விரும்புகிறார்? சிந்திப்போம்...

மனிதன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன். விழுதல் என்பது மனிதனுக்கே உள்ள பலவீனம். இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஆனாலும் விழுதலைக் குறித்து யாரும் மனம் சோர்ந்து போகக்கூடாது. விழுகின்ற போதெல்லாம் இடர்பாடுகளைப் பொறுமையுடன் ஏற்று ஆவியின் தூண்டுதலால் எழுதலுக்குச் செவிசாய்த்து எழுந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இயேசுவும் அவ்வாறே, இரண்டாம் முறை தரையில் விழுந்தபோதும் பொறுமை காத்து தூய ஆவியின் தூண்டுதலால் எழுந்து தன் இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறார். இயேசு பொறுமையோடு சிலுவையைத் தொடர்ந்து சுமந்ததால் சிலுவை பொறுமையின் சின்னமாய் மாறுகிறது.

# செபம்:




**பொறுமையை வாழ்வாக்கிய இயேசுவே! நாங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் சரிவுகளையெல்லாம் உம்மைப்போல் பொறுமையோடு ஏற்று தூய ஆவியின் தூண்டுதலான எழுதலுக்குச் செவிசாய்த்து நிறை உண்மையை நோக்கி நடக்கவும், சிலுவையின் பண்பான பொறுமையில் வளர்ந்தோங்கவும் அருள்தாரும். ஆமென்!**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **விழிநீர் பெருக்கிய மகளிருக்கு, அன்பு<br>மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்.<br>எனக்காக இறைவா எனக்காக!<br>இடர்பட வந்தீர் எனக்காக!**

# எட்டாம் நிலை

## அழுது புலம்பும் எருசலேம் நகரத்துப் பெண்களை இயேசு சந்திக்கிறார்.

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

உணர்ச்சிவசப்பட்ட எருசலேம் நகரத்துப் பெண்களை சந்தித்து," எனக்காக அழவேண்டாம், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" எனக் கூறிய வார்த்தைகள் மூலம், இயேசு என்ன சொல்கிறார்? சிந்திப்போம்...

அறிவினால் இயக்கப்படும் மனிதர்கள் பலவீனமானவர்கள். மனிதன் எப்போதுமே நிறைவற்ற நிலையில்தான் இருக்கிறான். அவ்வாறு நிறைவற்ற நிலையிலுள்ள மனிதர்களின் ஆறுதல், இயேசுவுக்கு அந்தத் துயரமான நேரத்தில் தேவைப்படவில்லை.

ஏனெனில், அதே மனிதம் தான் அவரைப் போற்றியும், தூற்றியும் சிலுவை மரணத்திற்குக் கையளித்தது. மனித உணர்வு சார்ந்த ஆறுதலில் பயனில்லை என்பதை உணர்ந்த இயேசு அமைதியோடு "உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்' எனக்கூறி தன் சிலுவைப் பயணத்தைத் தொடர்கின்றார்.

சிலுவை அமைதியின் சின்னமாய் மாறுகிறது.

## செபம்:




"அமைதி கொண்டு நானே கடவுள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்" என்ற இயேசுவே! உம்மைப் போல நாங்களும் பிறரின் உணர்வுகளை அமைதி கொண்டு மதிக்கவும், மனித உணர்வுகளுக்கு அடிமையாகாமல் இருக்க சிலுவையின் பண்பாகிய அமைதி என்னும் பண்பில் வளரவும் அருள்தாரும். ஆமென்!

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர், கால்**
**ஊன்றி நடந்திடும் மெய் நொந்தீர்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

மீண்டும் மீண்டும் தன் உறுதியில் தளர்ந்து, சோர்ந்து தள்ளாடி விழும் இயேசுவின் விழுதலும் எழுதலும் நமக்கு என்ன சொல்கிறது? சிந்திப்போம்...

மனிதநிலை இயேசுவை உள்ளம் சோரச்செய்து மண்ணில் சாய்க்கிறது. எழுந்து நடக்கத் தன் உடலில் எந்த சக்தியும் இல்லை. ஆனாலும் இயேசு எழுகிறார். தன் தந்தை மீதும், மனிதர் மீதும் கொண்ட அன்பினால் மீட்பின் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி, மனிதரை முழுமையாக மீட்டெடுக்க வேண்டும் எனும் தூய ஆவியின் அறிவுறுத்தலினால் உறுதியடைந்து எழுகின்றார்.

எழமுடியாத நிலையிலிருந்து எழுந்ததில் அவருக்கு மகிழ்ச்சி. இன்னும் சிறிது தூரத்தில் கல்வாரியின் உச்சியை அடைந்துவிட முடியும் என்பதில் அவருக்கு மகிழ்ச்சி. இன்னும் சிறிது நேரத்தில் தனது இலட்சியப்பயணம் சிலுவை மரணத்தினால் முடிவடையப் போவதில் அவருக்கு மகிழ்ச்சி. இத்தனை மகிழ்ச்சிகளோடு இயேசு தன் சிலுவையைத் தொடர்ந்து சுமந்ததால் சிலுவை மகிழ்ச்சியின் சின்னமாய் மாறியது.

# செபம்:

எங்களை நிபந்தனையற்ற
முறையில் மகிழ்ச்சியோடு
அன்பு செய்யும்
இயேசுவே!
விழுதலைக் குறித்து
விரக்தியடையாமல்,
உமது அன்பு
எங்களுக்குள்
இருப்பதை
உணர்ந்து, வலிமை
பெற்று எழுந்து,
எங்கள் வாழ்க்கைப்
பயணத்தைத் தொடர
சிலுவையின் பண்பாகிய
மகிழ்ச்சியை எங்களுக்குத்
தாரும். ஆமென்!




---

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

---

பாடல்: **உடைகள் களைந்திட உம்மைத் தந்தீர், இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகள் களையப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**


### முதல்வர்:

தன்னை நிர்வாணமாக்கி ஏளனம் செய்த செயலை எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொண்ட இயேசு, அதன் மூலம் நமக்குக் கூறும் செய்தி என்ன? சிந்திப்போம்...

உடுத்த ஆடையில்லா ஏழை, ஆடையின்மையை அவமானமாகக் கருதுவதில்லை. மனநோயாளி, தான் துன்புறுத்தப்படுவதையோ காறி உமிழப்படுவதையோ, கேலி செய்யப்படுவதையோ அவமானமாகக் கருதுவதில்லை.

சீடத்துவ வாழ்வில், அவமானங்களையும், கேலிப்பேச்சுகளையும் கொள்கையோடும் பொறுமையோடும் ஏற்றுக்கொள்ளும் பொழுது, இறைவனால் பல மனிதர்களை அவமானம் அடையாதபடி காப்பாற்றமுடியும். எனவேதான் இயேசு அந்த உச்சக்கட்ட அவமானத்தை ஓர் ஏழையைப் போல, ஒரு மன நோயாளியைப் போல எவ்வித பாதிப்புமின்றி ஏற்று நம்மையெல்லாம் அவமானத்திலிருந்து காத்தார். சிலுவையின் பண்புகளாகிய தூய ஆவியின் ஒன்பது கனிகளும் அவரில் நிலைத்திருந்ததால் ஒரு செம்மறியைப் போல் கல்வாரியின் உச்சியில் நிற்கிறார்.

## செபம்:




அன்பான இயேசுவே! நீர் அவமானத்தை ஏற்றுக்கொண்டதன் வழியாக அவமானப்படுத்தப்-படுபவர்களுக்கு விண்ணகத்தில் பெருமையும், மதிப்பும் உண்டு என்ற நிச்சயத்தை வெளிப்படுத்துகின்றீர். வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கும் அவமானங்களை சிலுவையின் பண்பைக் கொண்டு தாங்கிக்கொள்ள அருள்தாரும். ஆமென்!

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |
| **பாடல்:** | **பொங்கிய உதிரம் வடிந்திடவே, உம்மைத்<br>தொங்கிடச் செய்தார் சிலுவையிலே.<br>எனக்காக இறைவா எனக்காக!<br>இடர்பட வந்தீர் எனக்காக!** |

# பதினொன்றாம் நிலை

## இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:


தன் புனிதமான கால்களையும், கைகளையும் பாவச்சுமையான சிலுவையில் ஆணிகளால் அடிக்க இயேசு ஏன் சம்மதித்தார்? அதன் மூலம் அவர் நமக்குச் சொல்லும் செய்தி என்ன? செவிமடுப்போம்...

மகளே! மகனே! இதோ உன் பாவங்களையெல்லாம் சிலுவை வடிவில் கல்வாரி உச்சி வரை சுமந்து வந்திருக்கிறேன். இந்தப் பயணத்தில் நான் கற்றுத்தந்த தூய இயல்புகளை நீ வாழ்வாக்கு. என் கைகளும், கால்களும் சிலுவையில் வைத்து ஆணிகளால் துளைக்கப்பட்டதால் உன் பாவங்கள், சாபங்கள், நோய்கள், பிணிகள் அனைத்தும் என் உடலுக்குள் பாய்ந்திருக்கின்றன. இப்போது, சிலுவை என்ற இந்த அவமானச் சின்னம், புனிதமான விடுதலையின் சின்னமாக, மீட்பின் கருவியாக, அன்பின் சின்னமாக மாறியிருக்கிறது.

சிலுவையை உன் வாழ்வின் விடுதலைக்கு, வளர்ச்சிக்கு, சமாதானத்திற்குத் திறவுகோலாகப் பயன்படுத்திக்கொள். ஏனெனில் சிலுவை வழியாக நான் உன்னை மீட்டெடுத்திருக்கிறேன். சிலுவையில் என் இரத்தத்தை உன் விடுதலைக்கு விலையாகக் கொடுத்திருக்கிறேன். என் அன்பை உணர்ந்து வாழப் பழகு.

# செபம்:

**அன்பான இயேசுவே!
அடைபட்ட என் வாழ்விற்கு
திறவுகோலும்
வழிகாட்டியுமான
சிலுவையை என்
வாழ்க்கையில்
எந்நாளும்
பயன்படுத்தவும், நீர்
தெளிவுபடுத்திய
பாதையில் நடக்கவும்
அருள்தாரும். ஆமென்!**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **இன்னுயிர் அகன்றது உமைவிட்டு, பூமி
இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# பனிரெண்டாம் நிலை

## எல்லாம் நிறைவேற்றிய இயேசு சிலுவையில் உயிர் விடுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

நண்பகல் பனிரெண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று. இயேசு,"ஏலி, ஏலி லெமா சபக்தானி!" அதாவது, " என் இறைவா, என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர்!" என்று உரத்த குரலில் கத்தினார்.

இயேசு மீண்டும் உரத்த குரலில் கத்தி உயிர்விட்டார். நூற்றுவர் தலைவரும் அவரோடு இயேசுவைக் காவல் காத்தவர்களும் நிலநடுக்கத்தையும் நிகழ்ந்த யாவற்றையும் கண்டு மிகவும் அஞ்சி உண்மையாகவே இவர் இறைமகன் என்றார்கள்.

## செபம்:




அன்பு இயேசுவே! வானத்திற்கும் பூமிக்கும் இடையே நீர் சிலுவையில் தொங்கினீர். மனிதரைக் கடவுளின் பிள்ளைகளாக்கிட நீர் எம்மில் ஒருவராக மாறினீர். சிலுவையில் தொங்கிய போது நீர் உரைத்த "தாகமாயிருக்கிறது" சொற்களை நினைத்துப் பார்க்கிறோம். இயேசுவே! எங்கள் ஆன்ம தாகத்தை வளர்த்தருளும். " எல்லாம் நிறைவேறிற்று " என்று கூறி உயிர் நீத்த இயேசுவே! நாங்கள் கடவுளின் திருவுளத்தை நன்கு நிறைவேற்றிட அருள்தாரும். ஆமென்!

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்:

**துயருற்றுத் துடித்தார் உளம்நொந்து அன்னை**
**உயிரற்ற உடலினை மடிசுமந்து,**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதிமூன்றாம் நிலை

## இயேசுவின் உடல் தன் தாயின் மடியில் கிடத்தப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோஸ்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

தன்மீது அளவற்ற அன்பைக் கொண்ட சில சகோதர சகோதரிகளால் தன் உயிரற்ற உடல் தன் தாய் மரியாளின் மடியில் கிடத்தப்படுகிறது. இதன் மூலம் இயேசு நமக்குக் கொடுக்கும் செய்தி என்ன? செவிமடுப்போம்...

மகனே! மகளே! எனது உலக வாழ்க்கையில் நான் தந்தையின் விருப்பப்படி பிறர் நலனில் அக்கறை கொண்டே வாழ்ந்தேன். அப்படி என் அன்பினால் நன்மை அடைந்தவர்கள்தான் என்னை சிலுவையிலிருந்து இறக்கி, என் தாயின் மடியில் கிடத்தி, எனது இறுதிச்சடங்கில் நான் அநாதையல்ல என்பதையும், பிறர்நலனில் அக்கறை கொள்பவர்கள் என்றுமே அநாதைகள் அல்ல என்பதையும் நிரூபித்தார்கள். பிறருக்காக வாழாமல் தன்னலத்தோடு வாழ்பவர்கள்தான் அநாதைகள். பிறர் உதவியையோ, அன்பையோ பெறத் தகுதியற்றவர்கள். எனது உலகவாழ்க்கை உனக்கு ஒரு பாடமாக இருக்கட்டும்.

எப்பொழுதும் தூய ஆவியின் கனிகளான ஒன்பது பண்பிலும் நிலைத்திரு. அதுவே நீ மறுகிறிஸ்துவாக்கப்பட்டதற்கு அடையாளம். உன்னைப்போல் உன் அயலானையும் நேசி என்பதே என் அடக்கத்திற்குமுன் நான் உனக்குக் கூறும் செய்தி.

# செபம்:

இரக்கம் மிகுந்த இயேசுவே! பிறர்நலனில் அக்கறை கொள்பவர்களாக வாழ்ந்து உரிமைகளைப் பெறுதலே சிறந்த ஞானம் என்பதை நாங்கள் உணர்ந்து வாழ அருள்தாரும். ஆமென்!




| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்:

**ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு, நீர்**
**அடங்கிய கல்லறை உமதன்று,**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதினான்காம் நிலை

## இயேசுவின் திருவுடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோஸ்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

மாட்டுக்குடிலில் பிறந்து, தங்குவதற்கு நிரந்தரமான இடமின்றி அலைந்து திரிந்து, பணியாற்றி நிந்தை அவமானங்களோடு சிலுவைச்சாவை ஏற்று, இறுதியாகப் பிறருக்குச் சொந்தமான கல்லறையில் புதைக்கப்பட்ட இயேசு நமக்குக் கூறும் செய்தி... செவிமடுப்போம்...

மகனே! மகளே! இருள் வாழ்விலிருந்து அருள் வாழ்விற்கு உன்னை மீட்டெடுக்கவே மனிதனாய் பிறந்து, மனிதன் எப்படி வாழ வேண்டுமென்று உனக்குக் கற்றுக்கொடுத்தேன். உன் பாவக் கட்டிலிருந்து உன்னை விடுவிக்க சிலுவை வழியாக உன் பாவங்களையெல்லாம் சுமந்து என் உடலில் ஏற்றுக்கொண்டேன். நான் சுமந்த சிலுவையை உனக்கு விடுதலையின் சின்னமாக, அன்பின் கருவியாக உனக்கு விட்டுச் செல்கிறேன்.

எப்பொழுதெல்லாம் சிலுவையை நம்பி நீ செயல்படுகிறாயோ அப்பொழுது என் அன்பின் வல்லமையால் நீ ஆசீர்வதிக்கப்படுகிறாய், விடுதலை மற்றும் சமாதானம் பெறுகிறாய். சிலுவை என்பது அன்றாடம் நீ கடைபிடித்து நிலைத்திருக்க வேண்டிய தூய ஆவியின் கனிகளான நம்பிக்கை, அன்பு, கனிவு, தன்னடக்கம், நன்னயம், பரிவு, பொறுமை, அமைதி, மகிழ்ச்சி என்னும் ஒன்பது பண்புகளுமேயாகும். இந்த அர்த்தத்தில்தான் "என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் அன்றாடம் தன்

சிலுவையை எடுத்துக்கொண்டு
என்னைப் பின் செல்லட்டும்"
எனக் கூறினேன்.

எனவே, மகனே! மகளே!
சிலுவை ஒரு
சுமையல்ல., அது உன்
வாழ்க்கை. உனக்கு
வாழ்வு கொடுத்ததில்
எனக்கு மகிழ்ச்சி...
நிம்மதி... பாவத்திற்கு
என்னோடு இறந்த நீ,
புத்துயிர் பெற்று
என்னோடு உயிர்த்தெழு!!




# செபம்:

**பாவ இயல்பை அழிக்கவும், புதுப்படைப்பாக மாறவும், உமது உயிர்ப்பில் பங்குபெற்று மகிழவும் வழிகாட்டிய இயேசுவே! சிலுவை ஒரு சுமையல்ல, அது எங்கள் வாழ்வின் வழிகாட்டி, நன்மையின் திறவுகோல் என்பதை உணர்ந்து வாழ வரமருளும். ஆமென்!**

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்:

**மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தீர், எம்**
**வாழ்வில் ஒளியை மிளிரச் செய்தீர்**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதினைந்தாம் நிலை

## இயேசு சாவை வென்று உயிர்த்தெழுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:


வாரத்தின் முதல் நாள் விடியற்காலையிலேயே தாங்கள் ஆயத்தம் செய்திருந்த நறுமணப் பொருள்களை எடுத்துக்கொண்டு அப்பெண்கள் கல்லறைக்குச் சென்றார்கள். கல்லறை வாயிலிருந்து கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள்.

அவர்கள் உள்ளே நுழைந்தபோது அங்கே ஆண்டவர் இயேசுவின் உடலைக் காணவில்லை. அதைக் குறித்து அவர்கள் குழப்பமுற்றார்கள். அப்போது திடீரென மின்னலைப்போன்று ஒளிவீசும் ஆடை அணிந்த இருவர் அவர்களுக்குத் தோன்றினர். இதனால் அப்பெண்கள் அச்சமுற்றுத் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தனர்.

அவர்கள் அப்பெண்களை நோக்கி, "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" என்றனர்.

**செபம்: (எல்லோரும்)**

**அன்பு இயேசுவே! கடவுளின் ஆட்சியை இவ்வுலகில் கொணர நீர் வந்தீர். உமக்கு எதிராகச் செயல்பட்ட உமக்குக் கொலைத் தண்டனை விதித்தபோதிலும், நீர் சாவின் மீது வெற்றி கொண்டீர். எங்களைப் பாவத்தின் அடிமைத்தளையிலிருந்து விடுவித்து எங்களுக்குப் புது வாழ்வு தந்தீர்.**




**உயிர்த்தெழுந்த ஆண்டவராகத் தந்தையின் வலம் அமர்ந்து எங்கள் அரசராக ஆட்சி செய்கின்றீர். உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்க வாக்குறுதி அளித்துள்ளீர். உமது அன்புச் சீடராக நாங்கள் வாழவும், நீர் சென்ற வழியில் நடக்கவும் எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

# இறுதிச் செபம்

## செபிப்போமாக!

வாழ்வும், வழியும் உயிருமானவர் நானே என்றவரே,

வாழ்வின் பாதையில் உண்மை வாழ்வு என்பது என்ன என்று சொல்லித்தர உலகுக்கு வந்தவரே,

அந்த வாழ்வின் பாதைகளை தெளிவுற கற்றுக் கொடுக்க உம்மைத் தாழ்த்தி மனித அவதாரம் ஏற்று வந்தவரே,

வாழ்வின் பாதைகளில் கொடுப்பதற்கென்றே பல உண்டு என்று சொல்லிக் கொடுக்க பாடுகளையும் ஏற்றவரே,

உம்மிடம் கற்றுக் கொள்ள பல உண்டு என இன்று பயணிக்கும் எங்களுக்கும் உம் வழியைக் கற்றுக் கொடுத்தவரே,

உம் வாழ்விற்கு செவி கொடுக்கின்றோம். எம் வாழ்வை மாற்றும் என மன்றாடுகின்றோம்.

கொடுப்பதில் தான் எங்களது பேறுடைமை உண்டு என எங்களுக்கு கற்றுக் கொடுத்தவரே, கொடுங்கள். அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி கொடுங்கள்.

நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் நானும் அளப்பேன் என்று சொன்னவரே, தியானித்து இருக்கின்றோம். கொடுப்பதற்கும் எம்மில் பலவுண்டு என எங்களுக்கு உணர்த்தியிருக்கின்றீர், நன்றி கூறுகிறோம். பெற்றவைகளை தாராளமாக கொடுத்து, எங்களது வள்ளல் தன்மையை நிரூபிக்க வரம் தாரும். நல்ல நிலத்தில் தூவப்பட்ட விதையை போல கேட்டவைகளை, தியானித்தவைகளை, அசை போட்டு வாழ்வாக்க வரம் தாரும். வாக்களித்த உம் ஆவியை எம்மில் தங்க செய்து, அவர் அருள் பெற துணை செய்யும். ஆமென்.



# திருச்சிலுவைப் பாதை 4

www.iraivarthai.org

# திருச்சிலுவைப் பாதை-4

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!

**அனைவரும்: ஆமென்.**

## தொடக்கச் செபம்

அன்பின் இயேசுவே! நீர் எனக்காகவும் என் வீட்டாருக்காகவும் அனுபவித்த துன்ப வேதனைகளை உமது திருச்சிலுவைப் பாதையின் வழியாக வெளிப்படுத்தியுள்ளீர். உமது பாடுகளும், இறப்பும் உயிர்ப்பும் **எங்களுக்கு** வான் வீட்டின் கதவுகளைத் திறந்துள்ளன. உமது பாடுகளைத் தியானிக்கும் இவ்வேளையில் உமது உயிரின் விலை **எவ்வளவு** பெரியது **என்பதை** நாங்கள் உணரச் செய்யும். வாழ்வில் நல்லதை-சரியானதை செய்யவும், கெட்டதை-பிழையானதை விலக்கவும், மனச்சான்று பேசும்போது, உம் தெய்வீகக் குரலுக்கு செவிமடுத்து வாழும் முறையை **எங்கள்** குடும்பத்தில் உள்ளவர்கள் **எல்லோருக்கும்** சொல்லித் தாரும். ஆமென்.

பாடல்: **எங்கே சுமந்து போறீர்? சிலுவையை நீர்**
**எங்கே சுமந்து போறீர்**
**பொங்கும் பகைவராலே, அங்கம் நடுநடுங்க**
**எங்கே போறீர்.**

**மனித பாவத்தாலே**
**மரணத் தீர்வை பெற்று**
**தூய செம்மறி போல,**
**துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்**

# முதல் நிலை

## இயேசு அநியாயத் தீர்வையிடப் படுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

மதத் தலைவர்கள் தோட்டத்தில் என்னைக் கைது செய்தார்கள். தலைமைச் சங்கத்தார் முன் நிறுத்தினார்கள். நான் கடவுளின் மகன் என்பதை அவர்களுக்கு வெளிப்படையாகச் சொன்னேன். அவர்கள் என்னை ஏற்க மறுத்தார்கள். அபச்சாரம் என்று சொல்லி, கொலைக் குற்றம் சாட்டி, எனக்கு மரண தண்டனையைக் கொடுத்தார்கள். பின்னர் பிலாத்துவிடம் கூட்டிச் சென்று அவரிடம் அதற்கான அனுமதியையும் பெற்றார்கள்.

## சிந்தனை:

நான் பல தடவைகளில் என் குடும்ப உறுப்பினர்களைத் தகாத வார்த்தைகளால் தாக்கித் தவறாகத் தீர்ப்பிட்டுள்ளேன். இதனால் அவர்களைப் பெரிதும் துக்கப்படுத்திக் காயப்படுத்தியுள்ளேன். கோபத்தில் நான் பேசிய கடும் சொற்களால் நான் அவர்களைக் கொலை செய்துள்ளேன்.

உண்மைக்குப் புறம்பான தீர்ப்புகளால் கணவரை, மனைவியை, பிள்ளைகளை, பெற்றோரை, சகோதரர் சகோதரிகளை நான் அதிகம் துக்கப்படுத்திவிட்டேனே! அவ்வாறு அவரை வேதனைப் படுத்தும்போது நாவால் அவரைக் கொலை செய்துவிட்டேனே!

நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.




## செபம்:

**அன்பின் இயேசுவே! மனம் காயப்படும் அளவுக்குக் கடுமையான சொற்களைப் பேசிய தீர்ப்புக்களால் என் குடும்ப உறுப்பினர்களைத் தாக்கிவிட்டேன். இதற்காக நான் மனம் வருந்துகிறேன். அவர்களிமும் உம்மிடமும் மன்னிப்புக் கேட்கிறேன். ஆமென்.**

---

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

---

**பாடல்:** **பாரச் சிலுவை மரம்,**
**பாவத்தின் சுமை தாங்கி**
**பாசத்துடன் அணைத்து,**
**பாரத்துடன் நடந்து எங்கே போறீர்**

# இரண்டாம் நிலை

## இயேசுவின் மீது பாரமான சிலுவையைச் சுமத்துகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

யூதர்கள் மரத்தால் பொருந்திய பாரச் சிலுவை ஒன்றை எனக்குத் தந்தார்கள். பலர் அதைத் தூக்கி என் தோளில் சுமத்தினார்கள். அதன் பாரத்தை என்னால் தாங்க முடியவில்லை. நீ செய்த எல்லாப் பாவங்களின் மொத்தச் சுமையே அப்போது எனக்குப் பாரமாக இருந்தது. அதையே நான் சுமந்தேன். நீ அதை ஒருபோதும் ஒரு விரலால் கூட தொட்டுப் பார்த்ததில்லை. நீ பாவம் செய்யும் ஒவ்வொரு வேளையும் தொடர்ந்து உன் பாவத்தின் பாரத்தை என் தோளில் சுமத்துகிறாய் என்பதை மறவாதே.

### சிந்தனை:

குடும்பச் சுமைகள் பலவிதம். பொருளாதாரச் சுமையோ இவற்றுள் தனி ரகம். இது உறுப்பினர்கள் எல்லோரையும் பெரிதும் தாக்கி அழுத்துகிறது. பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றாகச் சேர்ந்து இப்பாரத்தைச் சுமக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதனை ஒருவரின் தோள் மேல் மட்டும் சுமத்துவது நியாயமா?

குடும்பப் பாரத்தை மற்றவர்களோடு சேர்ந்து சுமக்க வேண்டிய நான், அதைத் தட்டிக் கழித்து ஒதுங்கி இருந்திருக்கிறேன்! நான் தவறு செய்யும் போதெல்லாம் என்னைக் காப்பாற்ற அதை மற்றவர்களின் தோள் மேல் சுமத்தியிருக்கிறேனே!

நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.

## செபம்:

**அன்பின் இயேசுவே!
என் சகோதர
சகோதரிகளோடு
சேர்ந்து நானும் என்
குடும்ப பொருளாதாரப்
பாரத்தில் பங்கெடுக்க
எனக்கு உதவிசெய்யும்.
ஆமென்.**




| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்: **கல்வாரி மலை நாடி,
தள்ளாடித் தரை வீழ்ந்து
எல்லோரின் பாவங்களைத்,
தனிமையாய் சுமந்து எங்கே போறீர்**

# மூன்றாம் நிலை

## இயேசு மனம், உடல் சோர்ந்து தள்ளாடி முதல்முறையாக தரையில் முகம் குப்புற விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

இரவு முழுவதும் உறங்கவில்லை. உணவு தண்ணீர் எதையும் எவரும் எனக்குத் தரவில்லை. இதனால் உடலில் மிகவும் பலவீனமாய் இருந்தேன். ஆயிரக் கணக்கில் வாங்கிய கசை அடிகளால் இரத்தம் பாய்ந்து ஓட, சோர்ந்து போயிருந்தேன். இவை போதாதென்று இப்போது தோளிலே பாரமான சிலுவையும் கூட என்னால் நகர முடியவில்லை. மனந்திரும்ப மாட்டேன் என்று அடம்பிடிக்கும் உன்னை ஒரு கணம் நினைத்தேன். தடுமாறி விழுந்தேன். பலவீனம் உடலில் மட்டுமல்ல உள்ளத்திலும்தான்.

## சிந்தனை:

வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள் வருவது இயல்பு. குடும்பம் இதற்கு விதிவிலக்கு அல்ல. நான் செய்த தவறுகளால் வறுமை நிலைக்கு வந்துவிட்டேன். இதுவும் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு சரிவுதான்; எவ்வளவுதான் உடைந்து போனாலும் ஒருபோதும் தாழ்வு மனநிலைக்குள் மட்டும் நான் போகவில்லை.

வீரத்தோடு மீண்டும் எழுந்திருக்க வேண்டும் என்றும், சோம்பலைக் களைந்து கடுமையாக உழைத்திருக்க வேண்டும் என்றும் எண்ணாது அலட்சியமாய் இருந்துவிட்டேனே! ஒவ்வொரு முறையும் தவறியபோது, மனச்சான்று கடுமையாக என்னைக் கண்டித்தும் திருந்தமாட்டேன் என்று தொடர்ந்து அடம்பிடித்துக் கொண்டு வாழ்ந்து வந்தேனே!

நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.




## செபம்:

**அன்பின் இயேசுவே!
பொருளாதாரச் சுமை
தாக்கும்போது நான்
சோர்வினால் மனம்
உடைந்து போகிறேன்.
இதில் இருந்து
எழுந்திருக்க எனக்கு
உதவிசெய்யும்.
ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்: மாமரி கன்னி அன்னை,
மகனின் கோலங்கண்டு
மாதுயருடன் வாடி,
மனம் நொந்து வருந்த எங்கே போறீர்**

# நான்காம் நிலை

## இயேசு தன் தாய் மரியாளைச் சந்திக்கின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

நேரம் இளங்காலை வேளை, யெருசலேம் வீதியில் கொலைக் களப் பவனி. தெருவோரம் இரண்டிலும் மக்கள் கூட்டம். நான் சிலுவையை சுமந்து கொண்டு தள்ளாடிச் சென்றேன். அங்கே நின்றவர்கள் எனக்கு நிகழ்ந்ததை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நடுவே கதறி அழும் சத்தம். பழக்கமான குரல். சற்றே திரும்பினேன். மகனே! என்று என் அம்மா ஓலமிட்டு அழுதுகொண்டே என்னிடம் ஓடிவந்தார். அவரின் கலங்கிய கண்கள் என்னோடு பேசின. மகனே! பாவத்தை அழிக்க என் பாசம் உனக்குத் தடையில்லை என்றன.

### சிந்தனை:

குடும்பத்தில் அம்மா அன்பின் வடிவமாக இருக்கிறார். அவர் ஒரு சுமைதாங்கி. கணவருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே இருந்து பாசத்தால் அனைவரையும் இணைக்கும் ஒரு பாசக் கயிறு. அவருக்கு குடும்பத்தில் ஒரு தனிச் சிறப்பு உள்ளது.

என் தாயின் தியாகத்தையும், அன்பையும் தெரிந்திருந்தும் பல தடவைகளில் நான் அவரை மனம் நோகச் செய்து விட்டேனே! பல தடவைகளில் பாசத்தைப் பாவித்தே நான் அவருக்கு எதிராகப் பாவங்களை செய்திருக்கின்றேனே!

நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.

## செபம்:

**அன்பின் இயேசுவே! என் அம்மாவின் அன்பையும் தியாகத்தையும் தெரிந்திருந்தும் பல தடவைகளில் நான் அவரை மனம் நோகச் செய்துவிட்டேன். இனி வரும் காலத்தில் நான் அவருக்காக வாழ்ந்து அவரை மகிழ்விக்க எனக்கு உதவி செய்யும். ஆமென்.**




| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்:

உதிரம் ஆறாய் சிந்தி,
உள்ளம் உரமிழந்து
சீரேன் சீமோன் துணையை,
ஏற்று வழி நடந்து எங்கே போறீர்

# ஐந்தாம் நிலை

## இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

தோட்டக்காரரான சீமோன் என் எதிரே வந்து கொண்டிருந்தார். நானோ மலைப்பாதையில் மேலே ஏற முடியாது தடுமாறிக் கொண்டிருந்தேன். மலையுச்சிக்குப் போகுமுன் நான் இறக்கக்கூடும் என்று கொலைகாரக் கும்பல் அஞ்சியது. அதனால் எனக்கு உதவி செய்ய அவரைக் கட்டாயப்படுத்தினார்கள். முதலில் மறுப்புத் தெரிவித்த அவர், பின்னர் என்மேல் இரங்கி எனக்கு உதவி செய்ய ஒப்புக்கொண்டார். அவர் என் சுமையைப் பகிர்ந்து கொண்டதால் எனக்குக் கொஞ்சம் சுகமாக இருந்தது.

### சிந்தனை:

தந்தையோ, தாயோ, சகோதரர்களோ, பிள்ளைகளோ எல்லோரும் விழுந்தே எழுகிறோம். உதவி செய்ய மறுப்பதே ஒருவர் விழுவதற்குக் காரணமாயிருக்கிறது. குடும்பம் குலைந்து போகாமல் ஒன்றாய் இருக்க ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டியது அவசியம்.

பொருளாதாரத்திலே நலிவுற்று உடைந்து போன என் சகோதர சகோதரி ஒருவருக்குக் கைகொடுத்துத் தூக்கி விட நான் முன்வரவில்லையே! தூரத்தில் விலகி நின்றுகொண்டுதானே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். உதவி செய்வதற்குப் பதிலாக அவரின் சுமைகளைப் பெரிதாக்கி அவரை வேதனைப் படுத்தியிருக்கிறேனே!

நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.




## செபம்:

**அன்பின் இயேசுவே! எல்லோரும் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறேன். இதற்கு மாறாக நான் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல மனதை எனக்குத் தாரும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **கர்த்தரே உம் வதனம்,**
**இரத்தக் கறையால் மங்கி**
**உத்தமி வெரோணிக்காள்,**
**வெண் துகிலால் துடைத்தும் எங்கே போறீர்**

# ஆறாம் நிலை

## இரத்தம் வழிந்தோடிய இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

தலையில் முட்கள் ஏறியதால் முகத்தில் இரத்தம் வடிந்து, உறைந்துபோய் இருந்தது. அதன்மேல் தூசி படிய, என் முகம் உருக்குலைந்து காணப்பட்டது. எல்லோரும் என் முதத்தைப் பார்த்தார்கள். ஆனால் ஒரு பெண்ணுக்கு மட்டுமே என் முகம் உருக்குலைந்து இருந்தது தெளிவாகத் தெரிந்தது. துணிச்சலோடு அவர் என்னிடம் ஓடிவந்தார். தன் கைக்குட்டையால் என் முகத்தைத் துடைத்தார். என் முகத்தை நான் அதில் பதித்தேன். அத்தோடு, அவரின் உள்ளத்திலும் அதை நிரந்தரமாய் பதித்துவிட்டேன்.


## சிந்தனை:

துயரத்தில் இருக்கும் ஒருவருக்கே ஆறுதல் அவசியம் தேவை. குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோருமே ஏதோ ஒருவிதத்தில் துயரத்தில் இருக்கிறோம். எல்லோருக்கும் ஆறுதல் தேவைப்படுகிறது. வீட்டுக்கு வெளியே இதைத் தேடினால் அது பெரும் சிக்கலை உள்ளே கொண்டுவரும்.

துன்ப துயரத்தில் இருந்த என் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு ஆறுதல் சொல்ல நான் முன்வரவில்லையே! அவரின் தேவைகளை அறிந்தும் அவருக்கு உதவ முன்வராது என் தேவைகளுக்காக மட்டுமே நான் அவரைப் பாவித்திருக்கின்றேனே! நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.

# செபம்:

**அன்பின் இயேசுவே!
என் குடும்பத்தில்
துன்ப துயரத்தில்
இருப்பவர்கள் யாரென
நான் அறிவேன்.
இவர்களுக்கு நான்
ஆறுதலாய் இருக்க
எனக்கு
உதவிசெய்யும்.
ஆமென்.**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த,
பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும்
வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்**

# ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறையாகத் தரையில் விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**


### முதல்வர்:

மலைப் பாதையில் கற்களும் முட்களும் பரவிக் கிடந்தன. எனக்கோ பாவத்தைச் சுமந்த பயணம். பாரத்தின் உருவில் பாவத்தின் ஆதிக்கமே என்னை அதிகம் தாக்கியது. ஒரு கணப்பொழுதில் உங்கள் எல்லோருடைய பாவங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து நினைத்தேன். அவை என்னைக் கடுமையாகத் தாக்கியதால் சுமைதாங்கி நான் சாய்ந்தேன். என் முதுகிலே அப்பாரம் விழுந்தது. அப்போது சாத்தான் தன் வெற்றியைக் கொண்டாடினான். நானோ மீண்டும் வீரனாய் எழுந்தேன்.

### சிந்தனை:

குறைகள் இல்லாதவர்கள் எவரும் இல்லை. எல்லோருமே பாவிகள்தான். குடும்பத்தில் உண்டாகும் பிணக்குகளால் எல்லோருமே பாவம் செய்கிறோம். நம்மில் சிலர் சுயநலனுக்காக மிக மோசமாகவே ஏனைய குடும்ப உறுப்பினர்களைக் கொடூரமாகத் தாக்குகிறோம். சொத்துத் தகராறுகளே உறவின் முறிவுக்கு முக்கிய காரணம். பாகப் பிரிவினையால் நான் எண்ணற்ற பாவங்களைச் செய்திருப்பது எமக்குத் தெரிந்ததுதானே! பாவத்தில் பயணப் பாதையை பழக்கமாக்கிக்கொண்ட நான் அதை விட்டு வெளியேறாது அச்சேற்றையே நாம் தொடர்ந்து நாடியிருக்கின்றோமா! நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.

## செபம்:




**அன்பின் இயேசுவே! என் சகோதர சகோதரிகளோடு உறவை முறித்துக் கொண்டதால் பாவங்கள் பல செய்துள்ளேன். உறவுகளைச் சீராக்கி மீண்டும் எழுந்திருக்க எனக்கு உதவிசெய்யும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **புண்ணிய ஸ்தீரிகள் பலர்,**
**புலம்பி அழும் வேளை**
**ஆறுதல் கூறி நீரும்,**
**நேசக்கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்**

# எட்டாம் நிலை

## அழுது புலம்பும் எருசலேம் நகரத்துப் பெண்களை இயேசு சந்திக்கிறார்.

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

தெருவோரத்தில் நின்ற பெண்கள் சிலர் என்னைப் பார்த்து, தங்கள் கண்ணீரால் என்னோடு பேசினார்கள். உங்களுக்கு ஏன் இந்தப் பரிதாப நிலை என்று அவர்கள் சொன்னதைக் கேட்டேன். நான் அவர்களிடம், பாவப்பட்டது நான் அல்ல பாவிகள் நீங்கள் தான் என்றேன். பச்சை மரமே எரிகிறது என்றால் பட்ட மரம் எவ்வாறு எரியும் என்று யோசியுங்கள் என்றேன். எனவே நீங்கள் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் காப்பாற்றுங்கள். பாவத்தைத் தேடி நீங்கள் போக வேண்டியதில்லை அதுவே உங்களைத் தேடி வீட்டுக்கு வரும் என்றேன்.

## சிந்தனை:

இயந்திர உலகைத் தாண்டி நாம் இப்போது இணைய உலகிலே வாழ்கிறோம். அறிவு வளர்ச்சியும், கண்டுபிடிப்புகளும் அதிவேகமாக நிகழ்கின்றன. நல்லது கெட்டது எல்லாமே இணைய தளத்தில் இலவசமாக கிடைக்கின்றன. ஒரு குழந்தை நல்லவராக வாழ்ந்து உயரவும், கெட்டவராகப் பாழடைந்து சீரழியவும் இதுவே இன்று காரணமாகவும் இருக்கிறது. இணையதளத்தின் தவறான பாவனையால் பிள்ளைகள், கெட்டுப் போகக் கூடாது என்பது எனக்குத் தெரிந்ததுதானே!

இணையதளத்தால் வரும் ஆன்மீக ஆபத்துகளைத் தெரிந்திருந்தும் அதைத் தவறாகப் பயன்படுத்துவோருடன் கூட்டத்தில் நானும் சிக்கிக் கொண்டது உண்மைத்தானே!
நான் செய்தது சரிதானா?
மனமே நீ பதில் சொல்.




## செபம்:

**அன்பின் இயேசுவே!**
**இணையதள அறிவில் பிள்ளைகள் பெற்றோரை மிஞ்சிய காலம் இது.**
**இருந்தபோதிலும் பிள்ளைகள் கெட்டுப்போகாது அவர்களைப் பாதுகாக்க எனக்கு உம் ஞானத்தைத் தாரும்.**
**ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **சிலுவைப் பாரத்தாலே,**
**மாமரி ஏகமைந்தன்**
**மூன்றாம் முறை தரையில்,**
**முகம் படிந்தெழுந்து எங்கே போறீர்**

# ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

சிலுவைப் பயணத்தின் போது நான் மூன்று முறைகள் விழுந்தேன். மரச் சுமையால் முதல் முறையும், மனச் சுமையால் இரண்டாம் முறையம் விழுந்தேன். ஆனால் மூன்றாம் முறையோ மரணச் சுமையால் விழுந்தேன். நான் எவ்வளவுதான் துன்பப்பட்டாலும், எவ்வளவு தான் என் உயிரைக் கொடுத்தாலும் மனம் மாறமாட்டேன் என்று, நீ தொடர்ந்து அடம்பிடிக்கிறாயே. உனக்காக நான் இறப்பது வீண் என்ற எண்ணமே எனக்கு மரணப் பயத்தைத் தந்தது. உன்னை எண்ணியவாறே நான் இம்முறை தரையிலே விழுந்தேன்.

### சிந்தனை:

சாவு வரும்போது ஒருவர் நிலைகுலைந்து போகிறார். அவர் தடுமாறித் தரையில் விழுந்து விடுகிறார். இக்கால குடும்பங்களில் கணவனோ, மனைவியோ, அல்லது இருவருமோ ஒப்பந்த வாழ்வில் தடுமாறி திசைமாறிப்போகும் நிகழ்வுகள் ஏராளம் உண்டு. இவர்களின் மனங்கள் முறிவதால் குடும்ப வாழ்வின் உறவும் ஒன்றிப்பும் இல்லாது போகிறது.

சேர்ந்து வாழ மனமில்லாமலும், பிரிந்து போக முடியாமலும் வாழும் நிலையில் நான் காலத்தைக் கடத்தி வந்தது, எனக்குத் தெரியும்தானே! எல்லாம் தெரியும் என்ற பெருமையில் அடுக்கடுக்காய் தவறுகளைச் செய்ததும் எனக்குத் தெரியும்தானே!

உறவு என்று நடித்து, பிரிந்து வாழ்வதைப் பழக்கமாக்கிக் கொண்டதால் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதை மறந்து விட்டேனே!




நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.

## செபம்:

**அன்பின் இயேசுவே! எங்களை நல்ல குடும்பமாக உலகுக்குக் காட்டிக் கொண்டு குடும்பமாக வாழாது, பிளவுபட்டு நிற்கும் கணவர்களையும் மனைவிகளையும் நீர் ஒரு போதும் கைவிடாதேயும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:**

**நீடாடை கழற்றவே,<br>கோடாகோடிக் காயங்கள்<br>இரத்தம் ஆறாய் பெருகி,<br>வேதனையால் வருந்தி எங்கே போறீர்**

# பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகள் களையப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

கல்வாரி மலை உச்சியில் ஒரு நாடகம் அரங்கேறியது. அது ஆடை உரியும் ஒரு காட்சிப் படலம். அடிகளால் ஏற்பட்ட காயங்களோடு என் நீண்ட ஆடை ஒட்டியிருந்தது. வீரர்கள் அதை உரிந்தார்கள். அப்போது அக்காயங்கள் மீண்டும் திறந்தன. ஏற்கனவே பட்ட வேதனைகளை மீண்டும் ஒருமுறை நான் அனுபவித்தேன். அத்தோடு என் மானமும் காட்சிப் பொருளானது. எல்லோரின் நகைப்புக்கும் ஆளானேன். உன் இரகசிய உடல்சார்ந்த பாவங்களுக்காகவே நான் பகிரங்கமாக அப்போது அவமானப்பட்டேன்.

### சிந்தனை:

தவறான இணைய பயன்பாட்டால் திருமண உறவின் புனிதம் பறிபோய்விட்டது. இது வியாபாரத் தொழிலாக புதிய உருவம் எடுத்துள்ளது. கணவன் மனைவி இவர்களின் புனிதமான உறவு அந்நியர்களின் தலையீட்டால் பங்கப்படுத்தப் படுகிறது.

ஒழுக்கத்திற்குப் புறம்பான உறவுகளே பாவங்களாகி விட்டன. பல இளைஞர்கள் திருமணத்திற்கு முன்னரே இப்பாவத்தால் தங்கள் புனிதத்தை இழந்து விடுகிறார்கள்.

திருமண வாழ்வின் உன்னதத்தை கானாவூர் திருமணத்தில் குறைவை நிறைவு செய்ததின் வழியாக இயேசு நமக்கு எடுத்துரைத்தார்.

நானும் நமது உறவுகளை அன்பின் மூலம் புனிதப் படுத்த முயற்சித்தேனா?

மனமே நீ பதில் சொல்.

## செபம்:

**அன்பின் இயேசுவே!
உம் திருக்
குடும்பத்தின்
புனிதத்தை,
புரிந்துணர்வு, அன்பு,
விட்டுக்கொடுக்கும்
மனப்பான்மை
மூலமாக
மேம்படுத்தினீரே.
அதைபோல்
நாங்களும் குடும்ப
உறவுகளை
ஆன்பினால்
கட்டிக்காக்க வரம்
தாரும். ஆமென்.**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **நீட்டிய கால் கரத்தில்,
நீண்ட இரும்பாணிகள்
நிஷ்ட யூதர் அறைந்தும்,
நேசத்திலே வெந்து பலியாகினீர்**

# பதினொன்றாம் நிலை

## இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

என் சாவுக்குக் கொலைகாரர் தந்த படுக்கை சிலுவை. கைகளிலும், கால்களிலும் ஆணிகள் ஏறியதும் என் உடல் சிலுவையோடு ஒன்றாக ஒட்டியது. வதைப்போருக்கு இரக்கம் இல்லை. பழிப்போருக்கு எல்லை இல்லை. இறப்பதைப் தவிர எனக்கும் இனி வேறு வழி இல்லை. சிலுவையை உயர்த்தி நட்டு வைத்தார்கள். நாடி நரம்புகள் எல்லாம் அறுந்து போக, நான் உன்னைத்தான் நினைத்தேன். இப்போதாவது திருந்தமாட்டாயா என்று ஏங்கினேன்.

## சிந்தனை:

பல குடும்பங்கள் இன்று இரும்பால் செய்யப்படாத ஆணிகளில் தொங்குகின்றன. வறுமை, வெறுமை, தனிமை என்ற ஆணிகள் இவற்றுள் சில, செலவுகளை ஈடு செய்ய முடியாத நிலையில் வறுமையும், உறவுகள் அறுந்த நிலையில் தனிமையும் வீட்டுக்குள்ளே விருந்தாளிகளாக நுழைந்துவிட்டன.

வறுமை, வெறுமை, தனிமை என்ற ஆணிகளில் தொங்கி வேதனைகளோடு ஒட்டி வாழ்வது தான் குடும்ப வாழ்வு என்றால் நிம்மதியைத் தேடி சிலுவையில் தொங்கும் இயேசுவிடம் வரவில்லையே! எனக்குத் துன்பங்கள் வந்த போது மட்டும் என்னைப் புரிந்து கொண்ட நான் மற்றவர்களுக்கு துன்பங்கள் வரும்போது அவர்களைப் புரிந்து கொள்ளவில்லையே! நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.




## செபம்:

**அன்பின் இயேசுவே! வறுமையும், வெறுமையும் தனிமையும் ஒன்று சேர்ந்து வாட்டும் குடும்பங்களை நீர் அறிவீர். இன்னல்களிலும் இவர்கள் இன்பமாய் வாழ இவர்களுக்கு வழிசெய்யும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **சிலுவைப் பீடமேறி,
மும்மணி நேரம் தொங்கி
வான் பிதாவை வேண்டி,
ஆருயிர் ஒப்படைத்து பலியாகினீர்**

# பனிரெண்டாம் நிலை

## எல்லாம் நிறைவேற்றிய இயேசு சிலுவையில் உயிர் விடுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

மூன்று மணி நேரம் மூன்று ஆணிகளில் தொங்கினேன். சில பெண்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்துகொண்டார்கள். கைவிடப்பட்ட நிலையில் தனிமையை உணர்ந்தேன். கொடிய வேதனைப்பட்டு என் அப்பாவை அழைத்து, நீருமா என்னை கைவிட்டீர் என்று கதறி அழுதேன். மனதைச் சற்று தேற்றியபின் நீர் என்னிடம் ஒப்படைத்த அனைத்தையும் நான் பிரமாணிக்கத்தோடு நிறைவாகச் செய்து முடித்துவிட்டேன், உம்மிடம் வருகிறேன் என்றேன். அப்போது உன்னையும் நினைத்தேன். நீ எப்போது மனம் மாறுவாயோ என்று எண்ணியவாறே இறந்தேன். என் கண்கள் மூட, தலையும் கீழே சரிந்தது.

## சிந்தனை:

குடும்பங்களில் இறப்புகள் தவிர்க்க முடியாத நிகழ்வுகள். ஒருவரின் இறப்பு குடும்பத்தில் உள்ள எல்லோருக்கும் துக்கத்தைத் தருகிறது. இறப்புகள் எல்லாம் அவர்களுக்கு இழப்புகளே. உயிர் போகும்நிலை உடலுக்கு மட்டும் அல்ல ஆன்மாவுக்கும் இருக்கிறது. வானகத் தந்தையை எக்காலத்துக்கும் விட்டுப்பிரிவதே ஆன்மாவின் சாவு. உடல் இறந்துபோவது இயற்கை. ஆனால் ஆன்மாவைக் கொல்லுவது கொடிய பாவம். என் ஆன்மாவை வாழவைத்து வான் வீட்டுக்கு வேண்டிய விடயங்களை இவ்வளவு காலமும் தேடாதிருந்தது உண்மைதானே!

தங்கத்தால் சிலுவையைச் செய்து சங்கிலியில் தொங்கவிட்ட நான் அதை வெறும் அலங்கார ஆபரணமாக மட்டும்தானே அணிந்திருந்தேன். கடவுளின் சாவைச் சுமக்கிறேன் என்ற எண்ணத்தை மறந்து விட்டேனே!




நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.

## செபம்:

**அன்பின் இயேசுவே! எவரும் இறக்கும்போது எதையும் எடுத்துச் செல்வதில்லை. இந்த உலகில் உள்ளவை எல்லாம் அழிவுக்கு உரியவையே அழியாத வாழ்வுக்காக இவ்வுலகில் வாழ ஆண்டவரே எனக்கு உதவி செய்யும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **மரி தாய் மடிமீதில்,**
**மரித்த மகன் தாங்கி**
**ஏழு சோக வாட்களால்,**
**ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்**

# பதிமூன்றாம் நிலை

## இயேசுவின் உடல் தன் தாயின் மடியில் கிடத்தப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோஸ்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

எனக்கு இரு நண்பர்கள் இருந்தார்கள் நான் இறந்ததை அறிந்ததும், உடனே அங்கே ஓடி வந்தார்கள். என் உடலைச் சிலுவையில் இருந்து இறக்கினார்கள். துயரத்தில் ஆழ்ந்திருந்த என் அம்மாவுக்கு ஆறுதல் சொல்லி அதை அவர் மடியில் வைத்தார்கள். உன் இதயத்தை ஒரு வாள் காயப்படுத்தும் என்ற சிமியோனின் அன்றைய வாக்கு அப்போது உண்மையாயிற்று. அன்னை மரியா தன் மகனுக்காக மட்டும் அல்ல, உனக்காகவும் அவர் ஆறாத்துயரத்தில் மூழ்கினார்.

## சிந்தனை:

முதிர்ந்த வயதில் பெற்றோர் இறப்பது இயற்கையின் நியதி, ஆனால் வாழவேண்டிய இளம் வயதில் வாலிபப் பிள்ளைகள் இறப்பதுதான் பெற்றோர்க்கு தாங்க முடியாத பேரிடி. அதுவும் அகால மரணத்தால் வாலிபர்கள் இறப்பதை அவர்கள் ஏற்கவே மாட்டார்கள்.

இளம் வயதினர் தம் மதியீனத்தால் இறக்கும் தருணங்களை விலக்கி வாழ முயற்சிகள் எடுக்க வேண்டாமா? தேவதாயின் மடியில் காலமெல்லாம் வாழ்வதற்குப் பதிலாக நான் உலக செல்வங்களின் பிடியில்தானே காலாகாலமாக வாழ்ந்து என்னைப் பழக்கப்படுத்திக் கொண்டேன்.

நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.

## செபம்:




**அன்பின் இயேசுவே!
இளம் வயதில் தங்கள்
பிள்ளைகளை இழந்து
வேதனைப்படும்
பெற்றோருக்கு நீரே
ஆறுதல் கூறும்.
ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்: கர்த்தரின் உடல்தனை,
கல்லறைக்குள் அடக்க
உத்தானம் ஜீவனுமாய்,
உயிருடன் எழுந்து எப்போ வருவீர்**

# பதினான்காம் நிலை

## இயேசுவின் திருவுடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோஸ்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

என் நண்பர்கள் வெள்ளைத்துணியை விரித்து நறுமணப் பொருட்களைப் பரப்பினார்கள். அதன்மேல் என் உடலை வைத்தார்கள். உடல்மேலும் அவற்றைத்தூவி நன்றாகச் சுற்றிக் கட்டினார்கள். பின்னர் அதை மரியாதையாகத் தூக்கிக் கொண்டுபோய் கல்லறையில் வைத்தார்கள். பின்னர் அதன் வாயிலை மூடிச் சென்றார்கள். யூதத் தலைவர்களோ நான் வெளியே வராதவாறு கல்லறைக்குக் காவலர்களை நிறுத்தினார்கள்.

## சிந்தனை:

கல்லறைத் தோட்டத்தில் இறந்தவர்களுக்குச் சமாதிகள் எழுப்பப்படுகின்றன. இக்கல்லறைச் சமாதிகள் குடும்பங்களின் சொத்துக்களாக இருக்கின்றன. இவற்றில் இறந்தவரின் பெயருடன் அவரின் பிறப்பு, இறப்பு ஆகிய குறிப்புகளை எழுதி வைக்கிறோம்.

இறந்தவரின் குறிப்பு கல்லறையில் எழுதப்பட்டாலும், வாழ்வோர் ஏட்டில் பதிவாக வேண்டும் என்ற ஞானத்தோடு அவர் வாழ்ந்திருக்க வேண்டாமா? மரணம் எனக்கு எவ்வேளையும் வரலாம் என்பதால், விண்ணகம் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு கடந்த காலத்தில் நான் வாழவில்லையே?

நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.

## செபம்:

**அன்பின் இயேசுவே! இறந்தோரை அடக்கம் செய்யும் நிகழ்வுகளில் நான் பங்கெடுக்கும் போது நானும் ஒருநாள் அடக்கம் செய்யப்பட இருப்பதால் விண்ணகத்தை நினைத்து வாழ எனக்கு உதவி செய்யும். ஆமென்.**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:**

**கல்லறைக்குள் அடங்கா,**
**இறைவனின் மைந்தனே**
**உத்தானம் ஜீவனுமாய்,**
**உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.**

# பதினைந்தாம் நிலை

## இயேசு சாவை வென்று உயிர்த்தெழுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

நான் இறந்ததும் என் சீடர்கள் எல்லோரும் தடுமாறிப் போனார்கள். அச்சத்தால் நடுங்கிய அவர்கள் என் அம்மாவோடு மாடி வீடொன்றில் ஒளிந்து கொண்டார்கள். என் உடலுக்கு நறுமணத் தைலம் பூசவந்த பெண் ஒருவருக்கு உயிர்த்த மகிமையடைந்த என் உடலைக் காண்பித்தேன். பின்னர் திருத்தூதர்கள், எம்மாவு சீடர்கள் எனப் பலருக்கு என்னைக் காண்பித்தேன். மனம்மாறி என்னை நம்பும் ஒருவருக்கு நான் இன்றும் மகிமையடைந்த என் உடலைக் காண்பித்துக் கொண்டே இருக்கிறேன்.

### சிந்தனை:

இருந்தாலும் இறந்தாலும் நம்புவோர் வாழ்கிறார்கள். குடும்பத்தில் இறந்தோரின் பெயர்களை பிறக்கும் பிள்ளைகளுக்கு வைத்து இறந்தவர்கள் நம்மோடு வாழ்வதை நினைவு கூறுகின்றோம். நம்பிக்கையோடு வாழ்ந்தவர்கள் விட்டுச் சென்ற பசுமையான நினைவுகளை நாம் என்றும் மறப்பதில்லை.

இவ்வுலகில் நாம் வாழ்வது சிறிது காலமே. இச்சிறிய வாழ்வுக்காக நிலையான பெரிய வாழ்வை நான் பலியாக்கி-விட்டேனா? அன்பு, அமைதி, உண்மை, நேர்மை, நீதி, இரக்கம், தியாகம், மன்னிப்பு, மகிழ்ச்சி போன்ற மதீப்பீடுகளிலும் இறை வார்த்தைகளிலும் தேவநற்கருணையிலும் உயிர்த்த இயேசுவின்

மகிமையடைந்த உடலைக் காண முயற்சிகள் எடுத்துள்ளேனா? நான் செய்தது சரிதானா? மனமே நீ பதில் சொல்.




## செபம்:

**அன்பின் இயேசுவே! திருமுழுக்கில் எனக்குத் தொடங்கும் நிலைவாழ்வு எவராலும் எதனாலும் தடைப்படாதிருக்க பார்த்துக் கொள்ளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

# இறுதிச் செபம்

## முதல்வர்:

கிறிஸ்து இல்லாமல் இவ்வுலகம் இருளில் மூழ்கி விடுகிறது. இயேசு இறந்தபோது, எல்லாம் நம்பிக்கையற்றதாகத் தெரிந்தது. ஆனால் இது முடிவல்ல என்று நமக்குத் தெரியும். இயேசு இறந்த மூன்றாம் நாள் மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்று நமக்குத் தெரியும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஒளி இறப்பையும் தாண்டி நமக்குப் புத்துயிர் அளிக்கிறது.

## செபிப்போமாக!

**எங்கள் தந்தையாகிய இறைவா, உயிருள்ள நிலைவாழ்வில் உம்மோடு ஒன்றித்திருக்க, உமது இறப்பிலும் நாங்கள் ஒன்றித்திருக்கிறோம். ஆண்டவரே, பாவ வழிகளிலிருந்து விலகி உமது பரிசுத்த வழிகளில் வளர எங்களுக்குக் கற்றுத் தாரும். ஆமென்.**

முதல்வர்: திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

**ஒரு பரலோக மந்திரம், அருள் நிறைந்த மந்திரம் மற்றும் திருத்துவ செபம்.**

முதல்வர்: இயேசு கிறிஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக, புனித வியாகுல மாதாவே!

**அனைவரும்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

# திருச்சிலுவைப் பாதை 5



www.iraivarthai.org/radio

# திருச்சிலுவைப் பாதை-5

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!

**அனைவரும்: ஆமென்.**

## தொடக்கச் செபம்

சிலுவைப்பாதை என்பது துன்பத்தின் பாதை, கரடுமுரடான பாதை, கண்ணீரின் பாதை மட்டுமல்ல. இது இயேசுவின் அன்பையும் தியாகத்தையும் எண்பிக்கும் பாதை. "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்." (மாற்கு 8:34) என்ற இயேசுவின் குரல்கேட்டு, அவரின் மதிப்பீடுகளின் வழி நடந்து, நம்மை சுமை தாங்கிகளாக அவரைத் தொடர அழைக்கும் பாதை. தவக்காலத்தில் மட்டும் நாம் நடத்தும் பாதையல்ல. தினமும் நாம் நடக்க வேண்டியப் பாதை.

இயேசுவின் பாடுகளை தியானித்து, கல்வாரி மலையில் உச்சம் தொட்ட அவரது அன்பினைச் சுவைக்க திறந்த உள்ளத்தோடு இச்சிலுவைப் பாதையில் இயேசுவைப் பின்செல்வோம்.

பாடல்: பழிகளை சுமத்தி பரிகசித்தார், உயிர்
**பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# முதல் நிலை

## பிலாத்து இயேசுவுக்கு அநீதத் தீர்ப்பை வழங்கி அவரை சிலுவைச் சாவுக்குக் கையளிக்கின்றான்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

கள்வனை பிடிப்பது போல, இயேசுவைப் பிடித்து வந்து தீர்ப்பிடுகின்றார்கள். பரிசேயரும் சதுசேயரும் பொறாமையினால் வெறிபிடித்த வேங்கைகளாக சூழ்ந்து நிற்க, யூத தலைமைச் சங்கத்தார் மற்றும் பிலாத்துவின் முன்னிலையில் கத்தாத செம்மறிபோல் இயேசு தனியாளாய் நிற்கிறார்.

பிலாத்துவிற்கு உண்மைநிலை தெரிந்திருந்தும், தனது மனைவியால் எச்சரிக்கப்பட்டும், நயவஞ்சகர்களுக்கு பயந்து பதவி ஆசையில் இயேசுவுக்கு சிலுவை மரணத் தீர்ப்பளித்து, முதுகெலும்பில்லாத கோழையாக கைகழுவுகின்றார். உரோமையின் ஆட்சியைவிட இறையாட்சி உயர்ந்தது என்பதை ஒருவரும் உணரவில்லை. பரபா என்ற கொலையாளியை விடுதலை செய்துவிட்டு, பாவமறியா பரிசுத்தரான இயேசுவைக் கொலைகளத்திற்கு அனுப்பும் அளவிற்கு இவர் செய்த குற்றம்தான் என்ன?

# செபம்:




அன்பு இயேசுவே! நீதிக்கு உறுதுணையாக நிற்காமலும் நன்மை தீமை தெரிந்திருந்தும், முழு அறிவோடு தீமையைத் தேர்ந்து கொண்டதாலும் நாங்கள் கட்டிக் கொண்ட பாவங்களை மன்னித்தருளும். ஆமென்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **தாளாச் சிலுவை சுமக்க வைத்தார், உம்மை**
**மாளாத் துயரால் துடிக்க வைத்தார்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# இரண்டாம் நிலை

## இயேசுவின் மீது பாரமான சிலுவையைச் சுமத்துகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

காண்போர் கண்டு வியக்கும் அளவுக்குக் கனமான சிலுவையை இயேசுவின் தோள்மீது சுமத்துகிறார்கள். உலகினரின் பாவமனைத்தும் ஒருசேர அவரின் தோள்மீது அமருகிறது. வேதனையின் மறு பெயர்தான் சிலுவை. விசாரணை என்ற பெயரில் அவர் அடைந்த அவமானமும், வினோதப் பிரியர்களின் வினாக்கள் தந்த வேதனையும், எல்லாவற்றிக்கும் மேலாக, குற்றமொன்றும் இல்லாதிருந்தும் அவருக்குக் கிடைத்த கொலைத் தண்டனையும் ஏற்கனவே உள்ளத்தை அழுத்திக் கொண்டிருக்க, இப்போது அவமானத்தின் சின்னமாகிய சிலுவை உடலையும் பதம்பார்க்கிறது.

ஆனாலும் பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும் என்பதுபோல பாவப்பட்டச் சிலுவை, மகிமையின் சின்னமாக சிகரத்தைத் தொடுகிறது. காரணம் அப்பழுக்கில்லாத உண்மை அன்பினால் அது சுமக்கப்பட்டதால் புனிதமடைகிறது. நாம் சிலுவையைச் சுமத்துபவர்களா? சுமப்பவர்களா?

.

# செபம்:




**அன்பு இயேசுவே! எம் சுயநலத்தின் சிலுவைகளை பிறர்மீது சுமத்தி, நான் மட்டும் மகிழ்ந்திருந்த நேரத்திற்காகவும், எம் குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒருவர் மற்றவருடைய சுமைகளைப் புரிந்து கொண்டு, தோள்கொடுத்து உதவாமல் இருந்ததற்காகவும் எங்களை மன்னித்தருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **விழுந்தீர் சிலுவை பளுவோடு, மீண்டும்**
**எழுந்தீர் துயர்களின் நினைவோடு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# மூன்றாம் நிலை

## இயேசு மனம், உடல் சோர்ந்து தள்ளாடி முதல்முறையாக தரையில் முகம் குப்புற விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

கால்கள் தடுமாறுகின்றன. கைகள் நடுங்குகின்றன. கண்கள் இருண்டுபோயின. தளர்ந்து போன நிலையில் முதன்முறை தரையில் சரிகிறார். அவர் தாகம் கொண்டவர். நம் பாவங்களுக்காக நொறுக்கப்பட்டு, கல்வாரி பலியால் நம்மை மீட்க வேண்டும் என்ற தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் இலட்சியத்தாகம் அது. அதை நிறைவேற்றும் வேகம் கொண்டு எழுந்து நடக்கிறார். விண்ணிலிருந்து வந்தவரை மண்ணில் தள்ளி மிதிக்கும் நம் பாவநிலை மாறுமா? இதை நம் வீழ்ச்சி என்று உணர்ந்திடும் விவேகமும், மீண்டு எழுந்திடும் வேகமும் நம்மிடம் உண்டா?

## செபம்:




**அன்பு இயேசுவே!
வாழ்வின்
துன்பங்களாலும்,
சோதனைகளாலும்,
நம்பிக்கையில்
நடைதளர்ந்து
வீழந்த நாங்கள்,
விதி என்று
சொல்லி
சோம்பேறிகளாய்
கிடந்ததற்காக
எங்களை
மன்னித்தருளும்.
ஆமென்.**

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்: **தாங்கிட வொண்ணாத் துயருற்றே, உம்மைத்
தாங்கிய அன்னை துயருற்றாள்.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# நான்காம் நிலை

## இயேசு தன் தாய் மரியாளைச் சந்திக்கின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

ஒரு தாய் தன் சேயைக் காணக்கூடாத கோலத்தில் அன்னைமரி இயேசுவைச் சந்திக்கிறார். குற்றவாளிபோல் தன்மகன் தெருவில் கழுமரம் தூக்கிச் செல்வதைக் கண்டு தொண்டையை அடைக்கும் துக்கம், இதயமே வெடித்துவிடும் வேதனை அவருக்கு. ஆசையாய் நட்டுவளர்த்த இளநாற்று அவசரமாய் அறுவடைக்கு தயாராகிவிட்டதே! என்று மரியாள் உள்ளம் குமுறுகிறார். கர்ப்பத்திலே காத்துக்கிடந்த கற்பனைகள் கண்முன்னே கருகுகிறது. ஆனாலும் இருவரின் சந்திப்பில் இறைவனின் திட்டம் இன்னும் திடப்படுகிறது. மீட்பிற்கான சிலுவையை இரு இதயங்களும் இணைந்தே சுமந்தன. துன்புறும் மகனுக்கு வெறும் ஆறுதல் கூற அன்னை வரவில்லை. அவரை உற்சாகப்படுத்தி உண்மையின் பாதையில் தொடர்ந்து செல்ல ஊக்கப்படுத்தவே அவர் வந்தார். அவர் கண்களில் கண்ணீர் தெறிக்கலாம், உள்ளத்தில் தெளிவான நிலை.

இந்த உறுதி இன்று எத்தனை தாய்மாருக்கு உண்டு?

# செபம்:




அன்பு இயேசுவே! பெற்றத்தாய்க்கு பெருமையைத் தேடித்தருவதை விடுத்து அவமானம், அவமரியாதை தந்ததற்காகவும், உண்மை வழியில் நடக்க பிள்ளைகளை ஊக்கமூட்டாததற்-காகவும் எங்களை மன்னித்தருளும். ஆமென்.

| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்:

**மறுத்திட முடியா நிலையாலே, சீமோன்**
**வருத்தினார் தன்னை உம்மோடு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஐந்தாம் நிலை

## இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

'வாருங்கள் அவரோடு போவோம், அவரோடு மடிவோம்' என்றவர்களை கண்ணுக்கெட்டிய தூரம்வரை காணவில்லை. அன்பின் வெளிப்பாடான முத்தத்தை நயவஞ்சகத்தின் வெளிபாடாக்கி காட்டிக் கொடுத்தான் ஒருவன்.

'எல்லோரும் உம்மைவிட்டுப் போய்விட்டாலும், நான் உம்மைவிட்டு விலகமாட்டேன்' என்றவர் மும்முறை மறுதலித்துவிட்டார். எனவே இயேசு துன்பம் குறைக்கும் துணையேதுமின்றி, தனியாளாய் சிலுவை சுமக்கிறார். இரும்பையும் இளகச் செய்யும் அவரின் பரிதாப நிலையைக் கண்டு கல்நெஞ்சம் கொண்ட கயவர்கள் பயப்படுகிறார்கள். எனவே அவர் வழியிலேயே இறந்திடாதிருக்க சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோனை, சிலுவை சுமக்க கட்டாயப்படுத்தினர். தெய்வீகத்திற்கே மனிதனின் உதவி தேவையாகிறது. சீமோனின் உதவிடும் கரங்கள் இயேசுவோடு இணைய சிலுவைப் பயணம் தொடர்கிறது.

நமது கரங்கள் உதவிடும் கரங்களா? உபத்திரவத்தின் கரங்களா?

## செபம்:




**அன்பு இயேசுவே! பிறருக்கு உதவி செய்வதில் பிறருக்காக கண்ணீர் சிந்துவதில் செயற்கைத் தனத்தோடு செயல்பட்டதற்காகவும் பிறருக்கு உதவியாக இல்லாமல் தொல்லையாக செயல்பட்டதற்காகவும் மன்னித்தருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **நிலையாய் பதிந்தது உம் வதனம், அன்பின்
விலையாய் மாதின் சிறுதுணியில்.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஆறாம் நிலை

## இரத்தம் வழிந்தோடிய இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

இரத்த வியர்வையோடு புழுதியும் சேர்ந்து காய்ந்து போனதில் கோரமாக காட்சியளிக்கிறது இயேசுவின் முகம். கடுமையான களைப்பினால் கண்களும் மங்கிப்போயின. புனிதமுகம் காயங்களால் களையிழந்து காணப்படுவதைப் பொறுக்க முடியாமல், நிலவின் கலங்கம் துடைக்க வரும் வெண்மேகம் போல், தடைகளைத் தாண்டி குருதிபடிந்த இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள் - வெரோணிக்காள்.

அவர் கொண்டிருந்த அன்பு இத்தகைய துணிச்சலை அவருக்கு அளித்தது. தனக்கு என்ன நடக்கும்? என்பது பற்றிக் கவலையில்லாமல் என்னால் இயேசுவுக்கு எவ்வித உதவி செய்யமுடியம்? என்று மட்டுமே சிந்தித்து செயல்படுகிறார். தங்களில் பலமிருந்தும் பயத்தினால் பலவீனமாகி ஒதுங்கிச் செல்பவர்களுக்கும், பாதை மாறுகிறவர்களுக்கும் இவரின் வீரச்செயல் ஒரு பாடம். பிறரின் துயர் துடைக்கும் துணிவும், தூயநல் அன்பும் நம்மிடம் உண்டா?

# செபம்:

**அன்பு இயேசுவே!
அனைவரிலும்
இறைச்சாயலைக் கண்டு
அன்பு செய்வதை
விடுத்து அவதூறாய்
பேசி, பிறரின்
நற்பெயருக்கு கறை
உண்டாக்கிய எம்
செயல்களை
மன்னித்தருளும்.
ஆமென்.**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததனால், அந்தோ
சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறையாகத் தரையில் விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

கல்வாரி பாதையின் கற்கள் இயேசுவின் கால்களை இடருகின்றன. வசை பாடும் சொற்கள் அவரை வலுவிழக்கச் செய்கின்றன. வலியில் நாடி நரம்புகள் எல்லாம் ஆடி நடுங்குகிறது. உள்ளுக்குள் உயிர் ஒடுங்குகிறது. சிலுவை நடுங்கும் கரங்களிலிருந்து நழுவ, இரண்டாம் முறை தடுமாறி விழுகிறார். உடலின் வலுவின்மை உண்மைப் பாதையைத் தொடர தடைவிதிக்க முடியவில்லை. எனவே எடுத்த காரியம் முடிக்க, மறுபடியும் எழுந்து வீரத்தோடு நடக்கிறார்.

சோதனைகளுக்கும், தீமைகளுக்கும் எதிராக நாம் இலட்சியத்தில் நிலைத்து நின்றால், நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று நமக்குப் பாடம் புகட்டுகிறார். வாழ்வின் சறுக்கல்களில் சறுக்கி விழுந்தாலும், உள்ளம் சோர்ந்து போகாமல் எழுந்து, இலட்சியங்களை நோக்கி நடைபயில நாம் தயாராக இருக்கின்றோமா?




## செபம்:

**அன்பு இயேசுவே! நாங்கள் வீழ்ந்து கிடப்பதை உணராமலும், வீழ்ச்சியை ஏற்று மாற்றம் தேடாமலும், அதை மறைக்க விளக்கங்கள் கூறி வீணில் வாழ்ந்ததற்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:**

**விழிநீர் பெருக்கிய மகளிருக்கு, அன்பு**
**மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# எட்டாம் நிலை

## அழுது புலம்பும் எருசலேம் நகரத்துப் பெண்களை இயேசு சந்திக்கிறார்.

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

ஒரு வாரத்துக்கு முன்பு ‘ஓசன்னா’ என்று பாடி வரவேற்றவரை ஒரு கொலையாளியைப் போல கொடுமையாக இழுத்துச் செல்வதைக்கண்டு எருசலேம் நகரப் பெண்கள் உளம் நொந்து அழுகின்றனர். இம்மகளிரின் அழுகை இயேசுவின் வலியைக் குறைத்திருக்கலாம். ஆனால் மீட்பைப் பெற்றுக் கொள்ள நேரம் வரும்போது அழுகையா? ஏனென்றால் இச்சிலுவைப் பாடுகள். அவநம்பிக்கையிலும், பயத்திலும் சாவை நோக்கிச் செல்லும் சவ ஊர்வலம் அல்ல. மாறாக தமது ஆடுகள் வாழ்வு பெற, அதையும் நிறைவாய் பெற துன்பத்தை தாங்கி, துணிச்சலோடு இயேசு மேற்கொள்ளும் ஒரு புனிதப்பயணம்.

எனவே இவர்களின் கண்ணீரில் கலந்திருக்கும் மனிதாபிமானத்திற்கு இயேசு அங்கீகாரம் வழங்கி ஆறுதல் கூறினாலும், அவருக்காக அழவேண்டாம் என்கிறார். இயேசுவின் பாடுகளை தியானிக்கும் போதும், துன்புறும் மனிதரைக் காணும்போதும் நம்மில் வெளிப்படும் கண்ணீர் மனமாற்றத்தின் அடையாளமா? அல்லது ஏமாற்றுத்தனத்தின் வெளிவேடமா?

## செபம்:

**அன்பு இயேசுவே!**
**அழுவோரோடு அழாமல்,**
**பிறரின் துயர் கண்டு**
**சந்தோஷப்பட்டும்,**
**சற்றும்**
**பொறுத்தமில்லாத**
**விமர்சனங்களை**
**வழங்கியும், வாழ்ந்த**
**நேரத்திற்காக**
**எங்களை**
**மன்னித்தருளும்.**
**ஆமென்.**




| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

**பாடல்:**

**மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர், கால்**
**ஊன்றி நடந்திடும் மெய் நொந்தீர்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

கல்வாரியை நெருங்கும் வேளையில் சிலுவையின் பளுவால் தோள்கள் துவண்டிட, களைப்பினால் கால்கள் நடக்க மறுத்து புரட்சி செய்ய, தாகத்தினால் நா வறண்டு இழுக்க இயேசு மூன்றாம் முறையாய், சிறகொடிந்த பறவையாய் கீழே விழுகிறார். மனிதர்கள் தவறிவிட்ட மாணிக்கத்தை, பூமித்தாய் பூரிப்போடு தாங்கிப்பிடித்து, கட்டியணைத்துக் கல்வாரிப்பலி நிறைவேற்ற வாழ்த்தி வழியனுப்புகிறாள். உண்மைக்குச் சான்றாகும் வரை ஊக்கம் குறைவதில்லை என்று, தொடர்ந்து கல்வாரி நோக்கி பயணிக்க, உறுதியோடு இயேசு எழுகிறார்.

இறைவார்த்தையாம் உண்மையைப் பற்றிக் கொண்டு வாழ்வதில், அதன்படி நடப்பதில் தொடக்கத்தில் இருக்கும் ஆர்வம் நாளாக நாளாக நம்மில் குறைகிறது. உண்மைக்காக வாழ்க்கையில் வரும் துன்பங்களும், இடர்பாடுகளும் நமது மனவுறுதியை சிதைக்கின்றன. அப்போதெல்லாம் நாம் முதுகெலும்பற்ற மனிதராய் முடங்கி, அடங்கி போகிறோமா? அல்லது முயன்று எழுகிறோமா?

## செபம்:




அன்பு இயேசுவே!
இறையரசு பயணத்தில்
இன்னல்கள்
இடர்பாடுகளைச்
சந்திக்கும் போது,
சாட்சிய
வாழ்விலிருந்து
பின்வாங்கி,
நம்பிக்கை இழந்து
வாழந்த
நிலைக்காக
எங்களை
மன்னித்தருளும்.
ஆமென்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **உடைகள் களைந்திட உம்மைத் தந்தீர், இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகள் களையப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**


## முதல்வர்:

இயேசுவின் ஆடை, விலைமதிப்பில்லாத அவரது இரத்தத்தில் நனைந்து, காயங்களோடு ஒட்டிக் காய்ந்து போனது.. கயவர்களின் வெறிச்செயலால், அவரின் சதையும் நார்நாராய்க் கிழிகிறது. ஒரு ஆடு வெட்டப்பட்ட பின்புதான் தோலுரிக்கப்படும். அஃறிணைக்கு காட்டப்படும் அன்புகூட ஆண்டவனுக்கு காட்டப்படவில்லை. அரக்கத்தனத்தின் உச்சக்கட்டம் இந்த அவமானச் செயல்! பன்னிரண்டு ஆண்டுகள் இரத்தப்போக்கால் துன்புற்ற பெண்ணின் இரத்தப்போக்கை நிறுத்திய ஆடை, இயேசுவின் இரத்தமடைகளைத் திறக்கிறது.

இன்று உலகில் நடக்கும் அனைத்து உரிமை பறிப்புச் செயல்களும், ஆண்டவரின் ஆடைகளைக் களையும் அவமானச் செயல்களே. நம்மில் புறணி மற்றும் அவதூறு பேசும் ஒவ்வொருவரும் அடுத்தவரை நிர்வாணமாக்கி இழிவுபடுத்துகின்றோம். நமது வாழ்க்கைச் சூழலில் அநீதியைக் கொண்டு நீதியை உரிக்கும் போது, துணிச்சலோடு நின்று ஆயனுக்குச் சான்று பகர்கின்றோமா?

# செபம்:

**அன்பு இயேசுவே! பிறரை நிந்தித்து அவமானப்படுத்தி, அவர்களின் சுதந்திர ஆடையைக் களைந்து அடிமையாக்கி, தன்மானத்தை இழக்கச்செய்த எம் செயல்களுக்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **பொங்கிய உதிரம் வடிந்திடவே, உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதினொன்றாம் நிலை

## இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

இரக்கமற்ற அரக்கர்கள் இயேசுவை சிலுவையில் கிடத்தி, கைகளிலும் கால்களிலும் ஆணி அடிக்கிறார்கள். ஓங்கி அடிக்கும் ஒவ்வொரு முறையும் அவரின் நாடி நரம்பெல்லாம் அறுந்து போகிறது. கொப்பளித்து வெளியேறும் குருதியில் உயிர் தத்தளித்துத் துடிக்கிறது. மீட்பின் கீதம் நாம் கேட்க இந்த மூங்கில் தன்னையே துளையிடத் தருகிறது.

முடக்குவாதமுற்றவனை நடக்க வைத்தவர், 'இரையாதே' என்று புயலையும் அடக்கியவர், ஆணிகளுக்கு நடுவே சிக்குண்டு அடக்கமாய் கிடக்கிறார். இந்த அமைதியின் அரசருக்கு சிலுவைதான் சிம்மாசனம். முள்முடிதான் மணிமுடி. ஆணிகள் தான் செங்கோல். உண்மையின் அரசை சேர்ந்த அனைவருக்கும் அவைகளே அளவுகோல். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற பழிவாங்கும் கலாச்சாரத்தைக் கடைபிடிக்கும் நமக்கு அமைதியை, மன்னிப்பை சிலுவையிலிருந்து போதிக்கின்றார். இன்றும் மனிதர் தம் சுயநலத்தால், பொறாமையினால், அதிகார ஆசையால் மனசாட்சி இன்றி மற்றவர்களை ஆணிகளுக்கு இரையாக்கும் போது தட்டிக் கேட்கும் துணிவு நம்மிடம் உண்டா?




## செபம்:

**அன்பு இயேசுவே! பணபலம், படைபலம் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து உண்மையை கொணர்வோரை அலட்சியப்படுத்தி பலியாக்கிய தருணங்களுக்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **இன்னுயிர் அகன்றது உமைவிட்டு, பூமி
இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# பனிரெண்டாம் நிலை

## எல்லாம் நிறைவேற்றிய இயேசு சிலுவையில் உயிர் விடுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

கல் தூணில் கட்டி அடித்து, முள்முடிச் சூட்டி பளுவான சிலுவையைச் சுமத்தி, ஆணிகளால் அறைந்து இயேசுவுக்கு அவர்கள் தந்த ஆறுமணிநேர வேதனை முடிவு பெறுகிறது. அன்று சிலுவையில் அறைவதில் இரு வழக்கங்கள் இருந்தன. நகருக்குள், “எங்கள் சமூகத்தவர்கள்“ என்றும், நகருக்கு வெளியே “எங்கள் சமூகத்தவன் அல்ல” என்றும் அறைவார்கள். இதில் இயேசுவை இரண்டாம் வகை மனிதனாகவே நினைத்து செயல்பட்டனர். தரணியோர் அனைவரையும் தாங்கிட வந்தவர் இயேசு. ஆனால், தாங்கும் தண்ணீரை தாங்காத தாமரையாக அவரை உதறிவிட்டு, கிழித்து நகருக்கு வெளியே தூக்கியெறிந்து விட்டனர். களிமண் குயவனைக் கூறுபோட்டு விட்டது. சிலைகள் சேர்ந்து சிற்பியைச் சிதைத்து விட்டன.

உயிர்பிரியும் நேரத்திலும், தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்து அன்பையும், மன்னிப்பையும் போதிக்கிறார். தனது தாயை நமது தாயாக அளித்து தனது வள்ளல் தன்மையை வெளிப்படுத்துகின்றார். ‘எல்லாம் நிறைவேறிற்று’ என்று தந்தையிடம் தன்னை ஒப்படைத்து கீழப்படிதலைக் கற்றுத்தருகிறார். கற்றுக் கொள்ள நாம் தயாரா?

# செபம்:

**அன்பு இயேசுவே! மனம் பொருந்திய அலட்சியத்தால் உம்மை உதாசினப் படுத்தியதற்காகவும், அன்பு, மன்னிப்பு, பரிவு, கீழப்படிதல் போன்ற உமது சிலுவையின் படிப்பினைகளை மறந்ததற்காகவும் எங்களை மன்னித்தருளும். ஆமென்.**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்:

**துயருற்றுத் துடித்தார் உளம்நொந்து அன்னை**
**உயிரற்ற உடலினை மடிசுமந்து,**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதிமூன்றாம் நிலை

## இயேசுவின் உடல் தன் தாயின் மடியில் கிடத்தப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

நாடியடங்கிய நாதன் இயேசு, சிலுவை அடியில், தாயின் மடியில் கிடத்தப்படுகிறார். மனித சாயலே இல்லாதவாறு சிதைக்கப்பட்ட தன் மகனை எலும்பும் தோலுமாக வாரி அணைக்கிறார், அன்னை மரியாள். தாய்மை இங்கே தவியாய்த் தவிக்கிறது. கல்லறைக்குச் செல்லும்முன் அவரின் சடலம் தாயின் கண்ணீரால் கழுவப்படுகிறது ‘கருவறை முதல் கல்லறை வரை’ தன் மகனை நிழலாய்த் தொடர்ந்து வார்த்தையைக் கேட்டு வாழ்வாக்கியவர். இந்த அன்னை கானாவூர் திருமணத்தில் கடவுளின் திருவுளம் வெளிப்பட காரணமாயிருந்தவர், கல்வாரியிலும் கடவுளின் மாட்சி வெளிப்படும் நாளை எண்ணிக் காத்திருக்கிறார்.

ஆதியிலே ஏவாள் அலகையின் வார்த்தையைக் கருத்தரித்து கீழ்படியாமையையும் சாவையும் பெற்றெடுத்தாள். அன்னை மரியாவோ, ஆண்டவரின் வார்த்தையை கருத்தரித்து கீழப்படிதலையும் வாழ்வையும் பெற்றெடுத்தவர். இயேசு இறப்பைத் தழுவினாலும், ஆண்டவர் வாக்களித்ததை நிறைவேறும் என்று இப்போது இன்னும் அதிகமாக நம்புகிறார். இறைவிருப்பத்திற்கு கீழ்ப்படிவதில் இந்த நம்பிக்கை நம்மிடம் உள்ளதா?

## செபம்:




**அன்பு இயேசுவே! இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாமலும், இறை விருப்பத்திற்கு கீழ்ப்படியாமலும் நம்பிக்கையின் நாயகியாகிய அன்னை மரியாளை அலட்சியப்படுத்தியும் நாங்கள் கட்டிக்கொண்ட பாவங்களை மன்னித்தருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு, நீர்**
**அடங்கிய கல்லறை உமதன்று,**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதினான்காம் நிலை

## இயேசுவின் திருவுடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

இயேசுவின் சீடருள் ஒருவரான அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பு, பிலாத்துவிடம் அனுமதிப் பெற்று இயேசுவின் உடலை எடுத்து யூத முறைப்படி நறுமண பொருட்களுடன் துணிகளால் சுற்றி புதிய கல்லறையில் அடக்கம் செய்தார். 'மனுமகனுக்கோ தலை சாய்க்கவும் இடமில்லை' என்ற கூற்று இங்கு உண்மையாகிறது. முதலும் முடிவும் இல்லாத, அதாவது சாகாத்தன்மை கொண்ட இறைவன், மனித நிலைக்கு இறங்கி சாவை ஏற்றுக் கொண்டார் என்றால், இது நமக்காக அவர் ஏற்றக் கொண்ட சாவு. நாம் அழியாமல் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள ஆயனின் உயிர்த்தியாகம் இது.

சாவுக்கு சமாதிக்கட்ட, சமாதிக்குள் முடங்கி, மூன்றாம் நாளில் முடிசூடப்போகும், இயேசுவின் மௌனத்தை இக்கல்லறை பிரதிபலிக்கிறது. உயிர்ப்பிலே நம்பிக்கை வைத்து நம் வாழ்வை நெறிப்படுத்த நாம் தயாரா?

# செபம்:

**அன்பு இயேசுவே! எங்களில் நீதியானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, போற்றுதற்-குரியவை எவையோ அவற்றைப் புதைத்து, போலியாய் வாழ்ந்த நேரங்களுக்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.**




முதல்வர்: **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

# இறுதிச் செபம்

## முதல்வர்:

சிலுவைப் பாதையின் ஒவ்வொரு நிலையிலும் இயேசு நமக்குத் தரும் படிப்பினையையும், நாம் தவறவிட்ட வாழ்க்கை முறையையும் சிந்தித்தோம். அளவில்லா அன்பினால் நமக்காக சிலுவையை அரவணைத்த இயேசு, நம் குற்றங்குறைகளை மன்னிக்கின்றார். அவரின் திரு இரத்ததினால் கழுவப்பட்ட மக்களாக, தூய வாழ்வில் தடம் பதிப்போம். தொடரும் வாழ்க்கை பயணத்தில் கல்வாரியைத் துணிவோடு மேற்கொள்வோம்.

## செபிப்போமாக!


**எங்கள் தந்தையாகிய இறைவா! உயிருள்ள நிலைவாழ்வில் உம்மோடு ஒன்றித்திருக்க, உமது இறப்பிலும் நாங்கள் ஒன்றித்திருக்கிறோம். ஆண்டவரே, பாவ வழிகளிலிருந்து விலகி, உமது பரிசுத்த வழிகளில் வளர எங்களுக்குக் கற்றுத் தாரும். ஆமென்.**

முதல்வர்: திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

**ஒரு பரலோக மந்திரம், அருள் நிறைந்த மந்திரம் மற்றும் திருத்துவ செபம்.**

முதல்வர்: இயேசு கிறிஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக, புனித வியாகுல மாதாவே!

**அனைவரும்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**




# திருச்சிலுவைப் பாதை 6

www.fb.com/stmary.tamil

www.fb.com/Supuwatha

www.youtube.com/Supuwatha

# திருச்சிலுவைப் பாதை-6

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!

**அனைவரும்: ஆமென்.**

## தொடக்கச் செபம்

இயேசுவின் கல்வாரிப் பயணத்தின் பாதப் பதிவுகள். இயேசுவின் சிலுவைப்பாதை ஒரு போராட்டப்பாதை. சமுக மாற்றத்திற்கான புதியபாதை. இது என்றோ, எங்கோ நடந்து முடிந்த வரலாற்று நிகழ்வல்ல. நம்மவரின் வாழ்வில் அன்றாடம் நடக்கும் வாழ்க்கைப் பாதை.

இயேசுவின் இச்சிலுவைப் பாதையில் பங்கேற்க வந்திருக்கும் நாம் ஓரம் நின்று, நிகழ்வதைக் கண்டு, சிறிதும் மாற்றம் இல்லாமல் வந்த வழி செல்லும் வெறும் பார்வையாளராய் இருந்திடாமல், இயேசுவோடு உடன் நடந்து, வாழ்க்கையில் மாற்றம் காணும், இயேசுவின் அன்புச்சீடராக இப்பாதப் பதிவுகளில் பங்கேற்று பயனடைவோம்.

பாடல்: **எங்கே சுமந்து போறீர்? சிலுவையை நீர்**
**எங்கே சுமந்து போறீர்**
**பொங்கும் பகைவராலே, அங்கம் நடுநடுங்க**
**எங்கே போறீர்.**

**மனித பாவத்தாலே**
**மரணத் தீர்வை பெற்று**
**தூய செம்மறி போல,**
**துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்**

# முதல் நிலை

## இயேசு அநியாயத் தீர்வையிடப் படுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

**நிகழ்வு:** வெளி வேடமாகப் பேசுகிறவர்களை விட்டுவிட்டு வெளிப்படையாக பேசிய இயேசுவின் மேல் விசாரணை வைக்கிறார்கள். கட்டுகளை அவிழ்த்துப் போகவிடுங்கள் என்று மொழிந்து எல்லாவிதமான அடிமைத்தனங்களின் கட்டுகளையும அவிழ்க்க வந்த அவரது கரங்களையே கட்டி வைக்கிறார்கள்.

குற்றமில்லாத இயேசுவை வார்த்தை அணிகளால் வதைக்கிறார்கள். "அவனை சிலுவையில் அறையும்" என்று உரக்க கத்திய யூதர்களின் , மதக் குருக்களின் குரல் கேட்டு இயேசுவை சிலுவைக்கு கையளிக்கிறான் பிலாத்து.

**இயேசு:** என்னுடைய ஆதங்கமெல்லாம் உங்கள் அநியாயத் தீர்ப்புகள் எல்லாம் என்னோடு முடிந்து போகட்டு என்பதே. கூர்மையான உங்கள் வார்த்தை ஆயுதங்களால் எத்தனை இதயங்கள் கிழிந்து போயிருக்கின்றன. தவறான உங்களது வார்த்தைகளால் எத்தனை தற்கொலைகள் அரங்கேறியிருக்கின்றன.

சுய லாபங்களுக்காக அடுத்தவர்களை குற்றவாளிகளாக்கி பிலாத்துவாக நடந்து கொண்ட வேளைகளை நினைத்துப் பாருங்கள். இனியேனும் திராவகம் பூசிய வார்த்தைகளைத் தவிர்த்து, கனிவான வார்த்தைகளால் கலங்கிய உள்ளங்களைத் தேற்றுங்கள்.

## செபம்:




**அன்பான இயேசுவே! எங்களுடைய சுயநலன்களுக்காக அடுத்தவர்களை வதைக்கின்ற மனநிலையை எங்களிடமிருந்து நீக்கியருளும். உம்மைப் போன்று உறவை வளர்க்கும், வாழ்வை வளமாக்கும் வார்த்தைகளைப் பேச எங்களுக்கு வரமருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:**

**பாரச் சிலுவை மரம்,**
**பாவத்தின் சுமை தாங்கி**
**பாசத்துடன் அணைத்து,**
**பாரத்துடன் நடந்து எங்கே போறீர்**

# இரண்டாம் நிலை

## இயேசுவின் மீது பாரமான சிலுவையைச் சுமத்துகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

**நிகழ்வு:** சாதனை செய்தவர்களுக்கு சரித்திரத்தில் இடமுண்டு. சன்மானமாகச் சில பரிசுகளும் கிடைப்பதுண்டு. ஆனால் சென்ற இடமெல்லாம் நல்லதே சொல்லி வாழ்க்கை முழுவதும் நன்மையே செய்த இயேசுவுக்கு, வேதனையைத் தவிர வேறெதுவும் கிடைக்கவில்லை விருந்தாக. கைமாறு கருதாமல் பணியில் தனை முழுதும் கரைத்துக் கொண்டதற்கு பரிசாக காரி உமிழ்ந்து, எட்டி உதைத்து, சாட்டையால் அடித்து, முள்முடி சூட்டி பாரச் சிலுவையை இயேசுவின் தோள்களில் சுமத்துகிறார்கள்.

**இயேசு:** சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லோரும் என்னிடம் வாருங்கள் என்று மொழிந்த நான், இன்று உங்கள் முன்னோடியாக சிலுவை சுமக்கிறேன். உங்களில் எத்தனை பேர் குடும்பப் பொறுப்புகளை, ஆற்ற வேண்டிய கடமைகளை, சிலுவைகளாக எண்ணி உதறித் தள்ளுகின்ற உதவாத மனநிலை கொண்டிருக்கிறீர்கள்.

வயது முதிர்ந்த பெற்றோர்களை இடத்தை அடைக்கும் குப்பைகளாக எண்ணி அப்புறப்படுத்தும் பொறுப்பற்ற மனநிலை கொண்டிருக்கிறீர்கள். சுமப்பவர்களுக்கு சுகமளிக்கும் சுமைதாங்கி தேவன் நான். உங்கள் அன்றாட வாழ்வின் சிலுவைகளை உவந்து ஏற்று, சுமந்து வாழுங்கள்.

# செபம்:

**எங்களுக்காக**
**சிலுவையின் பாரம்**
**சுமந்த இறைவா,**
**பிறருக்கு சுமையாக**
**வாழாமல், யாரையும்**
**எங்களுக்கு**
**சுமையாகக் கருதாமல்,**
**பிறர் சுமைகளை**
**உமைப்போல்**
**இன்முகத்தோடு**
**சுமந்து வாழும் பறந்த**
**மனம் தாரும். ஆமென்.**




| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

**பாடல்:**

**கல்வாரி மலை நாடி,**
**தள்ளாடித் தரை வீழ்ந்து**
**எல்லோரின் பாவங்களைத்**
**தனிமையாய் சுமந்து எங்கே போறீர்**

# மூன்றாம் நிலை

## இயேசு மனம், உடல் சோர்ந்து தள்ளாடி முதல்முறையாக தரையில் முகம் குப்புற விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

**நிகழ்வு:** சுமை என்று வந்தவர்க்கு தோள் கொடுத்து தாங்கியவர். தாழ்நிலை நின்றவர்க்கு கரம் கொடுத்து உயர்த்தியவர். சிலுவையின் பாரத்தாலும், பயணத்தின் களைப்பாலும் வலுவிழந்து முகம் குப்புற மண்ணில் வீழ்கிறார். மண்ணோடு மண்ணாய் வீழ்ந்தபோதும் மௌனமாய் மடிந்து போகாமல் மீண்டெழுந்து தொடர்கிறார் இயேசு மீளாத பயணத்தை.

**இயேசு:** ஏன் விழுந்து விட்டேனென்று எண்ணுகிறீர்களா? விழவில்லை நான். விழுத்தாட்டப் பட்டிருக்கிறேன். என் கால்கள் இடறுவதை நினைத்து கலங்கவில்லை நான். உங்கள் வார்த்தையிலும், வாழ்க்கையிலும் அன்றாடம் நீங்கள் வழுக்கி விழுவதை எண்ணி வருந்துகிறேன். உங்களது தவறான முன்னுதாரணங்களால் பிறரை வழுக்கி விழச்செய்வதை எண்ணி உள்ளம் கலங்குகிறேன். வீழ்வது பலவீனம், பிறரை வீழ்த்துவது மதியீனம், வீழ்ச்சியில் எழுச்சிபெறுவதே தெய்வீகம்.

:

## செபம்:




**வீழ்ந்தபோதும் மீண்டெழுந்த இறைவா, உம்மைப்போல் நாங்களும் எங்கள் வீழ்ச்சிகளில் துவண்டுவிடாமல் துணிந்தெழுந்து பயணிக்க உமதருள் தாரும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:**
**மாமரி கன்னி அன்னை,**
**மகனின் கோலங்கண்டு**
**மாதுயருடன் வாடி,**
**மனம் நொந்து வருந்த எங்கே போறீர்**

# நான்காம் நிலை

## இயேசு தன் தாய் மரியாளைச் சந்திக்கின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

**நிகழ்வு:** "பிழையென்ன செய்தான் என் மகன்? தொழுநோயைக் கூட தொட்டு தூய்மையாக்கியவனை, யாரும் நினையாதவர்களையும் நாடிச் சென்று அரவணைத்தவனை, வழி தவறியவர்களையும் தேடிச் சேர்த்து நல்வழி நடத்தியவனை, வழியெங்கும் அடித்துத் துவைத்து, தலையிலே முள்முடி, தோள்களிலே சிலுவை சுமத்தி, ஊர்வலமாய் இழுத்து வருகிறார்களே" என்ற உள்ளக்குமுறலோடு துயரத்தின் விளிம்பில் இயேசுவை சந்திக்கிறாள் அன்னை மரியாள்.

**இயேசு:** உலகமே என்னைக் கைவிட்டபோதும் உடனிருந்து தேற்றினாள் என் அன்னை மரியாள். தவமிருந்து பிள்ளைகள் பெற்று, பேணி பராமரிக்கும் பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் பருவ வளர்ச்சியில் உடனிருந்து உதவி வரம்புகளைச் சுட்டிக்காட்டி, ஒழுக்கத்தை ஊட்டி, ஞானத்தில் வளர உதவுங்கள். விமர்சனங்களால் அவர்களை விரக்தியடையச் செய்திடாமல், வெற்று அறிவுரைகளால் அவர்களை பொறுமை இழக்கச் செய்திடாமல், உங்கள் வாழிவில் உதாரணங்களால் வழிகாட்டுங்கள் என் அன்னையைப் போல்.

## செபம்:

**தாயான தெய்வமே!**
**எங்கள் குடும்பங்களில்**
**பெற்றோர்**
**பிள்ளைகளுக்கிடையே**
**புரிதல் மேம்பட,**
**உறவுகள் வலுப்பெற,**
**உறவின் பாலமாய்**
**இருந்து உதவிடுவாய்.**
**ஆமென்.**




| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

பாடல்:

**உதிரம் ஆறாய் சிந்தி,**
**உள்ளம் உரமிழந்து**
**சீரேன் சீமோன் துணையை,**
**ஏற்று வழி நடந்து எங்கே போறீர்**

# ஐந்தாம் நிலை

## இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

**நிகழ்வு:** கல்வாரிப் பயணத்தில் களைத்துப்போன இயேசுவுக்கு கரம் தந்து உதவிட யாருமே முன்வரவில்லை. அவரது வல்லமையால் பார்வையடைந்தவர்கள், அவரது புதுமைகளால் புத்துயிர் பெற்றவர்கள், அவர் அல்லல் பட்ட வேளையில் உதவிட வரவில்லை. ஒட்டி உறவாடிய அன்புச் சீடர்களும் ஓடி ஒளிந்து கொண்ட அத்தருணத்தில் இயேசுவின் சிலுவை பாரத்தைப் பகிர்ந்து கொள்ள வருகிறான் சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன்.

**இயேசு:** என் பயணம் பாதியில் முடிந்து விடுமோ என பயப்படுகிறார்கள். என் சிலுவையைச் சுமக்க வழியில் வந்தவனுக்கு வாய்ப்புக் கொடுக்கிறார்கள். அன்பர்களே, பகிர்ந்து கொள்ளும் போது கனமான பாரம் கூட பாதியாகி விடுகிறது. மனதை அழுத்துகின்ற பாரமான நினைவுகளை, மறக்கவே முடியாது என்று நினைக்கின்ற துரோகங்களை, நினைத்துப் பார்க்கவும் இயலாத இழப்புகளை, பகிர்ந்து கொள்ளும் போது இதயம் இலகுவாகின்றது. பகிர்ந்து கொள்ளும் இதயங்களுக்கு செவிமெடுக்கின்ற போதும், உதவுகின்ற போதும் நீங்களும் சீமோனைப் போல என் பாரம் பகிர்ந்தவர்களாவீர்கள்.




## செபம்:

**துன்ப வேளையில்
எங்கள் ஆறுதலே
இறைவா! பார
இதயத்தோடு
வருபவர்களுக்கு
பரிவாக செவிமடுத்து,
உதவிக் கரம் நீட்டும்
உயர்ந்த உள்ளத்தை
எங்களுக்குத்
தந்தருளும். ஆமென்.**

---

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

---

**பாடல்:** **கர்த்தரே உம் வதனம்,
இரத்தக் கறையால் மங்கி
உத்தமி வெரோணிக்காள்,
வெண் துகிலால் துடைத்தும் எங்கே போறீர்**

# ஆறாம் நிலை

## இரத்தம் வழிந்தோடிய இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**


## முதல்வர்:

**நிகழ்வு:** கொளுத்தும் வெயிலும், குத்தும் முள்முடியும் இரக்கமின்றி தலையில் இறங்க, முகமெல்லாம் வழிந்த வியர்வையும், இரத்தமும் இமைகள் நனைத்து பார்வை மறைக்க, தட்டுத் தடுமாறி பயணம் தொடர்ந்த வேளையில் கலங்கிய கண்களோடும், கனிந்த இதயத்தோடும், உருகுலைந்த முகத்தை ஒற்றியெடுக்க வருகிறாள் வீர மங்கை வெரோணிக்காள்.

**இயேசு:** ஊரே திரண்டு நின்று வேடிக்கை பார்த்திருக்க ஒருத்தி மட்டும் தடை கடந்து, முகம் துடைத்து, என் சோர்வு போக்கினாள். ஊர் என்ன சொல்லும், உலகம் என்ன நினைக்கும் என்ற சிந்தனைகளாலேயே கூட்டுக்குள் புதைந்த நத்தையைப் போல வாழ்க்கையை, வாய்ப்புகளை புதைந்து போக, கடந்து போக விட்டுவிடாமல், நல்ல சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கவும், தேவையில் இருப்பவர்களுக்கு உதவவும், வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் உறங்கிக் கிடக்கும் வெரோணிக்காள் உயிர்பெறட்டும்.

# செபம்:

**எங்களுக்காக
இன்னுயிர் ஈந்த
இயேசுவே, தேவையில்
இருக்கின்ற
ஒவ்வொருவருக்கும்
எங்களால்
இயன்றதைச்
செய்திடும் தாராள
மனதையும், மனித
நேயத்தையும்
நிறைவாகத்
தந்தருளும். ஆமென்.**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த,
பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும்
வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்**

# ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறையாகத் தரையில் விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

**நிகழ்வு:** சேரவேண்டிய இடமின்னும் வந்து சேரவில்லை. அதற்குள் ஆயிரம் அடிகள் உடலைக் கிழிக்கின்றன. உடைக்கப்பட்டாலும் அவர் உள்ளம் தளர்ந்து போகவில்லை. சிதைக்கப்பட்டாலும் அவர் கொண்ட இலட்சியம் சிதைந்து போகவில்லை. அவர் பட்ட வேதனையையும், துயரத்தைப் பார்த்து பூமியே தன் புவியீர்ப்பு விசையால் இழுத்து அரவணைத்துக் கொள்கிறது. விதை மண்ணில் வீழ்வது போல் வீழ்ந்தாலும், விழுந்த விதை முளைவிட்டு எழுவதுபோல் மீண்டும் எழுகிறார். கல்வாரி நோக்கி தன் பயணத்தைத் தொடர்கிறார்.

**இயேசு:** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைக்கையில் கால் இடறி கீழே விழுந்தேன் இரண்டாம் முறையாய். இங்கு வாழ்பவர்களில் எத்தனைபேர் பிரச்சனைகளைத் தவிர்ப்பதாக எண்ணிக்கொண்டு வாழ்க்கையை வாழாமலேயே மடிந்து போகிறார்கள். வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். பள்ளம் மேடுகள் நிறைந்தது தானே பாதை. பாதையில் வருகின்ற தடைகளை எல்லாம் பட்டியலிட்டு, கணக்கெடுத்துக் கொண்டிருந்தால், பயணத்தை துவங்குவது எப்போது? பாதங்கள் நடக்கத் துணிந்துவிட்டால், பாதைகள் மறுப்பதில்லை. பாதைகளில் கோடி தடைவரினும், பாதங்களும் அயர்வதில்லை.




## செபம்:

துவளாது துணிவோடு
பயணித்த இறைவா,
எங்கள் பாதைகளில்
கோடி தடை
வந்தபோதும், உம்
துணை கொண்டு
எதிர்கொள்ளும்
துணிந்த உள்ளம்
தந்தருளும். ஆமென்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: புண்ணிய ஸ்தீரிகள் பலர்,
புலம்பி அழும் வேளை
ஆறுதல் கூறி நீரும்,
நேசக்கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்

# எட்டாம் நிலை

## அழுது புலம்பும் எருசலேம் நகரத்துப் பெண்களை இயேசு சந்திக்கிறார்.

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:


**நிகழ்வு:** எப்பாடுபட்டேனும் இவன் கதையை இன்றோடு முடித்திட வேண்டும் என்ற கங்கணம் கட்டிக்கொண்டு ஒரு கூட்டம். என்னதான் நடக்கிறது என்று வேடிக்கைப் பார்ப்போம் என்று பார்வையாளர்களாய் இன்னொரு கூட்டம். இவர்கள் மத்தியில் மாரடித்துப் புலம்பி, ஒப்பாரி வைத்த வண்ணம் இயேசுவை பின்தொடர்ந்து வருகிறார்கள் எருசலேம் பெண்கள்.

**இயேசு:** பெண்களே, இன்னும் எத்தனை காலம்தான் உங்கள் எதிர்ப்புகளையும், ஏக்கங்களையும், அதிருப்திகளையும் அழுகையாலும், கண்ணீராலும் மட்டுமே அறிக்கையிடப் போகிறீர்கள்?

குடிவெறியால் குடும்பத்தை சீர்குலைக்கும் கணவனையும், பெண்களை பணம் காய்க்கும் மரங்களாகக் கருதும் சோம்பேறிகளையும், ஆணாதிக்க மனப்பான்மையால் அடிமைப்படுத்தும் தாழ்வுமனநிலை கொண்டவர்களாய், போகப் பொருளாக எண்ணி பயன்படுத்தும் காமுகர்களையும் எண்ணி எண்ணி அழுவதையும், கண்ணீர் சிந்துவதையும் அடியோடு நிறுத்துங்கள். அதைத்தவிர உங்களால் செய்யக்கூடியதென்ன என்பதை ஆக்கப்பூர்வமாய்ச் சிந்தியுங்கள். உங்கள் அழுகை மகிழ்ச்சியாக மாறட்டும்.

# செபம்:

**சமத்துவத்தின் நாயகனே இறைவா! இறைவனின் படைப்பில் ஆணும், பெண்ணும் சமம் என்ற ஆழமான உண்மையை நாங்கள் உணர்ந்து, எந்நாளும் மதித்து வாழ உமதருள் தாரும். ஆமென்.**




முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **சிலுவைப் பாரத்தாலே,**
**மாமரி ஏகமைந்தன்**
**மூன்றாம் முறை தரையில்,**
**முகம் படிந்தெழுந்து எங்கே போறீர்**

# ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**


### முதல்வர்:

**நிகழ்வு:** எட்டிவிடும் தூரத்தில் கல்வாரியின் எல்லை, இருப்பினும் ஒத்துழைக்க மறுக்கின்றன கால்கள். கலிலேயா, யூதேயா, சமாரியா என்று எங்கும் அலைந்து திரிந்த இறைமகனின் தெய்வீகக் கால்கள், பிணியாளரையும், பாவிகளையும் தேடிச்சென்ற திருக்குமாரனின் திருக்கால்கள், இன்று சிலுவையின் பாரத்தாலும், பயணத்தின் கொடுமையாலும் நிலை தடுமாறுகின்றன. சதை கிழிய, இரத்தம் சிதற, நரம்புகள் சுண்டி இழுக்க, கால்கள் சோர்ந்து மூன்றாம் முறையாக இயேசு மண்ணில் வீழ்கிறார்.

**இயேசு:** இனியவர்களே! தடுமாற்றம் இல்லாமல் வாழ்க்கையில்லை. வீழ்தல் இல்லாமல் பயணம் இல்லை. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும்,

ஆசையில் தடுமாறி, பாவத்தில் விழுந்து, கோபத்தில் தடுமாறி, பகையில் விழுந்து, தட்டுத்தடுமாறி விழுந்து, எழுந்து தான் பயணம் செய்கிறோம். துணிவோடு, நம்பிக்கையோடு, விருப்பத்தோடு முயல்கின்றபோது எந்த தடுமாற்றத்திலிருந்தும், வீழ்தலிலிருந்தும் உறுதியாக எழுந்து பயணிக்க முடியும் எனைப்போல.

## செபம்:




**அன்பு இயேசுவே!
எங்கள் வாழ்க்கையின்
தடுமாற்றங்களின்
போது விழுந்து
கிடப்பதில் நாங்கள்
சுகம் கண்டுவிடாமல்,
முயன்று, துணிந்து,
எழுந்து நடந்திட
உமதருள் தாரும்.
ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **நீடாடை கழற்றவே,
கோடாகோடிக் காயங்கள்
இரத்தம் ஆறாய் பெருகி,
வேதனையால் வருந்தி எங்கே போறீர்**

# பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகள் களையப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:


**நிகழ்வு:** இதுவரை இயேசுவுக்கு செய்த அவமானங்கள் போதாதென்று, குற்றுயிராய் அவர் கல்வாரியின் உச்சியை அடைந்த போது, அவர்தம் ஆடைகளையும் களைந்து அவமானத்தின் உச்சிக்கு அழைத்துச் சென்றார்கள். அவருடைய மேலுடையை நான்கு பாகங்களாகப் பிரித்து, ஆளுக்கு ஒன்றாகப் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். அவரது அங்கி மேலிருந்து கீழாக தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருக்க அதை அப்படியே எடுத்துக் கொள்ள தங்களுக்குள் சீட்டுப் போட்டுப் பார்க்கிறார்கள்?

**இயேசு:** அன்பர்களே, என் ஆடைகளையா அவர்கள் அகற்றினார்கள்? இல்லை, என் அடிப்படை உரிமைகளையே அபகரித்துக் கொண்டார்கள். என்னையும் மனிதராகப் பார்க்காமல், நிர்வாணமாக்கி அசிங்கப்படுத்துகிறார்கள்.

நண்பர்களே! எங்கெல்லாம் மனித மாண்புக்கு எதிரான நிகழ்வுகள் நடந்தேருகின்றனவோ,எங்கெல்லாம் சாதி, மதம், பணம், பதவி என்ற பெயரால் மனிதம் கூறுபோடப்பட்டு, நசுக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் நான் ஆடையிழந்து அவமானப்படுகிறேன்.

# செபம்:

**அன்பு ஆண்டவரே!**
**உமக்கு நேர்ந்த**
**அவமானம் கண்டு**
**உருகும் நாங்கள்,**
**எங்கள்**
**குடும்பங்களிலும்,**
**சமூகத்திலும்**
**மனிதத்தை**
**அவமானப்படுத்தாமல்,**
**மனித மாண்பையும்,**
**பிறர் நலத்தையும்**
**பேணும் வரமருளும்.**
**ஆமென்.**




| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

**பாடல்:**
**நீட்டிய கால் கரத்தில்,**
**நீண்ட இரும்பாணிகள்**
**நிஷ்ட யூதர் அறைந்தும்,**
**நேசத்திலே வெந்து பலியாகினீர்**

# பதினொன்றாம் நிலை

## இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

**நிகழ்வு:** இதோ கழுமரத்தின் கருணை வள்ளல், குருடர்களையும், சூம்பிய கையரையும், பிடிவாதக்காரரையும் தொட்டுக் குணப்படுத்திய பரமனின் பட்டுக் கரங்கள் பாரச் சிலுவையோடு ஒட்டி அறையப்படுகின்றன. காடு மேடெல்லாம் கடந்து சென்று கடமையாற்றிய கால்கள், சிலுவைக் கட்டையோடு சேர்த்து அறையப்படுகின்றன. உடம்பிலே எஞ்சியிருந்த கொஞ்சம் இரத்தமும் ஆணிக் காயங்கள் வழியே வழிந்தோடுகின்றன. கன்னியின் வயிற்றில் கருவானவர் இங்கே சிலுவையில் சிதைக்கப்படுகின்றார்.

**இயேசு:** கடிதங்கள் மீது குத்தப்படும் முத்திரைகளை விட அடுத்தவரின் இதயங்கள் மீது குத்தப்படும் முத்திரைகள் தான் அதிகம். வாள் வீச்சினால் காயப்பட்டவர்களை விட, மற்றவர்களுடைய வார்த்தை வீச்சுகளால் வீழ்ந்து போனவர்களே அதிகம்.

முகத்தில் எறியப்படுகின்ற கற்களால் காயப்பட்டவர்களை விட முதுகுக்குப் பின்னால் வீசப்படும் சொற்களால் நொடிந்து போனவர்களே அதிகம் என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? பிரியமானவர்களே, என் உடலில் இறங்கிய அடிகளையும், ஆணிகளையும் பார்த்து பரிதாபப்படுகின்ற நீங்கள், உங்கள் வார்த்தையாலும், செயல்களாலும் யாரையும் சிலுவையில் அறையாதீர்கள்.




## செபம்:

**அன்பான இறைவா!
விமர்சனம் என்கிற
பெயரில்
அடுத்தவர்களை
ஆணிகொண்டு
அறையாமல்,
உண்மையான அன்பு
செய்து வாழும் உயர்ந்த
உள்ளத்தைத்
தந்தருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்: சிலுவைப் பீடமேறி,
மும்மணி நேரம் தொங்கி
வான் பிதாவை வேண்டி,
ஆருயிர் ஒப்படைத்து பலியாகினீர்**

# பனிரெண்டாம் நிலை

## எல்லாம் நிறைவேற்றிய இயேசு சிலுவையில் உயிர் விடுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

பாடல்: **என் இறைவா, என் இறைவா**

**ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்**

மெய்யாகவே அவர் நம் பிணிகளைத்தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைத் தன்மேல் சுமந்து கொண்டார். அவரே நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார். நம் செயல்களுக்காக அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு நிறைவாழ்வு அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்.

பாடல்: **தந்தையே உம் கையில் என்**

**ஆவியை ஒப்படைக்கின்றேன்.**

## செபம்:

**எமக்காக உம் மகனையே கையளித்த இறைவா! உமது மகனின் இறப்பை நினைத்து அழுது புலம்பி, அமைதியாகச் சென்று விடாமல், எங்களுடைய முரண்பட்ட வாழ்வை நினைத்து கண்ணீர் வடித்து, வாழ்க்கைப் பாதையை சீரமைத்துக் கொள்ளும் உள்ளத் துணிவைத் தந்தருளும். ஆமென்.**




| | |
|---|---|
| முதல்வர்: | எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும். |
| **அனைவரும்:** | **எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.** |
| முதல்வர்: | மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக. |
| **அனைவரும்:** | **ஆமென்.** |

**பாடல்:**

**மரி தாய் மடிமீதில்,**
**மரித்த மகன் தாங்கி**
**ஏழு சோக வாட்களால்,**
**ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்**

# பதிமூன்றாம் நிலை

## இயேசுவின் உடல் தன் தாயின் மடியில் கிடத்தப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

**நிகழ்வு:** ஆசிர்வதிக்கப்பட்டவருக்கு அவலநிலை. இறைவனின் வார்த்தையை இதயத்தில் சுமந்தவள். உலகத்தின் உதயத்தை உதிரத்தில் சுமந்தவள். இன்று கண்ணீர் முத்துக்களை கண்களில் தாங்கியவராக, நார் நாராக கிழிபட்டிருக்கும் இறைவனின் ஓவியத்தை, இறைமகன் இயேசுவின் உயிரற்ற உடலை மடியில் தாங்கி, மீளாத் துயரத்தில் மௌனித்திருக்கிறாள் அன்னை மரியாள்.

**இயேசு:** உலகிற்கே உயிர் கொடுத்தவன். இன்று உயிரற்ற உடலாய், எனக்காக உதிரத்தை பாலாக்கியவளின் மடியில் கிடக்கிறேன்.

நண்பர்களே! வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்று வாழ்வதா வாழ்க்கை? இலட்சியம் இல்லாத மனிதன் நடந்து திரியும் பிணம். இலக்குகளோடு, இலட்சியத்தோடு வாழ்கின்றபோதுதான் வாழ்க்கையின் பக்கங்களுக்கு நாம் அர்த்தம் சேர்க்கிறோம். அப்போது மரணத்தாலும் அழிக்க முடியாதவர்களாவோம்.

## செபம்:




**நிறைவாழ்வின் ஊற்றே எம் இறைவா! கடமைக்காக பணி செய்தோம், பேருக்கு வாழ்க்கை நடத்தினோம் என்று வாழாமல் பொறுப்போடு, மகிழ்வோடு, நிறைவோடு வாழும் வரம் தருவாய். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **கர்த்தரின் உடல்தனை,**
**கல்லறைக்குள் அடக்க**
**உத்தானம் ஜீவனுமாய்,**
**உயிருடன் எழுந்து எப்போ வருவீர்**

# பதினான்காம் நிலை

## இயேசுவின் திருவுடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

**நிகழ்வு:** ஒரு சமாதானப்புறா இங்கு சமாதியில்.ஒரு தெய்வீக ராகம் இன்று முகாரியில்.

விண்ணுக்கும் மண்ணுக்கும் இருந்த வேறுபாடுகளை களைவதற்கு இந்த மண்ணுக்கு வந்த மானிட மகனை மண்ணுக்குள்ளே பொத்தி வைக்கிறார்கள். மண்ணைத் தோண்டியல்லவா தங்கத்தை எடுப்பார்கள். இங்கு மண்ணைத் தோண்டி மாசில்லாத தங்கத்தைப் புதைக்கிறார்கள். உயிர்ப்பும் உயிரும் நானே என்றவரை இருட்டறையில் - கல்லறையில் புதைக்கிறார்கள்.

**இயேசு:** பிரியமானவர்களே! பிரிகின்ற நேரம் இது. எல்லாம் முடிந்துவிட்டதாக நினைத்தவர்கள், உண்மை உறங்குவதில்லை என்பதை உணரவில்லை!

கருவறையில் பாலின பேதம் பார்ப்பது முதல், கல்லறைகளில் சாதி பேதம் பார்ப்பது வரை, மனிதத்தின் முகமெங்கும் பிரிவினைக் கோடுகள். பேதங்களை, பிரிவினைகளை கல்லறைகளில் புதைத்து, மனிதத்திற்கு உயிர் கொடுங்கள், உண்மைகள் உயிர் பெறட்டும்.

## செபம்:




**சமத்துவ நாயகனே**
**இறைவா!**
**பிரிவினைகளை,**
**பேதங்களைக் கடந்து,**
**சமத்துவத்தை,**
**சகோதரத்துவத்தை**
**மதித்து வாழும்**
**உயர்ந்த உள்ளத்தைத்**
**தந்தருளும். ஆமென்.**

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

# இறுதிச் செபம்

**முதல்வர்:**

இயேசுவில் பிரியமானவர்களே!

ஒவ்வொரு சிலுவைப் பாதையிலும், மீட்பராம் இயேசுவின் பாடுகளை நினைவு கூறுகின்ற நாம், நம் வாழ்க்கைப் பாதையில், நாம் அனுதினமும் சுமக்கின்ற சிலுவைகளை உவந்து ஏற்று, சுமந்து வாழும் வலிமையையும், மன உறுதியையும் நம்மில் வளர்த்துக் கொள்வோம்.

சிலுவைப்பாதைச் சிந்தனைகள், நம் சிந்தனைகளைத் தூய்மையாக்கி, செயல்களை செம்மைப்படுத்தி, வாழ்க்கையை நெறிப்படுத்தட்டும்.

என்றும் இயேசுவின் உண்மைச் சீடராய் வாழ்ந்திருப்போம்.

முதல்வர்: திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

**ஒரு பரலோக மந்திரம், அருள் நிறைந்த மந்திரம் மற்றும் திருத்துவ செபம்.**

முதல்வர்: இயேசு கிறிஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக, புனித வியாகுல மாதாவே!

**அனைவரும்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**




# திருச்சிலுவைப் பாதை 7

For Devotions &
Prayers in Tamil
Search for
Iraiputhaham

Get Iraivaarthai on
Google Play

Get Iraivaarthai on
App Store

www.onelink.to/iraiputhaham

# திருச்சிலுவைப் பாதை-7

**முதல்வர்:** தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!

**அனைவரும்: ஆமென்.**

**தொடக்கச் செபம்**




ஆண்டவராகிய இயேசுவே, நீர் எங்களை அதிகமாக அன்பு செய்வதால், எங்களைப் புனிதமாக்க உம்மையே சிலுவையில் முழுமையாக ஒப்புக் கொடுத்தீர். எங்கள் விண்ணகத் தந்தை முழுமையாய் இருப்பது போல நாங்களும் முழுமையாய் இருக்க விரும்புகிறோம். இந்தச் சிலுவைப்பாதையைத் தியானிக்கும் எங்களைப் புனிதமாக்கியருளும். நாங்கள் ஒரே குடும்பமாக விசுவாசத்துடன் ஒன்றித்து நடக்க உதவியருளும். ஆமென்.

---

பாடல்: **பழிகளை சுமத்தி பரிகசித்தார், உயிர்**
**பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

---

# முதல் நிலை

## பிலாத்து இயேசுவுக்கு அநீதத் தீர்ப்பை வழங்கி அவரை சிலுவைச் சாவுக்குக் கையளிக்கின்றான்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:**




தீர்ப்புக்காகப் பிலாத்துவின் முன் இயேசு, தலைமைக் குருக்களாலும் மூப்பராலும் நிறுத்தப் பட்டுள்ளார். அவர் நிரபராதி என்றாலும் அவருக்குத் துணை நிற்க யாருமில்லை.

எவ்விதப் பிரச்சனைகளையும் விரும்பாத பிலாத்து தன்னால் ஒன்றும் செய்ய முடியாதக் காரணத்தால் இயேசுவை சிலுவைச் சாவுக்குக் கையளிக்கிறான்.

உங்களைப் பற்றி யாராவது தவறாகப் புண்படுத்தும்படிப் பேசியதுண்டா? உங்களைப் பற்றி யாராவது அபாண்டமாகப் பொய் சொல்லியதுண்டா? அப்படி யாராவது செய்திருந்தால், அந்த நேரத்தில் உங்கள் உள்ளம் எப்படி இருந்ததென உணர்ந்தீர்களா? நீங்கள் மிகவும் பயந்திருக்கலாம், காயப்பட்டிருக்கலாம் அல்லது கோபப்பட்டிருக்கலாம்.

அப்படிப்பட்ட இதயத்தை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யும்படி அவரிடம் மன்றாடுங்கள். மேலும், நம் தந்தையாகிய இறைவன் என்றும் நம்மோடு இருப்பதை நமக்கு நினைவூட்டும்படி இயேசுவிடம் சொல்லுங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **தாளாச் சிலுவை சுமக்க வைத்தார், உம்மை**
**மாளாத் துயரால் துடிக்க வைத்தார்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# இரண்டாம் நிலை

## இயேசுவின் மீது பாரமான சிலுவையைச் சுமத்துகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:




படைவீரர்கள் இயேசுவைச் சாட்டையால் அடித்து, துன்புறுத்தி, காறித் துப்பி ஏளனம் செய்த பின், அவர் மேல் பாரமான சிலுவையைச் சுமத்தி, நகரத்திலிருந்து கல்வாரியின் கொல்கொத்தா மலை நோக்கி நடத்திச் சென்றனர்.

நீங்கள் எப்போதாவது கடினமான செயல்களைச் செய்ததுண்டா? உங்களை யாராவது எப்போதாவது, குறிப்பாக நீங்கள் நோயுற்ற போது, சரியாக நடத்தவில்லையா? சில வேளைகளில் நாம் விரும்புவது போல நம்மைச் சிலர் நடத்துவதில்லை.

அப்பப்படிப்பட்ட நேரத்தில் உங்கள் இதயத்தை உற்று நோக்குங்கள். உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **விழுந்தீர் சிலுவை பளுவோடு, மீண்டும்**
**எழுந்தீர் துயர்களின் நினைவோடு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# மூன்றாம் நிலை

## இயேசு மனம், உடல் சோர்ந்து தள்ளாடி முதல்முறையாக தரையில் முகம் குப்புற விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:**




சிலுவையின் பாரச் சுமையால் வலுவிழந்த இயேசு முதல் முறை கீழே விழுகிறார். சிலுவை அவர் தோள்களை அழுத்த, சாலையின் கற்கள் அவரது கால்களை காயப் படுத்துகின்றன. மக்கள் கூட்டம் கூச்சலிட்டு அவரைத் தள்ள, படைவீரர்கள் அவரை வேகமாக முன்னோக்கி நகர்த்துகின்றனர். இயேசு மிகவும் சோர்வாக இருக்கிறார்!

விழுந்தால் வலிக்கத்தானே செய்யும். மக்கள் தவறு செய்வது விழுவதற்குச் சமம். அந்த நேரத்தில் நம் இதயமும் அந்த வலியை உணர்கிறது. நீங்கள் எப்போதாவது விழுந்ததுண்டா? உங்கள் இதயம் வலித்ததுண்டா?

அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்: தாங்கிட வொண்ணாத் துயருற்றே, உம்மைத்**
**தாங்கிய அன்னை துயருற்றாள்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# நான்காம் நிலை

## இயேசு தன் தாய் மரியாளைச் சந்திக்கின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

கோபமான கூட்டத்தின் நடுவில், அவர் அங்கு இருக்கிறார். இயேசு தன் தாயைப் பார்க்கிறார். தாயும் சேயும் அவரவர் வலியை உணர்ந்து கொண்டனர். அந்த வலியைப் போக்க அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் இருவரும் தங்களைத்தானே ஆறுதல் படுத்திக் கொள்கின்றனர்.



நீங்கள் வருந்தி அழுத நேரத்தை நினைவு கூறுங்கள். அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **மறுத்திட முடியா நிலையாலே, சீமோன்**
**வருத்தினார் தன்னை உம்மோடு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஐந்தாம் நிலை

## இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:




கல்வாரிக்குச் செல்லும் வழியில், இயேசுவின் சிலுவையைச் சுமக்கப் படைவீரர்கள் ஒருவனை இழுத்து வந்தனர். அவர் சீரேனே ஊரைச் சார்ந்த சீமோன். அவர் எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தார். பின் இருவரும் சேர்ந்து சிலுவையைச் சுமந்தபடி வெகுதூரம் நடந்து சென்றனர்.

பல காரணங்களுக்காக, உதவி செய்வதென்றால் நமக்குக் கடினமாகத்தான் இருக்கும். அந்த நேரம் நாம் எதையாவது விரும்பிச் செய்து கொண்டிருக்கலாம், அல்லது அந்த நபருக்கு உதவி செய்ய விரும்பம் இல்லாமல் இருக்கலாம். உங்களின் உதவி நாடி வந்தவருக்கு உதவி செய்யமால் இருந்த நேரத்தை சற்று எண்ணிப் பாருங்கள்.

அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். “உன் உதவிக்காக நன்றி” என்று இயேசு கூறுவது உங்கள் காதுகளில் ஒலிக்கலாம். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **நிலையாய் பதிந்தது உம் வதனம், அன்பின்**
**விலையாய் மாதின் சிறுதுணியில்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஆறாம் நிலை

## இரத்தம் வழிந்தோடிய இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

வெப்ப மிகுதியால் இயேசு சோர்வுற்றுத் தளர, அவரது முகத்தில் வியர்வையும் இரத்தக் கறையும் தூசியும் படர்ந்துள்ளது. அவர்மீது இரக்கம் கொண்ட வெரோணிக்காள் என்ற பெண் ஒருத்தி கூட்டத்திலிருந்து வந்து அவரது முகத்தை ஒரு துணியால் துடைக்கிறார்.



சில வேளைகளில் நீங்கள் செய்த உதவி உங்களுக்குச் சிறிதாகத் தோன்றலாம். தாகத்தில் உள்ளவருக்கு தண்ணீர் கொடுத்தது, வயதானோருக்கு பை சுமந்தது, வருத்தத்தில் உள்ள ஒருவரைப் பார்த்து ஆறுதல் சொன்னது.

நீங்கள் உதவி செய்த போது இருந்த உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். அவர் தன் முகத்தை உங்கள் இதயத்தில் பரிசாகப் பதித்திருப்பதைப் பாருங்கள். இப்போது உங்கள் இதயம் எவ்வளவு அழகாக உள்ளது!

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

பாடல்: **ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததனால், அந்தோ**
**சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**


# ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறையாகத் தரையில் விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

**முதல்வர்:**




இரண்டாவது முறையாக இயேசு கீழே விழுகிறார். சிலுவையின் பாரம் அதிகரிக்கிறது. கூட்டத்திலிருந்தும் படை வீரர்களிடமிருந்தும் வரும் கூச்சல் அவரது நிலையை மோசமாக்குகிறது. எழுந்திருக்கக் கடினமாக இருந்தாலும் இயேசு எழுந்து செல்கிறார்.

ஏதாவது செயல் உங்களுக்குக் கடினமாக இருந்ததுண்டா? ஏதாவது செயலை மீண்டும் மீண்டும் தவறாக செய்ததுண்டா? எவ்வளவு முயற்சி செய்தும் அச்செயலில் முன்னேற்றம் எதுவும் காண முடியவில்லையா? அப்போது உங்கள் இதயத்தின் நிலை என்ன?

அந்த நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இரண்டாம் முறை விழுந்தபோது இயேசுவின் நிலையும் இப்படித்தான் இருந்திருக்கும். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். உங்கள் இதயத்தின் நிலையை அவர் அறிவார்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:**
**விழிநீர் பெருக்கிய மகளிருக்கு, அன்பு**
**மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# எட்டாம் நிலை

## அழுது புலம்பும் எருசலேம் நகரத்துப் பெண்களை இயேசு சந்திக்கிறார்.

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

பலர் இயேசுவைப் பின்பற்றி வந்தார்கள். அவர்களுள் சில பெண்கள் மாரடித்துக் கொண்டும், அவருக்காக அழுது கொண்டும் இருந்தனர். அவர் அவர்களைப் பார்த்து "எருசலேம் மகளிரே, எனக்காக அழ வேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று ஆறுதல்படுத்தி, மற்றவர்களையும், குறிப்பாக தங்கள் பிள்ளைகளையும் கவனித்துக் கொள்ளும்படிச் சொல்கிறார்.



பல வேளைகளில் நாம் நம்மைப் பற்றியும், நம் பிரச்சனைகள் பற்றியும் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறோம். பிறரைப் பற்றியும் பிறரது பிரச்சனைகள் பற்றியும் நாம் கவலைப் படுவதில்லை. நீங்கள் உங்களைப் பற்றி மட்டுமே நினைக்கும் போது உங்கள் இதயத்தின் நிலை என்ன?

அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யயும்படி அவரிடம் மன்றாடுங்கள். பிறரைப் பற்றி மட்டுமே நினைக்கும் இதயம். அதுவே இயேசுவின் இதயம்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்: மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர், கால்**
**ஊன்றி நடந்திடும் மெய் நொந்தீர்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

பயணம் மிக நீண்டதாகவும் கடினமானதாகவும் தெரிகிறது. மறுபடியும், மூன்றாம் முறையாக, இயேசு தரையில் விழுகிறார். எனினும், மிகுந்த தைரியத்தோடும் சகிப்புத் தன்மையோடும் இயேசு கல்வாரி நோக்கிச் செல்கிறார். நம்மீது அவர் வைத்திருக்கும் அன்பு அந்த வேதனைகளை எல்லாம் தாங்கிக் கொள்கிறது.



கடினமாக இருந்தாலும் இயேசு மீண்டும் எழுந்தார். உண்மையில் நாம் ஒரு செயலைச் சிறப்புடன் செய்யப் பல முறை முயன்றும், வெற்றி பெற முடியாமல் போகும்போது நாம் மனந்தளர்ந்து விடுகிறோம். சில நேரங்களில் மற்றவரின் கோபத்துக்கோ நகைப்புக்கோ ஏளனத்துக்கோ பயந்து நாம் செய்யும் செயலைக் கைவிட்டுவிடுகிறோம்.

இவ்வாறு பிறரின் கோபத்துக்கோ நகைப்புக்கோ ஏளனத்துக்கோ பயந்து எதையாவது செய்யாமல் மனந்தளரந்து போனதுண்டா? அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். உங்கள் இதயத்தில் நடப்பதைக் இயேசு பார்க்கும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும்போது, இயேசுவின் உதவிக்காக அவரிடம் மன்றாடுங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **உடைகள் களைந்திட உம்மைத் தந்தீர், இரத்த**
**மடைகள் திறந்திட மெய் நொந்தீர்.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பத்தாம் நிலை


## இயேசுவின் ஆடைகள் களையப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்-சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

### முதல்வர்:

படைவீரர்கள் இயேசுவின் ஆடைகளை நான்கு பாகங்களாகத் தங்களுக்குள் பிரித்துக் கொள்கிறார்கள். பின் அவரது அங்கியை எடுத்து, அது கீழிருந்து மேலாகத் தையலின்றி ஒரே துண்டாக இருந்ததால் ஒருவரையொருவர் நோக்கி, “அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்கு என்று பார்க்கச் சீட்டுப் போடுவோம்” என்றனர். தன்




உடலை மறைக்க ஒரு சிறு துணியுடன் இயேசு கூட்டத்தின் முன் நிற்கிறார்.

உங்களுக்குப் பிடித்த ஒன்றை மற்றவருக்குக் கொடுக்கக் கடினமாக உள்ளதா? சில நேரங்களில் எல்லாவற்றையும் உங்களுக்கே வைத்துக் கொள்வீர்களா? உங்களுக்கு சொந்தமான ஒன்று, உங்களுக்கும் மற்றவருக்கும் இடையே பிரச்சனையை உண்டாக்க நீங்கள் அனுமதிப்பீர்களா?

இது போன்ற பிரச்சனைகள் வந்த நேரத்தை நினைவு கூறுங்கள். அப்போதுள்ள உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். பின், உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **பொங்கிய உதிரம் வடிந்திடவே, உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே.
எனக்காக இறைவா எனக்காக!
இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதினொன்றாம் நிலை


## இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார்

**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

இயேசுவை அவர்கள் சிலுவையில் அறைந்தபோது காலை ஒன்பது மணி. "யூதரின் அரசன்" என்ற குற்றப் பத்திரிக்கை சிலுவையின் மேலிருந்தது. அவருடன் இரு கள்வர்களை, ஒருவன் வலப்பக்கமும் மற்றவன் இடப்பக்கமுமாக சிலுவையில் அறைந்தார்கள். பலர் அவரைக் கடந்து சென்றனர். சிலர் அவரைப் பரிகசித்து ஏளனம் செய்தனர்.



படைவீரர்கள் அவரைச் சிலுவையில் ஆணியால் அறைந்தபோது அவர் எவ்வளவு கொடிய வேதனையை அனுபவித்திருப்பார்! ஆயினும் தம்மைத் துன்புறுத்தியவர்களை மன்னிக்கும்படி கடவுளிடம் அவர்களுக்காக வேண்டுகிறார்.

உங்களை ஒருவர் வார்த்தையாலோ செயலாலோ துன்புறுத்தியதுண்டா? அவர்களை மன்னிக்க உங்களுக்குக் கடினமாக இருந்ததா?

மன்னிப்பது கடினம் என இயேசுவுக்கு நன்றாகவேத் தெரியும். எனவே, நீங்கள் அவரிடம் மன்றாடும் போது அவர் உங்கள் மனதை மாற்றி, அவர்களை மன்னிக்க இயேசு கற்றுத் தருவார். இயேசு வழியாக நீங்கள் இப்படிச் செய்த பின் உங்கள் இதயம் எப்படிப்பட்டதாக இருக்கும் என சற்று எண்ணிப் பாருங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **இன்னுயிர் அகன்றது உமைவிட்டு, பூமி**
**இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு.**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பனிரெண்டாம் நிலை

## எல்லாம் நிறைவேற்றிய இயேசு சிலுவையில் உயிர் விடுகின்றார்

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

இப்போது மதியம். பகல் மூன்று மணி வரை சூரியன் மறைய, இருள் பூமி முழுவதையும் சூழ்ந்து கொண்டது. கோவிலின் திரை இரண்டாகக் கிழிந்தது. அப்பொழுது, இயேசு: “தந்தையே, உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்” என்று பலத்த குரல் எழுப்பி தன் ஆவியைத் தந்தையிடம் கையளிக்கிறார்.

(சிறிது நேரம் மௌனமாக செபிக்கவும்.)



நீங்கள் எதையாவது சிறப்பாகச் செய்ய நினைத்து, இன்னும் சிறிது முயன்றிருந்தால் நீங்கள் விரும்பிய மாற்றத்தை செய்திருக்கலாம் என நினைத்ததுண்டா? ஒரு செயலைச் செய்ய உங்களது கடின முயற்சி இல்லாததால் ஏதேனும் தவறு ஏற்பட்டதுண்டா?

அப்படிப்பட்ட நேரத்தில் உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இயேசு உங்களை அன்பு செய்வதை உணருங்கள். பின் நீங்கள் தயாராக இருக்கும் போது, உங்கள் இதயத்தை இயேசுவின் இதயத்தைப் போலாக்க உதவி செய்யும்படி அவரிடம் மன்றாடுங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்:** ஆமென்.

**பாடல்:** **துயருற்றுத் துடித்தார் உளம்நொந்து அன்னை**
**உயிரற்ற உடலினை மடிசுமந்து,**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதிமூன்றாம் நிலை

## இயேசுவின் உடல் தன் தாயின் மடியில் கிடத்தப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

அரிமத்தியாவின் யோசேப்பு இயேசுவின் உடலை எடுத்து அடக்கம் செய்ய பிலாத்துவிடம் அனுமதி கேட்கிறார். பிலாத்து அவருக்கு அனுமதி கொடுக்க, அவர் சிலுவையிலிருந்து அவரது உடலை இறக்குகிறார். அன்னை மரியா உயிரற்ற தன் மகன் இயேசுவின் உடலைத் தன் மடியில் வைத்து, “உன் ஆன்மாவை ஒரு வாள் ஊடுருவும்” என்ற சிமியோன் வார்த்தைகளை எண்ணிப் பார்க்கிறார்.



நீங்கள் அன்பு செய்த ஒருவர் இறந்ததுண்டா? அவரைப் பற்றி நினைக்கையில் உங்கள் இதயம் எப்படி இருக்கும்? உங்கள் இதயத்தை இயேசுவிடம் காட்டி, இறந்தவரைப் பற்றிய உங்கள் எண்ணங்களை இயேசுவிடம் பகிருங்கள். உங்கள் இதயத்தை இயேசு நன்கு அறிந்திருக்கிறார். உங்கள் இதயத்தை இயேசுவிடம் காட்டும் போது அவர் உங்களை அன்பு செய்வதை உணருங்கள். உங்கள் இதயத்தை அவருடைய இதயத்தைப் போல மாற்ற அவரால் மட்டுமே உதவ முடியும்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

**பாடல்:** **ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு, நீர்**
**அடங்கிய கல்லறை உமதன்று,**
**எனக்காக இறைவா எனக்காக!**
**இடர்பட வந்தீர் எனக்காக!**

# பதினான்காம் நிலை

## இயேசுவின் திருவுடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது

முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.**

## முதல்வர்:

யோசேப்பும் நிக்கோதேமுவும் இயேசுவின் உடலை யூத முறைப்படிச் சுத்தமாகக் கழுவி, நறுமணத் தைலம் பூசி, புதுத் துணியால் போர்த்தி, கல்லறையில் அடக்கம் செய்தனர். பின்னர், யாரும் கல்லறையினுள் நுழையாதபடி அதன் வாயிலில் அவர்கள் ஒரு பெரிய கல் ஒன்றை வைத்தனர்.



நீங்கள் யாருக்காவது மிக வருத்தத்துடன் பிரியாவிடை கொடுத்துண்டா? அது நெடுநாள் பிரிவாகவோ சிறிய பிரிவாகவோ இருக்கலாம். ஒருவேளை அது உங்கள் பிரியமானவரின் இறப்பாகக் கூட இருக்கலாம்.

அப்படிப்பட்ட நேரத்தில் உங்கள் இதயத்தின் நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இயேசு உங்களை அன்பு செய்வதையும், அவர் உங்களோடு இருப்பதையும், துயரமான உங்கள் இதயத்தினுள் அவர் இருப்பதையும் உருவகப்படுத்திப் பாருங்கள்.

முதல்வர்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

**அனைவரும்: எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.**

முதல்வர்: மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்: ஆமென்.**

# இறுதிச் செபம்

## முதல்வர்:

கிறிஸ்து இல்லாமல் இவ்வுலகம் இருளில் மூழ்கி விடுகிறது. இயேசு இறந்தபோது, எல்லாம் நம்பிக்கையற்றதாகத் தெரிந்தது. ஆனால் இது முடிவல்ல என்று நமக்குத் தெரியும். இயேசு இறந்த மூன்றாம் நாள் மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்று நமக்குத் தெரியும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஒளி இறப்பையும் தாண்டி நமக்குப் புத்துயிர் அளிக்கிறது.

**செபிப்போமாக!**

**எங்கள் தந்தையாகிய இறைவா, உயிருள்ள நிலைவாழ்வில் உம்மோடு ஒன்றித்திருக்க, உமது இறப்பிலும் நாங்கள் ஒன்றித்திருக்கிறோம். ஆண்டவரே, பாவ வழிகளிலிருந்து விலகி உமது பரிசுத்த வழிகளில் வளர எங்களுக்குக் கற்றுத் தாரும். ஆமென்.**

முதல்வர்: திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

**ஒரு பரலோக மந்திரம், அருள் நிறைந்த மந்திரம் மற்றும் திருத்துவ செபம்.**

முதல்வர்: இயேசு கிறிஸ்துநாதருடைய திருவாக்குத்-தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரமா-யிருக்கத்தக்கதாக, புனித வியாகுல மாதாவே!

**அனைவரும்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

# திருச்சிலுவைப் பாதை பாடல்கள்



## 1. சிலுவை நாதர் இயேசுவின்

**சிலுவை நாதர் இயேசுவின்**
**பேரொளி வீசிடும் தூய கண்கள்**
**என்னை நோக்கி பார்க்கின்றன**
**தம் காயங்களையும் பார்க்கின்றன -2**

1. என் கையால் பாவங்கள் செய்திட்டால்
தன் கையின் காயங்கள் பார்க்கின்றாரே
தீய வழியில் என் கால்கள் சென்றால்
தன் காலின் காயங்கள் பார்க்கின்றாரே - 2

2. தீட்டுள்ள எண்ணம் என் இதயம் கொண்டால்
ஈட்டி பாய்ந்த நெஞ்சை நோக்குகின்றார்
வீண் பெருமை என்னில் இடம் பெற்றால்
முள்முடி பார்த்திட ஏங்குகின்றார் - 2

3. அவர் இரத்தம் என் பாவம் கழுவிடும்
அவர் கண்ணீர் என்னை மெருகேற்றிடும்
கலங்கரை விளக்காக ஒளிவீசுவேன்
கலங்குவோரை அவர் மந்தை சேர்ப்பேன் - 2

4. திருந்திடா பாவிக்காய் அழுகின்றார்
வருந்திடா பிள்ளைக்காய் கலங்குகின்றார்
தம் கண்ணீர் காயத்தில் விழுந்திட
கண்ணீரும் இரத்தமும் சிந்துகின்றார் - 2

## 2. வியாகுல மாமரியே

**வியாகுல மாமரியே**
**தியாகத்தின் மாதாவே**
**சிலுவை அடியினிலே**
**சிந்தை நொந்தழுதாயோ - 2**

1. பன்னிரு வயதில் ஆலயத்தில் - அன்று
அறிஞர்கள் புகழ்ந்தவரை - 2
கரங்களை விரித்தே கள்வனைப் போல் - 2
கழு மரத்தினில் கண்டதனால்

2. திருமணப் பந்தியில் கனி இரசமே - அன்று
அருளிய திருமகனே - 2
குருதி சிந்தி கடற்காடியினை - 2
இன்று பருகிடக் கண்டதனால்

3. கண்ணீரை சிந்திய மனிதருக்கு
அருள் பண்ணிய திருமகனே - 2
மண்ணவர்க்காக தன்னுயிரை - 2
இன்று மாய்த்திடக் கண்டதனால்

## 3. கல்வாரிக்குப் போகலாம் வாரீர்

**கல்வாரிக்குப் போகலாம் வாரீர் - என்**
**காருண்ய இயேசுவின் காட்சியைப் பார்த்திட**

1. பொல்லார் பகைவர் கூட்டம் எல்லாம் திரண்டு அங்கே
நல்லாயன் மீட்பர்தனை கொல்லும் வாதை காண - 2

2. சிவப்பங்கி தரித்தோராய் சிரசில் முள்முடி பூண்டு
தவத்தில் உயர்ந்த ஞானன் தவிக்கும் முகத்தைப் பார்க்க - 2

3. பாரச் சிலுவை தனை தோளில் சுமந்து மிகக்
கொடுமையாய் இருக்கின்ற கொடூரத்தைப் பார்த்திட - 2

## 4. திருப்பாதம் நம்பி வந்தேன்

**திருப்பாதம் நம்பி வந்தேன்**
**கிருபை நிறை இயேசுவே**
**தமதன்பை கண்டடைந்தேன்**
**தேவ சமூகத்திலே - 2**

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே - 2
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன் - 2

2. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும் - 2
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே - 2

## 5. தயை செய்வாய் நாதா

**தயை செய்வாய் நாதா, என் பாவங்களை நீக்கி**

1. அன்புடனே ஏழை என்மேல் இரக்கம் வையும்
அனுதபித்து என் பிழையை அகற்றுமையா
பாவமதை நீக்கி என்னை பனி போலாக்கும்
தோஷமெல்லாம் தீர்த்து என்னைத் தூய்மையாக்கும்

2. என் குற்றம் நானறிவேன் வெள்ளிடைமலை போல்
தீவினையை மறவாதென் மனது என்றும் - உம்
புனிதத்தைப் போக்கி நான் பாவியானேன் நீர்
தீமையென்று கருதுவதைத் துணிந்து செய்தேன்

3. உள்ளத்தில் உண்மையை நீர் விரும்புகின்றீர் - என்
ஆத்துமத்தின் அந்தரத்தில் அறிவையூட்டும்
என் பாவம் தீர்ப்பாயின் தூய்மையாவேன்
பனிவெண்மைக்கு உயர்வாக புனிதமாவேன்

## 6. உம் இரத்தத்தால் என்னைக் கழுவும்

**உம் இரத்தத்தால் என்னைக் கழுவும் - 2**

1. உலகின் பாவம் போக்கும் இயேசுவே - 2
2. மனிதனாய் மண்ணில் பிறந்த இயேசுவே -2
3. வியர்வையாய் திரு இரத்தம் சிந்திய இயேசுவே - 2
4. முள்முடி தலையில் தாங்கிய இயேசுவே - 2
5. என் பாவ சிலுவையை சுமந்த இயேசுவே - 2
6. எனக்காக சிலுவையில் அறையுண்ட இயேசுவே - 2

## 7. எனது சனமே நான் உனக்கு

**எனது சனமே நான் உனக்கு**
**என்ன தீங்கு செய்தேன் சொல்**
**எதிலே உனக்கு துயர் தந்தேன்?**
**எனக்குப் பதில் நீ கூறிடுவாய்**

1. எகிப்து நாட்டில் நின்றுன்னை
மீட்டுக்கொண்டு வந்தேனே
அதனாலோ உன் மீட்பருக்கு
சிலுவை மரத்தை நீ தந்தாய்?

2. நாற்பது ஆண்டுகள் நான் உன்னை
பாலைவனத்தில் வழிநடத்தி
உனக்கு மன்னா உணவூட்டி
வளமிகு நாட்டினுள் வரச் செய்தேன்

3. நான் உனக்காக எகிப்தியரை
அவர் தம் தலைச்சன் பிள்ளைகளை
வதைத்து ஒழித்தேன் நீ என்னை
கசையால் வதைத்துக் கையளித்தாய்

4. பார்வோனை செங்கடலிலாழ்த்தி
எகிப்தில் நின்றுன்னை விடுவித்தேன்
நீயோ என்னைத் தலைமையாம்
குருக்களிடத்தில் கையளித்தாய்

5. நானே உனக்கு முன்பாக
கடலைத் திறந்து வழி செய்தேன்
நீயோ எனது விலாவை ஓர்
ஈட்டியினாலே திறந்தாயே

6. மேகத்தூணில் வழிகாட்டி
உனக்கு முன்னே யான் சென்றேன்
நீயோ பிலாத்தின் நீதிமன்றம்
என்னை இழுத்துச் சென்றாயே

## 8. என்னை நேசிக்கின்றாயா

**என்னை நேசிக்கின்றாயா - 2**
**கல்வாரிக் காட்சியைக் கண்டபின்னும்**
**நேசியாமல் இருப்பாயா**

1. வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால் - 2
தேடி மீட்டிட பிதா என்னை அனுப்பியதால்
ஓடி வந்தேன் மானிடனாய்

2. பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாவி உன்னை அழைக்கின்றேன் வா - 2
உன் பாவம் யாவும் சுமப்பேன் நான்
பாதம் தன்னில் இளைப்பாற வா

3. பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப் பார்
பரிகாரச் சின்னமாய் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய்

உம்மை நேசிக்கின்றேன் நான் - 2
கல்வாரிக் காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனா.

## 9. அன்பே கல்வாரி அன்பே

**அன்பே கல்வாரி அன்பே**
**உம்மைப் பார்க்கையிலே**
**என் உள்ளம் உடையுதப்பா**

1. தாகம் தாகம் என்றீர்
எனக்காய் ஏங்கி நின்றீர்
பாவங்கள் சுமந்தீர்
பரிகாரப் பலியானீர்

2. காயங்கள் பார்க்கின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன்
தூய திரு இரத்தமே
துடிக்கும் தாயுள்ளமே

3. அணைக்கும் கரங்களிலே
ஆணிகளா சுவாமி
நினைத்துப் பார்க்கையிலே
நெஞ்சம் உருகுதையா

4. நெஞ்சிலே ஓர் ஊற்று
நதியாய் பாயுதையா
மனிதர்கள் மூழ்கனுமே
மறு ரூபம் ஆகனுமே

## 10. யாரிடம் செல்வோம் இறைவா

**யாரிடம் செல்வோம் இறைவா**
**வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்**
**உம்மிடம் அன்றோ உள்ளன**
**யாரிடம் செல்வோம் இறைவா**
**இறைவா.. இறைவா - 2**

1. அலைமோதும் உலகினிலே
ஆறுதல் நீ தரவேண்டும்
அண்டி வந்தோம் அடைக்கலம் நீ
ஆதரித்தே அரவணைப்பாய் - 2

2. மனதினிலே போராட்டம்
மனிதனையே வாட்டுதையா
குணமதிலே மாறாட்டம்
குவலயம் தான் இணைவதெப்போ - 2

3. வேரறுந்த மரங்களிலே
விளைந்திருக்கும் மலர்களைப் போல்
உலகிருக்கும் நிலை கண்டு
உனது மனம் இரங்காதோ - 2

## 11. ஆணி கொண்ட உம் காயங்களை

**ஆணி கொண்ட உம் காயங்களை**
**அன்புடன் முத்தி செய்கின்றேன்**
**பாவத்தால் உம்மைக் கொன்றேனே - 2**
**ஆயனே என்னை மன்னியும் - 2**

1. வலது கரத்தின் காயமே
அழகு நிறைந்த இரத்தினமே
இடது கரத்தின் காயமே
கடவுளின் திரு அன்புருவே
அன்புடன் முத்தி செய்கின்றேன்.

2 வலது பாதக் காயமே
பலன் மிகத் தரும் நற்கனியே
இடது பாதக் காயமே
திடன் மிகத் தரும் தேனமுதே
அன்புடன் முத்தி செய்கின்றேன்.

3. திரு விலாவின் காயமே
அருள் சொரிந்திடும் ஆலயமே
திரு விலாவின் காயமே
அருள் சொரிந்திடும் ஆலயமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்.

## 12. இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ

**இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ**
**மறந்திடுவாயோ மனிதப் பண்பிருந்தால் - இயேசுவின்**
**மறந்திடாதிருக்க நீ சிலுவையிலே அவர் - 2**
**மரித்துத் தொங்கிடும் காட்சி மனதில் நில்லாதோ**

1. அளவில்லா அன்பு அதிசய அன்பு
ஆழமகலம் நீளம் எல்லை காணா அன்பு
களங்கமில்லா அன்பு கருணை சேர் அன்பு - 2
கல்வாரி மலை கண்ணீர் சொல்லிடும் அன்பு

2. அலைகடலை விட பரந்த பேரன்பு
அன்னைமார் அன்பெல்லாம் திரையிடும் அன்பு
மலைபோல் எழுந்தென்னை வளைத்திடுமன்பு - 2
சிலையெனப் பிரமையில் நிறுத்திடுமன்பு

3. எனக்காக மனுவுரு தரித்த நல்லன்பு
எனக்காகத் தன்னையே உணவாக்கும் அன்பு
எனக்காக பாடுகள் ஏற்ற பேரன்பு - 2
எனக்காக உயிரையே தந்த தேவன்பு

## 13. பாடுகள் நீர் பட்டபோது

பாடுகள் நீர் பட்டபோது
பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடிப் பாவம் தீர்த்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே

**கெட்டுப் போனோம் பாவியானோம்**
**கிருபை செய் நாதனே**
**மட்டிலாக் கருணை என் மேல்**
**வைத்திரங்கும் இயேசுவே**

1. துஷ்ட யூதர் தூணினோடு
தூய கைகள் கட்டியே
கஷ்டமாய் அடித்தபோது
காய்ந்த செந்நீர் என் துணை - **கெட்டுப் போனோம்**

2. சென்னிமேற் கொடிய யூதர்
சேர்த்து வைத்த முள்முடி
தன்னால் வடிந்த இரத்தத்தால்
சர்வ பாவம் நீங்குமே - **கெட்டுப் போனோம்**

3. ஐந்து காயத்தால் வடிந்த
அரிய இரத்தத்தினால்
மிஞ்சும் எங்கள் பாவம் தீர்க்க
வேண்டுகிறோம் இயேசுவே - **கெட்டுப் போனோம்**

## 14. பாரீர் கெத்சமனே பூங்காவில்

**பாரீர் கெத்சமனே பூங்காவில் என் நேசரையே**
**பாவி எனக்காய் வேண்டுதல் செய்திடும்**
**சத்தம் தொனித்திடுதே**

1. தேகமெல்லாம் வருந்தி சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏக சுதன் படும்
பாடுகள் எனக்காக

2. அப்பா இப்பாத்திரமே நீக்கும் நின் சித்தமானால்
எப்படியும் உம் சித்தம் செய்ய என்னைத் தத்தம்
செய்தேன் என்றாரே

3. இரத்தத்தின் வேர்வையாலே மெத்தவுமே நனைந்தே
இம்மானுவேலன் உள்ளம் உருகியே
வேண்டுதல் செய்தனரே

4. மும்முறை தரை மீதே தாங்கொண்ணா வேதனையால்
முன்னவர் தாமே வீழ்ந்து செபித்தாரே
பாதகர் மீட்புறவே

5. அன்பின் அருள்மொழியால் ஆறுதல் அளிப்பவர்
துன்ப வேளையில் தேற்றுவாரின்றியே
நொந்து அலறுகின்றார்

## 15. எங்கு போகிறீர் இயேசு தெய்வமே

**எங்கு போகிறீர் இயேசு தெய்வமே**
**எனக்காய் சிலுவையை சுமக்கும் தெய்வமே**

1. பாரச்சிலுவையோ என் பாவச்சிலுவையோ
நீர் சுமந்தது என் பாவச்சிலுவையோ

**உம் உள்ளம் உடைந்ததோ**
**என் பாவச் சேற்றினால் - 2 - எங்கு போகிறீர்**

2. தீய சிந்தனை நான் நினைத்ததால்
உம் சிரசில் முள்முடி நான் சூட்டினேன்
**- உம் உள்ளம்**

3. பெருமை கோபத்தால் உம் கன்னம் அறைந்தேனே
என் பொறாமை எரிச்சலால் உம் விலாவைக் குத்தினேனே
**- உம் உள்ளம்**

4. கசையால் அடித்தது என் காம உணர்ச்சியால்
காரித்துப்பியது என் பகைமை உணர்ச்சியால்
**- உம் உள்ளம்**

5. அசுத்தப் பேச்சுகள் நான் பேசி மகிழ்ந்ததால்
கசப்புக் காடியை நான் குடிக்கக் கொடுத்தேனே
**- உம் உள்ளம்**

## 16. கருணை தெய்வமே கண் பாரும்

**கருணை தெய்வமே கண் பாரும்**
**எங்கள் பாவங்களை நீர் பொறுத்தருளும்**

1. உடலும் மனமும் அறிவும் ஒன்று சேர்ந்து
உம்மை எதிர்த்ததையா - 2
தேவ வாக்கின் வழியை மனம்
பன்முறை அறிந்தும் வெறுத்ததையா
பாவச்சேற்றை வாழ்வில் எம் வாழ்வே
கொண்டு நிறைத்ததையா

2. பாதை தெளிவுறத் தெரிந்தும் அதைப்
பார்த்து நாங்கள் நடக்கவில்லை - 2
உண்மை விளக்கு எரிந்தும் அதன்
ஒளியின் அருகே வாழவில்லை
இறைவன் அன்பு அழைத்தும் அதை
உணர்ந்த பின்னும் திருந்தவில்லை

## 17. நெஞ்சத்திலே தூய்மையுண்டோ

**நெஞ்சத்திலே தூய்மையுண்டோ**
**இயேசு வருகின்றார்**
**நொறுங்குண்ட நெஞ்சத்தையே**
**இயேசு அழைக்கிறார் - 2**

1. வருந்தி சுமக்கும் பாவம் நம்மைக்
கொடிய இருளில் சேர்க்கும் - 2
செய்த பாவம் இனி போதும்
அவர் பாதம் வந்து சேரும் - 2

2. குருதி சிந்தும் நெஞ்சம் நம்மைக்
கூர்ந்து நோக்கும் கண்கள் - 2
அங்கு பாரும் செந்நீர் வெள்ளம்
அவர் பாதம் வந்து சேரும் - 2

## 18. சுமை சுமந்து சோர்ந்திருப்போரே

**சுமை சுமந்து சோர்ந்திருப்போரே**
**வாருங்கள் நம் ஆண்டவர் அழைக்கின்றார்**
**இளைப்பாற்றி கொடுக்கின்றார்**

1. இரு கரம் விரித்தவராய் இதயத்தைத் திறந்தவராய்
இறைவன் இருக்கின்றார் இனியும் தாமதமேன்

2 வரும் வழி பார்த்தவராய் வரம் மழை பொழிந்தவராய்
வந்தவர் இருக்கின்றார் விரைந்திடத் தாமதமேன்

3. துயரினில் ஆறுதலாய் நோயினில் மருத்துவராய்
அடிமையின் விடுதலையாய் ஆண்டவர் இருக்கின்றார்

## 19. என் பிழையெல்லாம் பொறுத்தருள்வாய்

**என் பிழையெல்லாம் பொறுத்தருள்வாய்**

1. செந்நீர் வியர்வை சொரிந்தவரே
2. புண்படக் கசையால் துடித்தவரே
3. முள்முடி சூடிய மன்னவரே
4. துன்பச் சிலுவை சுமந்தவரே
5. தன்னுயிர் தியாகம் புரிந்தவரே
6. மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தவரே
7. நற்கருணை  வாழ் நல்லவரே

## 20. இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்

**இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்**
**திரும்பிப் பார்க்க மாட்டேன் - 2**
**சிலுவையே முன்னால் உலகமே பின்னால் - 2**
**இயேசு சிந்திய குருதியினாலே விடுதலை அடைந்தேனே**

1. அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை
அடியேன் உள்ளத்திலே
ஆண்டவர் இயேசு அடைக்கலப் பாறை
ஆதலின் குறையில்லை - 2
ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால் - 2
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே
விடுதலை அடைந்தேனே

2. தாயும் அவரே தந்தையும் அவரே
தரணியில் நமக்கெல்லாம்
சேயர்கள் நம்மை செவ்வழி நடத்தும்
ஆயன் அவரன்றோ - 2
ஆயனே முன்னால் அலகையே பின்னால் - 2
அழைக்கும் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே

**MY SHEEP LISTEN TO MY VOICE;**

**என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன.**




**ஆண்டவரே பேசும்.**
**உம் அடியான் கேட்கிறேன்.**

**இறைவார்த்தையை எளிய முறையில் உங்கள் வீட்டிற்கும் பணியகத்திற்கும் பயணத்தின் போதும் கொண்டு வருகிறோம். எங்களது இணையத்தையோ செய்லியையோ பயன்படுத்துங்கள்.**

தமிழில் இறைவார்த்தைக்கு செவிமடுக்க
தமிழ் இணையதளம்

**www.iraivarthai.org**

தமிழ் செய்லி பதிவிறக்கம் செய்ய
இறைவார்த்தை என்று தேடவும்

For Tamil Daily Readings App search for Iraivaarthai

Get Iraivaarthai on **Google Play**

Get Iraivaarthai on **App Store**

**தமிழ் செபங்கள் செய்லியை பதிவிறக்கம் செய்ய 'இறைப்புத்தகம்' என்று தேடவும்.**

**தமிழ் திருப்பலிப் பாடல்களுக்கு**
தமிழ் திருப்பலிப் பாடல்கள் செய்லியைப் பதிவிறக்கம் செய்ய "இறை கீதங்கள்" என்று தேடவும்.

இணையதளம்: **www.iraivarthai.org/hymns**

தமிழில் அன்றாட புனிதர்களின் வரலாறு படிக்க இணையதளம்
For Daily Saints in Tamil
www.dailysaints.org

Get the Word of God via **Viber** or **WhatsApp** daily...
**Daily Readings 'On the Go'**


**AVAILABLE in Sinhala-Tamil-English**
**Send a message to**
**+ 65 9686 3625**

சமூக வலையதளங்களை தொடர்பு கொள்ள SUPUWATHA என்று தேடுங்கள்

To access our Social Media please search for SUPUWATHA




*Rethinam Rebecca*



*Antony Joseph Abigail Shreya*




***Nishitha Moses***



***Jonack Samuel***

